# திருக்கோயில்

ஆகஸ்ட் 1975 (96) ரூ. 1



# அருள்திரு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

## பழனி

பழனி ஞானதண்டாயுதபாணியைப் பணிந்திட வாரீர் !
அழகான திருமுருகன் அருள் பெறவே திரண்டு வாரீர் !
செந்தேனும் பாலும் மணக்கும் சேயோனை வழிபட வாரீர் !
சந்தன விபூதி மணக்கும் திருமேனி கண்டு மகிழ வாரீர் !

முடிகாணிக்கை தரத் தனியிடம் !
தங்குவதற்கேற்ற வசதிகள் !
முதியவரும் முடியாதோரும் முருகன் அருகே செல்ல இழுவை ரயில் வசதி !
பொங்கியெழும் பேரழகினைத் தாங்கிவரும் தங்கரதம் காண வசதிகள்!
தங்கமயில் மீது பவனி வரும் முருகனுக்கு அர்ச்சனை, அபிஷேகத்தின் விசேஷ கவனம்.

1. அருள்மிகு பழனியாண்டவர் கலைக்கல்லூரி
2. அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக்கல்லூரி
3. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி
4. அருள்மிகு பழனியாண்டவர் செந்தமிழ்க் கல்லூரி
5. பழனியாண்டவர் செந்தமிழ் கல்லூரி
6. செவிடர் பள்ளி
7. நாதசுரக் கல்லூரி
8. வேத ஆகமப்பாடசாலை
9. அன்பு இல்லம்
10. முதியோர் இல்லம்.
11. குழந்தைகள் காப்பகம்.
12. மருத்துவமனை
13. சித்த வைத்தியசாலை
14. நடமாடும் வைத்தியசாலை.

பழனித்திருமலையில் நாளும் பெருகிவரும் பக்தர்கட்குப் போதிய வசதிகள் செய்து தருவதற்காக ஒருகோடியே ஐந்து லட்ச ரூபாய் செலவில் மாபெரும் திருப்பணி திட்டம் செயல்பட உள்ளது. இந்த ஆலயத்திருப்பணிகளுக்குத் தாங்கள் கொடுக்கும் நன் கொடைகள் மத்திய அரசின் வருமானவரி இலாகாவில் வரி விலக்குக்கு உட்பட்டது. எனவே இம்மாபெரும் திருப்பணித் திட்டத்தின் வெற்றிக்குத் தங்களால் இயன்ற அளவு நன்கொடை வழங்கியருளி அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமியின் பேரருளுக்குப் பாத்திரராகி நல்வாழ்வு பெறுமாறு அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.

**திரு. என். நாச்சிமுத்து,** எம். எல். ஏ.,
**திரு. புலவர். சி. பழனிச்சாமி,** எம். எல். ஏ.,
**திரு. பச்சையப்ப கவுண்டர்,** ஏ.

அறங்காவலர்கள்.

**இரா. அர்ச்சுனன்,** பி.ஏ.,
துணை ஆணையர், நிர்வாக அதிகாரி.

**முகப்பு :**

திருப்பரங்குன்றம் திருமுருகன் திருக்கோயிலில் நிகழ்ந்த விசாக விழாவில், பக்தர்கள் பலர் கலந்து கொண்டு மகிழும் காட்சி.

ஒளி வண்ணப்படம் உதவியவர் :
திரு. கே. இராமச்சந்திரன், பி. காம்., மதுரை.

# திருக்கோயில்

மாலை 17 | இராக்கத, ஆடி — ஆகஸ்ட், 1975 | மணி 11

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

* 'திருக்கோயில்' திங்கள் இதழின் 'சந்தாதாரர்கள்' ஆகச் சேர விருப்பமுள்ளவர்கள் "திரு. ஆணையர், அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034" என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

* அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

* இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

* எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

**ஆண்டுச் சந்தா ரூ. 12/- தனி இதழ் ரூ. 1/-**

## பொருளடக்கம்

1. புது ஒளி பரப்புவோம்
—முதல்வர் டாக்டர் கலைஞர்
2. கந்த புராணம்
—திருமுருக கிருபானந்தவாரியார்
3. அருணகிரிநாதர் தீட்டிய அற்புதச் சொல்லோவியம்!
—ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.,
4. திருக்குறட் செங்கோல்
—தமிழ்நம்பி
5. திருக்குறளின் சொற்பொருட் சிறப்பு!
—தமிழ்ச்செல்வன்
6. நான் எங்கே போகிறேன்?
—கே. எஸ் ஜெகன்னாதன்
7. திருவாறன்விளைத் திருக்குறளப்பன்
—ந. சுப்பு ரெட்டியார், எம்.ஏ.,பிஎச்.டி.,
8. இந்தியத் தத்துவச் சிறப்பு!
—விவேகானந்தன்
9. நாராயணாய என்னும் நாமம்!
—தொண்டர் அடிப்பொடி
10. திருவகீந்திரபுரம் திருக்கோயில்
—கே. எஸ். நரசிம்மன், பி.ஏ.,பி.எல்.,ஐ.ஏ.எஸ்.,
11. உடலும் உயிரும்
—நீதிபதி எஸ். மகராஜன்
12. அனந்தபுரத்து அண்ணலார்
—ந. சுப்பு ரெட்டியார், எம்.ஏ.,பிஎச்.டி.,
13. பரியங்க யோகம்
—கு. வரதராசப்பிள்ளை, பி.ஏ.,
14. ஓங்காரத்தில் ஒளிர்கின்ற ஒருவன்
—கலைமாமணி நாரண. துரைக்கண்ணன்
15. மந்தரையின் குற்றம்
—ம. அ. முருகேசன், பி.ஏ.,பி.எல்.,
16. கம்பநாடன் கவிதை
—தமிழ்விரகன்.

ஆசிரியர்: ந. ரா. முருகவேள் M.A., M.O.L.
துணை ஆசிரியர்: கே. எஸ். ஜெகன்னாதன்

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

# புதுஒளி பரப்புவோம்!

முதல்வர், டாக்டர் கலைஞர்

இந்நாள் தமிழ்நாட்டின் இலக்கிய வட்டம் மறக்கவொண்ணு நாளாகும். கவிஞர்களாகிய நீங்கள் உங்களது இம்மாநாட்டுக்குத் திருவள்ளுவர் வாழ்ந்த இச் சென்னை மாநகரைத் தேர்ந்தெடுத்தது குறித்து நான் பெருமைப்படுகிறேன். இன்று இராஜாஜி மண்டபம் பாடும் பறவைகளின் கூடாகவே மாறிவிட்டது.

''கூட்டத்தை விரட்ட அங்கே ஒரு கவிஞன் வந்தால் போதும்'' என்று விளையாட்டாகச் சொல்லுவார்கள். ஆனுல் எப்படி மேற்கும் கிழக்கும் வெவ்வேருனதோ அது போலத் தமிழ் நாட்டு நிலைமையும் வேருகும். இங்கே தமிழ் நாட்டில் கவியரங்கம் என்ருலே எங்கள் மரபுக் கொப்ப அங்கே விழாக்கோலம் காணலாம். அது அரசியலோ, சமயமோ, மொழியோ, இலக்கியமோ எதைப் பற்றியதானுலும், அங்கே ஒரு கவிஞர் அணி, எளிதில் வந்து சேருவதை நாம் காணலாம். அண்டை நாடுகளிலிருந்து வந்து உள்ள ஆசியாவின் கலைஞர்களையும் இந்தியாவின் பிறமொழி மாநிலக் கவிஞர்களையும் இங்கே காணுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுக்கெல்லாம் நல்வரவு கூறுகிறேன். சென்னையில் நீங்கள் தங்கியுள்ள நாட்கள் இனியவையாக, பயனுற்றவையாக இருக்க எனது விழைவைத் தெரிவிக்கிறேன்.

கவிஞர் இனத்தில் ஒரு கவிஞனுக என்னையும் ஏற்றுக் கொண்டதற்காக உயர்நீதி மன்ற முன்னுள் நீதிபதி மகராசனுக்கும் கிருஷ்ணு சீனுவாசனுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கிருஷ்ணு சீனிவாசன் என்னிடத்தில் எப்போதும் அன்புடன் பழகுபவர். அந்த அன்பின் காரணமாகவே சில ஆண்டுகளுக்கு முன், அவர் அமெரிக்காவில் இருந்தபோது ''டலாஸ் கார்னிங் நியூஸ்'' என்ற நாளேட்டிற்கு அளித்த பேட்டியில், ''நான் வாழுகின்ற தமிழகத்தில் எங்கள் முதலமைச்சரே ஒரு கவிஞர்'' என்றும், ''இன்றைய உலகில் தலைமை தாங்கிச் செல்ல உணர்ச்சியும் சிந்தையும் உள்ள ஒரு கவிஞனே தேவை'' என்றும் குறிப்பிட்டார். அவர், கவிஞர்களின் இந்த மாநாட்டைக் கூட்டுவதில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டிருக்கிருர்.

கவிஞன் என்பவன் எங்கோ உயர் மாடத்தில் வீற்றிருப்பவன் என்று எண்ணப்படுகிறது. எதார்த்த நிலைக்கு வராதவர்கள் என்றும் பொதுவாகக் கருதப்படுகின்றது. அது உண்மையல்ல. இலட்சிய உலகைப் பற்றிக் கனவு காண்பவர்களாக மட்டும் கவிஞர்கள் நின்றுவிடக் கூடாது. மக்கள் வாழ்வில் வளம்சேர்க்கஉழைத்திடும் இலட்சிய வீரர்களாவும் அவர்கள் ஆக வேண்டும்.

'கவிஞர்கள் மக்களின் அங்கீகரிக்கப்படாத சட்டமன்ற உறுப்பினர்கள்' என்ருன் ஷெல்லி. இந்த மாநாட்டின் அமைப்பாளர்களோ, உங்களையெல்லாம் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் தங்கச் செய்ததன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்களாகவே ஆக்கி விட்டார்கள்.

ஒரு கவிஞன் எப்போதும் உன்னதமான நோக்கத்தோடு பாடுபடுகிருன். கவிஞன், ''காலத்தின் மைந்தன்'. தன்னைச் சுற்றி நிகழ்வனவற்றைப் பார்த்துக் கொண்டு அவனுல் சும்மாயிருக்க முடியாது. கவிஞனே உணர்ச்சியின் பிம்பம் என்பதால் தன் எண்ணங்களையெல்லாம் கட்டுப்படுத்திக் கொண்டு அவன் கவி இயற்றுவதென்பது நடக்கக் கூடிய காரியமல்ல.

நண்பர்களே! இருபது வயதில் நான் கவிதை எழுதத் தொடங்கினேன். எனது முதல் கவிதை 'கவிதை அல்ல'. ஆம் அதுதான் அதற்கு நான் இட்ட தலைப்பு. அன்று முதல் நான், வசன கவிதை எழுதி வருகின்றேன்.

'மனித வாழ்வில் பொறுமை' பற்றி நான் எண்ணியபோது சொன்னேன்.

''பிறையொன்று பொறுத்திருந்து நிலவாகும்
பொறை கொண்டார் பொறுத்திருந்து நில மாள்வார்.
இரையொன்று வருமட்டும் காத்திருக்கும் கொக்கு
அதனைப் பொறை யென்று சொல்லாதீர்!
தரைமீது அப்பறவை கற்ற சூழ்ச்சி.....
இகழ்வார்ப் பொறுத்தல் தலையாய்க் கொண்டோன்
அகழ்வார்த் தாங்கும் நிலமென நவின்ருர்—
இகழ்வார்க் கிருப்பது தலையும் அல்ல.
ஏசிக் கிறுக்குதல் கலையும் அல்ல
புகழ்வார் பின்னே போதலும் தீது
இகழ்வார் எதிர்த்தல் அதனினும் தீது.''

மாத்யூ ஆர்னல்டு என்ற மாபெரும் விமர்சகர் ''இங்கிலாந்து மகத்தான நாடாகும். அதற்குக் காரணம் கவிதை'' என்று ஒரு முறை

குறிப்பிட்டது என் நினைவிற்கு வருகிறது. ஆனல் அவரே ஆசியாவைப் பற்றியும் 'ஆசியச் சுடர்' என்ற தன்னுடைய தலையாய நூலுக்குப் புத்தரைத் தலைமகனுகக் கொண்டு, ''நினைவில் எட்டா நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே ஆசியா கவிதைகளின் தொட்டில் ஆக விளங்கி வருகிறது'' என்று எழுதியிருந்தார்.

எங்கள் தமிழகத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். வரலாற்றுக் காலந்தொட்டுக் கவிதை இங்குச் செழித்து வளர்ந்துள்ளது. சங்க காலத்துச் சங்கப் புலவர்கள்—ஔவையார் பெண் கவிஞர்களிலேயே முதலானவர்—எங்கள் திருவள்ளுவர் தன்னுடைய 1330 குறட்பாக்களில் காலத்தின் அறிவையெல்லாம் வடித்துத் தந்தார். அவரது குறட்பாக்கள் உலகில் எல்லா முக்கிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

காலத்தை வென்ற கவிஞர் பலர் எங்கள் மண்ணில் தோன்றியுள்ளனர். இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் விடுதலை இயக்கம் விடுதலை வேட்கையை—சுதந்திரக் கனலைச் சுடர்விடச் செய்தது. அந்நேரத்தில் எங்களிடையே வாழ்ந்தவர் சுப்பிரமணியபாரதி. சுதந்திர இயக்கத்தின் சேதியைத் திக்கெட்டும் பரவச் செய்தான். மூலை முடுக்கெல்லாம் ஒலிக்கச் செய்தான். அவனது பாட்டைப் பாடிய படி ஆயிரமாயிரம் பேர் சிறைக்கோட்டம் புகுந்தனர்.

அவருக்குப் பின் பாரதிதாசன் தனது புரட்சிக் கருத்துக்களால் தமிழகத்தில் புரட்சியைத் தோற்றுவித்தார். எங்கள் சிந்தையில் புதிய இரத்தத்தைப் பாய்ச்சினர். அவர் புதுமை விரும்பியாகத் திகழ்ந்தார். சமுதாயத்தில் புரையோடிப் போன பழைய மூடப் பழக்க வழக்கங்களை, தீண்டாமையை அவர் சாடினர்.

இன்றையக் கவிஞன் உறுதி படைத்தவனுக இருக்கிருன். கவிஞனுகப் பிறப்பெடுக்கும் போதே அவன் அரசியலைச் சீர்படுத்த வேண்டுமென்கிற பெரு விருப்பத்தோடு பிறப்பெடுக்கிருன். தன் நாட்டைப் பற்றி, தன் மூதாதையரைப் பற்றி, தன் மொழியைப் பற்றி, தன் இல்க்கியத்தைப் பற்றி, தன் பண்பாடு, கலை, கலாசாரம், பாரம்பரியம், புகழ் இவைகளைப் பற்றி அவன் பெருமைப்படுகின்றுன். புகழ் என்ற தலைப்பில் நான் எழுதிய கவிதைகளிலிருந்து சில வரிகளை இங்கே கூற முற்படுகிறேன்.

''கடற்கரையில் தலைநீட்டும் நண்டுகளைக் கை நீட்டிப் பிடிக்க ஓட, உடன் அவைகள் போன இடம் தெரியாமல் பதுங்கிவிடும். புகழும் அதுதான்."

''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று தமிழில் சிறப்பாகச் சொல்லுவோம். உலகெலாம் ஒன்றே எனக்கூறும் இக்கவிதை வரிகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாடப்பட்டதாகும். இதுதான் நாங்கள் எல்லாருக்கும்—ஆசியாவுக்கும்—உலகம் அனைத்துக்கும் அளிக்கின்ற செய்தியாகும்.

ஆசியக் கவிஞர்களின் இம் மாநாடு கவிஞர்களிடையேகருத்துப்பரிமாற்றத்துக்கும் உலகின் முன்னேற்றத்துக்குத் தேவையான ஒற்றுமை உணர்வை ஏற்படுத்துவதற்கும் உதவுவதாகட்டும்.

உலகக் கவிஞர்களுக்கு மிகப் பெரும் பொறுப்பு உள்ளது. கவிஞர்களைக் காட்டிலும் உண்மை நிலையை எளிதில் உணரும் ஆற்றல் படைத்தவர் வேறு எவரும் இல்லை. வானிலை ஆய்வுக் கூடம் எதனைக் காட்டிலும் கால நிலை அறியும் தனி ஆற்றல் கவிஞனுக்கே உண்டு. மனித உணர்வுகளின் மேம்பாட்டுக்காகத்தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருப்பவனே கவிஞன். இதைக் கவிஞன் தன் எண்ணத்தில் பதித்திட வேண்டும். ஓர் இனத்தின் மொழியின் காவலனும் அவனே! ஒளி விளக்காக அமைய வேண்டும். எதார்த்த நிலையை உணர்ந்ததாகஅவனது செயல் இருக்க வேண்டும். எளிதில் எவருக்கும் புரியும்படி அவனது வர்ணனைகள் அமைய வேண்டும்.

'வாழ்வின் பாதை' என்ற எனது கவிதையொன்றிலிருந்து சில வரிகளை இங்கே கூறுகிறேன்.

''இனிக்கின்ற சர்க்கரையைக்
குழந்தைக் கூட்டம்
அள்ளி அள்ளி வாயில்
நிறைக்கின்ற காட்சிதனைக்
கண்டிருப்போம்.
சுவைக்கின்ற இன்பத்தை அள
வறிந்து நுகராமல்—மாடு
மிதிக்கின்ற சேறுபோல் ஆக்கு
கின்றுர் சிலபேர் தம்வாழ்வை!
வேண்டியமட்டும் உணவருந்தி
மகிழும் வேங்கை—பசி
தாண்டிய பின்னும் மான்களை
விழுங்கி மயங்கும் பாம்பு!.
காடகத்தில் இரு காட்சி கண்ட
பின்னும்—வாழ்வு
நாடகத்தில் நடிக்கின்றுேர்
கற்கவில்லை—என்ன செய்ய?
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
ஆனது ஆகட்டுமென்று
அறப்போர் புரிவோன் அரிமா வீரன்;
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
ஆனது ஆகட்டுமென்று
அயரா தின்பம் அனைத்தும் துய்ப்போன்.....
வீரனே அல்ல, விலங்கினும் கீழோன்.
தன் வீடு—தன் மனைவி—
தன் பிள்ளை—தன் சுற்றம்
என்றிருப்போன் நடத்துவதும் வாழ்வல்ல!
என்நாடு—எம் உரிமை—என்
மொழியாம்—அனைத்தும் காக்க
என்னுலே இயன்றதெல்லாம்
செய்திடுவேன் என்போன்தான்
பொதுமனிதன்.''

உலகக் கவிஞர்கள் எல்லாம் ஒன்றுபடுவோம்! இருளும் சோர்வும் அகலப் புது ஒளி பரப்புவோம்!

தமிழ் நாட்டில் கூடுகிற இம் மாநாடு உலகை விழிப்புறச் செய்யும்; சுடரொளி பரப்பும்! சிறு பொறி நெருப்பாகட்டும்! என்று கூறி இம்மாநாட்டினைத் தொடங்கி வைக்கின்றேன்.

**

# மதுரை ஆதீனம்
# இளவரசுப் பட்டம் நியமனம்!

சென்னையில், ''தமிழ்முரசு'' பத்திரிகையில் துணை ஆசிரியராகப் பணியாற்றி வந்த திரு. கு. அருணகிரிநாதன் அவர்கள், மதுரை ஆதீனம் திருஞான சம்பந்தர் மடாலயத்தின் இளவரசாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

30 வயது இளைஞரான திரு. அருணகிரிநாதன் அவர்கள், ஆங்கிலத்திலும், தமிழிலும் பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் மிக்கவர் ஆவார்.

அத்துடன், எல்லோரிடமும் மனம் விட்டுப் பழகும் பண்பும், எதிலும் ஒரு துடி துடிப்பும், நற்சிந்தனையும், சமயம், இலக்கியம், தத்துவம் ஆகிய துறைகளில் ஆழ்ந்த ஈடுபாடும் கொண்ட அவர், விடுதலைப் போராட்ட வீரர் திரு. ஆர். எம். குமாரசாமிப் பிள்ளையின் ஒரே புதல்வர் ஆவார்.

பத்திரிகை உலகில் திரு. அருணகிரிநாதன் அவர்களை, அறியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். திரு. அருணகிரிநாதன் அவர்களுக்கு, இப்போது இருக்கும் மதுரை ஆதீனம் 291-வது குருமகாசந்நிதானம் திருவருள் திரு. சோமசுந்தர ஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் நிர்வாண தீட்சையும், ஆச்சாரிய அபிஷேகமும் செய்வித்து, இளவரசுப் பட்டமளிப்பு விழாவைச் சிறப்புற நடத்தி வைத்தார்கள்.

இவ்விழாவைக் காண, மதுரை நகரிலிருந்தும், மற்றும் பல்வேறு ஊர்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு வந்திருந்தனர்.

தருமை ஆதீனம் 26-வது குருமகாசந்நிதானம் அவர்கள் சார்பில், இளவரசு சுவாமிகளுக்குப் பொன்னாடை போர்த்திக் கவுரவிக்கப்பட்டது. அதுபோலவே, குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம் ஆகியவற்றின் சார்பிலும் பிரதிநிதிகள் வந்திருந்து, இளவரசுக்குத் தக்க மரியாதை செய்து சிறப்பித்தனர்.

இளவரசுப் பட்டம் பெற்ற திரு. அருணகிரிநாதர் அவர்கள், திருவுளச் சீட்டு மூலம் திருவருள்திரு. அருணகிரிநாத ஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் என்ற திரு நாமம் சூட்டப் பெற்றார்கள். சுவாமிகள், இந்த ஆதீனத்தின் 292-வது பட்டம் ஆகிறார்கள்.

பட்டமளிப்பு விழாவை நடத்தி வைத்த பின்னர், ஆதீனத்தின் 291,வது குருமகா சந்நிதானம் அவர்கள் சுருக்கமாக உரையாற்றுகையில், ''தாம் கடந்த 10 ஆண்டுக் காலமாகத் தகுதியுள்ள ஒரு இளவரசைத் தேடிக் கொண்டிருந்ததாகவும், வைத்தீசுவரன் கோயிலில் எடுத்த ''நாடி சாத்திரத்தின்'' மூலம் திரு. அருணகிரிநாதரை இளவரசாகத் தேர்ந்தெடுத்ததாகவும், தாம் வேண்டியபடியே திருவருள் ஒரு நல்ல இளவரசைத் தந்திருப்பதாகவும், ஆயிரக்கணக்கான பக்தர்களின் மத்தியில் ஆனந்தக் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்கள்.

—ஆசிரியர்.

# கந்த புராணம்

திருமுருக கிருபானந்தவாரியார்.



**தட்சன் தாணம் :**

ததீசி முனிவர் புறப்பட்டுப் போனபின் யாகதம்பத்தில் கழுகுகளும் காகங்களும் சூழ்ந் தன. தட்சன் மனைவியாகிய வேதவல்லியின் கழுத்திலிருந்த தாலி கீழே விழுந்தது. இவ்வாறு பல துன்னிமித்தங்கள் தோன்றின. இதனைக் கண்டு தகைமையில்லாத தட்சன் அஞ்சி னானில்லை.

பிரமதேவனுக்கும், நாராயணருக்கும் முதற் பூசனை புரிந்து இன்னுரை இயம்பினன். ஏனைய தேவர்கட்கும், தன் புதல்வியர்க்கும், மருகர்கட்கும் ஆடை அணிகலன்களால் வரிசை தந்தான்.

யாகந் தொடங்கப் பெற்றது. காமதேனு ஒரு பொன் மண்டபத்தில் வெள்ளிமலைபோல் அன்னத்தை உண்டாக்கியது. சர்க்கரைப் பொங்கல், கறியமுதுகள், குன்றுகளைப் போல் அமைத்தது. பட்சணங்கள், பழங்கள் குவிக்கப் பெற்றன. பால், தயிர், நெய், பாயசம், மடுக்களைப் போல் உண்டாக்கியது. வெற்றிலை, பாக்கு, கஸ்தூரி, பன்னீர், சந்தனம், மலர்கள் முதலியவைகள் நிரம்பவும் உண்டாக்கி வைத் தது. அன்றி சங்கமும், பதுமமும், சிந்தாமணி யும், கற்பகமும், அங்கு வந்து வேண்டிய அனைத் தும் வழங்கின. ஒரு புறம், பொன், நவரத்தி னங்கள், பொன்னுடைகள் குவிக்கப் பெற்றன.

தட்சன் வேதியர்களை அழைத்து அன்ன மும், ஆடையும், சொர்ணமும் வழங்கினன். அந்த வேதியர்கள் தட்சனை வாழ்த்தினர்கள். சிலர் பசி தீர்ந்தும் ஆசை தீராது தின்று கொண்டே யிருந்தனர். பாவி பிரமா நமக்கு இந்த உணவுகளை உண்ணும் பொருட்டு ஒரு முழ நீளம் வயிற்றைத் தந்தானில்லையே என்று சிலர் வருந்தினர். ஆயிரம் வாய்களும், ஆயிரம் வயிறுகளும் இல்லையே என்று சிலர் கவலைப் பட்டார்கள். இத்தனையுந் தரும் காமதேனுவை ஒரு கயிற்றால் கட்டிக் கொண்டு போவோம் என்றார் சிலர். நிறைய உண்ட சிலர் எப்படி எழுந்திருப்பது என்று ஏங்கினார்கள். நமது மனைவி மக்களை அழைத்து வரவில்லையே என்று சிலர் வருந்தினர். உண்டவர்க்கு ஒரு புறம் சந்தனம், தாம்பூலம் வழங்கப்பட்டன. ஆடை கள், குடைகள், பாதுகைகள், கமண்டலங்கள், தங்கக் காசுகள், நவமணி மாலைகள், பசுக்கள், கன்னியர்கள் முதலியவை எண்ணில்லாத அள வில் வழங்கினார்கள். சில வேதியர் தலையில் சுமந்து சென்றனர். ஒரு புறம் வீணை புல்லாங் குழல் மத்தளம் முதலிய இசைக் கருவிகள் ஒலித்தன. ஒரு புறம் அரம்பையர் ஆடினர்.

**வேள்வி :**

தட்சன் நாராயணரையும், நான்முகனை யும், சிறந்த பீடங்களில் இருத்தி, யாகம் புரியும் யக்ஞமூர்த்திகளைப் பார்த்து இனி யாகம் புரி யுங்கள் என்றான். யாகத்தில் சிவ மந்திரத்தை ஒழித்து, ஏனைய தேவதைகளுக்குரிய மந்திரங் களைக் கூறி அத்தேவதைகளை அழைத்தார்கள். அத்தேவதைகட்கு யாகாக்கினி மூலம் அவியை அளித்தார்கள். தேவர்கள் அந்த இனிய அவியை நஞ்சென உணராது உண்டார்கள்.

**உமாதேவி வருதல் :**

இவ்வாறு வேள்வி நடைபெறும்போது, நாரத முனிவர் வந்து பார்த்தார். சிவமூர்த் தியை விலக்கிச் செய்யும் வேள்வியைக் கண்டு உள்ளம் வெதும்பினார். திருக்கயிலைமலை சென்று நந்தி தேவருடைய அனுமதி பெற்று உள்ளே சென்று அம்பிகையையும், எம்பிரானையும் பல முறை பணிந்து துதித்தார். சிவபெருமான் நாரதரைக் கருணைக் கண்களால் நோக்கினார். எங்கும் நிறைந்து எல்லாம் உணர்ந்த ஈசன் ''நாரதா! என்ன புதுமை?'' என்று கேட்டருளி னார்.

நாரதர் ''கருணாமூர்த்தி, கனகலம் என்ற இடத்திலே மாலயனாதி வானவரை வைத்து மதியில்லாத தட்சன் ஒரு பெரிய வேள்வி செய் கிறான்'' என்றார்.

இதைக் கேட்ட தாட்சாயணி, இறைவனை இறைஞ்சி, ''பெருமானே! என் தந்தை செய் கின்ற யாகத்தை யான் போய்க் கண்டு மகிழ விரும்புகின்றேன். விடை தந்தருளும்'' என்றார். இறைவர் ''தேவீ! தட்சன் உன்னை அழைத்தா னில்லை. அழையாத இடத்துக்குப் போவது பிழையாகும்'' என்றார். அம்பிகை, ''அருட் கடலே! தட்சன் அறிவு குறைந்தவன். மறந்து இருப்பான். என் தங்கையர்கள் யாரும் அங்குக் குழுமியிருப்பார்கள். ஆதலால் போக விரும்பு

# அருள்திரு ஆலங்காடு இம்முடி
# அகோர தர்மசிவாச்சாரிய
# ஆயிர வைசியர் மடம்

**நெரிஞ்சிப்பேட்டை அஞ்சல், அம்மாப்பேட்டை-638311,**

**பவானி வட்டம் : கோயமுத்தூர் மாவட்டம்**

(தொலைபேசி : 26, பவானி, அம்மாப்பேட்டை)

———

ஆயிர வைசியர்களுக்கு உரிமையான குருபீடத்தைக் கொண்ட திருஆலங்காடு இம்முடி அகோர தர்மசிவாச்சாரிய ஆயிர வைசியர் மடம், கோயமுத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த பவானியிலிருந்து மேட்டூர் அணைக்குச் செல்லும் சாலையில் 16 கல் தொலைவில் நெரிஞ்சிப் பேட்டை என்ற சிற்றூரில் இருக்கிறது. அவ்வூருக்கு மேற்கே பச்சைப் பசேலென்று பசுமையைக் காட்டும் வண்ணமாகப் பால மலைத் தொடர்ச்சியும், தெற்கு நோக்கிப் பாய்ந்தோடி வரும், காவிரி, என்கிற பொன்னி நதியும், நல்ல விளை நிலங்களும் சூழ்ந்துள்ள அந்த இடத்தில், கம்பீரமான முறையில் நமது மடம் அமைந்திருப்பது, ஆயிர வைசியர்களின் ஆதிகாலத்து ஆஸ்திகப் பண்பாட்டின் சிறப்புத் தன்மையையும் கொடைத் திறனையும் நன்கு எடுத்துக் காட்டும் அடையாளச் சின்னமாக இன்றும் காட்சி தருகிறது. மடத்தில், அருள்திரு ராஜராஜேஸ்வரி சமேத சிதம்பரேஸ்வரர் ஸ்படிகத்திலான விக்கிரகங்கள் மூலஸ் தானத்தில் மூர்த்திகளாகக் காட்சி தருகின்றன. மற்றும் அருள்திரு விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதர் சிவாலயம் அங்கே பிரகாசிக்கிறது. மடத்துக்குப் பின் பக்கம் நந்தவனத் தோட்டம், நமது குருநாதர்களாகிய ஸ்ரீ நாராயண தர்ம சிவாசாரியார், ஸ்ரீ சப்தரிஷி தர்ம சிவாச்சாரியார் திருவுருவங்களும், குருநாதர் பாத பீட மண்டபமும் அங்கே அமைக் கப்பட்டிருக்கிறது. ஆண்டுதோறும் குருபாத பீடத்துக்குக் குருபூஜை விழா, சித்திரைத் திங்களில் சிறப்பான முறையில் நடந்து வருகிறது. ஆண்டுதோறும் நவராத்திரி விழா வெகு விமரிசையாக நடந்து வருகிறது.

**சி. சிவதாணு, பி.ஏ.,**
மேலாளர்.

**எம். கோதண்டராமன்,**
அறங்காவலர்.

கின்றேன். அனுமதி தாரும்'' என்றாள். விடையூர்தி விடை தந்தருளினார். எல்லா உலகங்களையும் ஈன்ற எம்பிராட்டி விமானத்தில் ஏறிப் புறப்பட்டாள். பல சேடியர் உடன் சென்றார்கள். நந்தி தேவரின் மனைவி சுகேசை பாதுகையைத் தாங்கிச் சென்றாள். கமலினி அநிந்திதை என்னுங் கன்னியர் பூமாலைகளை ஏந்திச் சென்றனர். தட்சனுடைய வேள்விச் சாலைக்குள் அம்பிகை சேர்ந்தாள்.

**தட்சனுடைய சினம் :**

பட்சமில்லாத தட்சன் தாட்சாயணியை வெகுண்டு நோக்கிக் கூறுகின்றான் : ''தந்தையும் தாயும் இல்லாத சங்கரன் மனைவியான நீ இங்கு ஏன் வந்தாய்? நான் உன்னை அழைக்கவில்லையே! உன் கணவன் பித்தன்; பேயுடன் ஆடும் பேயன்; தாமத குணத்தினன் ; நீ அவனுடன் சேர்ந்து மயக்கமுற்றனை. இதோ பார் உன் தங்கையர்களும் அவர்களின் கணவர்களும் மாலும் அயனும் என்னை மதித்துச் சூழ்ந்திருக்கின்றார்கள். என்னை மதியாத சிவனுக்கு அவியும் தரமாட்டேன். சிவனுக்கு முதன்மையாகத் தர வேண்டும் என்று சாற்றுகின்ற வேத மொழியையும் மாற்றுகின்றனன். சிவனை நீ சேர்ந்ததால் இங்கு நான் உனக்கு ஒரு சிறப்பையும் செய்ய மாட்டேன். ஆகவே நீ இங்கு நில்லாது செல்'' என்றான்.

**தேவியின் சீற்றம் :**

இந்தச் சாரமும் ஈரமும் இல்லாத கோர மொழிகளைக் கேட்ட வீரத் தாய் பெரிதும் வெகுண்டாள். ''அம்பிகையின் சீற்றத்தைக் கண்டு விண்ணும் மண்ணும் கடலும் மலையும் கதிரும் மதியும் நடுங்கின. விமலை என்ற பாங்கி அம்மையை அஞ்சலித்து, அகிலாண்டங்களையும் பெற்ற அன்னையே! தாய் சீறினால் சேய்கள் உய்யுமோ? சிறு மதியுடைய இந்தசிறுவிதியைத் தேவரீர் சீறினால் உமது சீற்றம் உலகங்களை அழித்துவிடும். பொறுத்தருள் புரியும்'' என்று வேண்டினாள்.

அம்பிகை தன் சீற்றத்தை மாற்றி, தட்சனைப் பார்த்துக் கூறுகின்றாள்: ''ஏ மதியிலாதவனே! நீ என்னை யிகழ்ந்ததைப் பொறுத்துக் கொண்டேன். என்னையுடைய முன்னை நாயகனை இகழ்ந்த புன்மொழியைப் பொறுக்கிலேன். என் செவியைச் சுட்டுவிட்டது. சிற் குணமுடைய சிவமூர்த்தி நிர்க்குணமுடையவர். தந்தை மைந்தரைத் தண்டிக்கும்போது அவருக்குள்ள சினம் அருளின் நீர்மையாம். அதுபோல் இறைவர் உலகங்களைச் சங்கரிக்கின்ற போது தாமத குணத்தை மேற்கொள்ளுகின்றார். அதுஅவருக்கு இயற்கையன்று. சர்வ சங்காரம்அவர் ஒருவரே செய்ய வல்லவர். சர்வ சங்காரம், ஒழியாது பிறந்து இறந்து வரும் உயிர்கட்கு ஓய்வு தருவதாகும். அது கருணையால் நிகழ்வதாகும். அழித்த அவரே அளிக்கவும் வல்லவராகும். அப்பரமபதியை — கருணாநிதியை தாமத குணத்தினன் என்று நீ சாற்றலாகுமோ? சிவ என்ற ஈரெழுத்துக்களைச் செப்பினோர் எளிதில் நற்கதி நண்ணுவர். சிவமூர்த்தியை நிந்தித்துப் புந்தியற்ற புல்லிய உனக்கு இப்போது தண்டனை கிடைக்கும்'' என்று இயம்பி அக்கணமே விமானமூர்ந்து கயிலாயம் சென்றாள்.

கருணை நாயகரைத்தொழுது ''அண்ணலே! உமை நிந்தித்த தட்சனுடைய யாகத்தை அழித்திட வேண்டும். உமக்கு விருப்பும் வெறுப்பும் இல்லை எனினும் எமக்காகச் செய்தருள்க'' என்று வேண்டினாள்.

**வீரபத்திரர் தோற்றம் :**

அப்போது ஆலமுண்ட நீலகண்ட நிமலன் சிந்தித்தார்; அச் சிந்தையிலிருந்து அகோர வீரபத்திரர் அவதரித்தார். அவருக்கு ஆயிரம் சிரங்களும், சிரங்கள் தோறும் மூன்றுகண்களும், பிறைமதியுடைய முடிகளும், விளங்கியிருந்தன. ஈராயிரம் திருக்கரங்களும், பிரம சிர மாலைகளும், எலும்பு ஆமையோடு பன்றிக் கொம்பு இவைகள் புரளும் திருமார்பும் உடையராய் நின்றார். கரங்கள் தோறும் பலப் பல படைக் கலங்கள் ஒளி செய்திருந்தன. அவருடைய திருமேனியில் நாகாபரணங்களும் ரத்னாபரணங்களும் விளங்கின. வீரக் கழலுடன் திருவடிகள் காட்சியளித்தன. அந்திவான் வடிவாகிய எந்தையாருடைய நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய வீரபத்திரர் சிவனே எனக் காட்சி தந்தார்.

**பத்ரகாளி :**

அப்போது அம்பிகை தன் கோபக்கனலில் இருந்து பத்ரகாளியைப் படைத்தாள். வீரபத்திரரும் அம்மையப்பரை வணங்கினார்கள். வேதமூர்த்தியைப் பார்த்து வீரபத்திரர் விளம்புகின்றார்.

''தந்தையே! மாலையும் அயனையும் பற்றிக் கொண்டு வர வேண்டுமா? காலனைக் கொல்ல வேண்டுமா? தேவர்களை அழிக்கவோ? அசுரர்களை வதைக்கட்டுமா? உலகங்களை அப்படியே விழுங்கிவிட வேண்டுமா? எல்லா உயிர்களையும் ஒடுக்கட்டுமா? அண்டங்களைத் துண்டங்கள் செய்யட்டுமா? உமது அருளால் எதையும் செய்ய வல்லேன். என்னை ஈன்றது என்ன பணிக்காக? உத்தரவு தாரும்'' என்றார்.

சிவபெருமான் ''மகனே! எம்மை விலக்கித் தட்சன் வேள்வி செய்கின்றான். நீ அங்குச் சென்று நமது அவிர்ப்பாகத்தைக் கேள். அவன் நல்லுணர்வு பெற்று நல்கினால் இங்கு வருக. இல்லையேல் அவன் தலையினை அறுப்பாயாக : அவனை அடுப்போரைக் கொல்வாயாக. யாகத்தை அழிப்பாயாக. நாம் அங்கு வருவோம்'' என்று கட்டளை இட்டருளினார்.

பத்ரகாளியுடன் வீரபத்திரர் புறப்பட்டார். அவருடைய மூச்சுக் காற்றிலிருந்தும், வேர்வையிலிருந்தும் பலப் பல வீரர்களை உண்டாக்கினார்.

# அருள்திரு சுப்பிரமணிய சுவாமி ஆலயம்

## கோவை மாவட்டம்

உலகில் வாழும் மக்களின் துன்ப நீக்கத்திற்கும் இன்பப் பேற்றுக்கும் இடமாயுள்ளவை ஆலயங்களே. ஈரோட்டிலிருந்து 16 கல் தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வாலயத்திற்குச் சிகிரி, புட்பகிரி, சென்னியங்கிரி என்ற வேறு பெயர்களும் உண்டு. சென்னி மலையில் தயிர் புளிப்பதில்லை என்பது தல ஐதீகம். திருப்புகழ்ப் பாடல் கேட்டு அருணகிரிநாதருக்கு முருகன் படிக்காசு நல்கிய தலம் இது தான். தலவிருட்சம் திந்துருணி (புளி). படிக்காசுப் புலவர் முதலிய புலவர்கள் இத்தலத்தைப் பாடியுள்ளனர்.

மாமாங்க தீர்த்தம், கண்டு காணுச்சுனை, சுப்பிரமணிய தீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் அமையப் பெற்றது.

சிவாலயச்சோழன் என்னும் பேரரசன் தன் உடம்பில் உள்ள தீராப் பிணிகள் அகலவும் இறையன்பு பெறவும் ஆண்டவரின் தீட்சண்யம் பெறவும் மலையின் முழுவதும் பரவியுள்ள பலவித நோய் தீர்க்கும் சக்தியுள்ள மாமருந்து மூலிகைகளின் தெய்வீகக் காற்று சக்தியின் மூலம் நோய் அகலப் பெற்ருன். பேரரசன் அகமகிழ்ந்து ஆண்டவருக்குத் திருப்பணிகள் செய்தான் என்று கல்வெட்டுச் சான்று கூறுகிறது.

சென்னிமலை வாழ் சிரகிரி வேலவரைத் தரிசிக்க இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து ஏராளமான அன்பர்கள் நாள்தோறும் வந்து செல்கின்றனர். கார்கள் செல்ல மலை மீது வசதியான தார் ரோடு போடப்பட்டு உள்ளது. வேலருக்கு ஆலய விமானங்கள் புதுப் பிக்கப்பட்டுக் கடந்த 4—6—1973-ல் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா பக்தர்கள் உபயத்தால் இனிதே நடைபெற்றன.

இத்துணை சிறப்புப் பெற்ற சென்னிமலை முருகனுக்குமலை மீது ஓட வெள்ளித் தேர் இல்லையே என்ற குறையை நீக்கத் திருப்பணிக் குழு அமைத்து வெள்ளி ரதம் செய்யும் பணிகள் துவக்கப்பட்டுள்ளன. இத்திருப்பணியில் பங்கு கொள்ள வேண்டுமென்று அன்பர் கள் நன்கொடைகள் தாராளமாக வழங்கி வருகின்றுர்கள். எனவே தாங்களும் இத்திருப் பணியில் பங்கு பெற்று இம்முருகனின் அருளுக்குப் பாத்திரராக வேண்டுகிறேம்.

இன்னணம்,

**இரா. கோவிந்தன்,**
செயல் அலுவலர்.

**எஸ். திருமலை சாமி,**
தலைவர், அறங்காவலர் குழு.

**ஓ. எஸ். சிவன்மலைக் கவுண்டர், எஸ். பெரியசாமி,**
**டி. கருப்பசாமி, வி. எஸ். எம். என். முருகேசன்.**
அறங்காவலர்கள்

# அருணகிரிநாதர் தீட்டிய அற்புதச் சொல்லோவியம்!

ந.ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்

**முன்னுரை**

ஓவியமும் காவியமும் ஒன்றற்கொன்று மிகவும் தொடர்புடைய கலைகள் என்பர். மிகப் பழங்காலத்தில் மக்கள் தம்முடைய எண்ணங்களை ஓவியங்கள் (Pictograph) வரைவதன் வாயிலாகவே வெளியிட்டு வந்தனர். பின்னர் நாளடைவில் நாகரிகம் வளர வளரப் பல்வேறு மொழிகளும், அவற்றின்கட் பற்பல காவியங்களும் தோன்றலாயின.

இயற்கைக் காட்சிகளையும், மனித வாழ்வின் நிகழ்ச்சிகளையும், ஓவியம் எழில்மிக்க வண்ணங்களினுல் அழகுற வரைந்து காட்டுகின்றது. அங்ஙனமே காவியமும், அவற்றை அழகிய பற்பல சொற்களினுல் நிரல்படத் தொகுத்துப் பாடி விளக்குகின்றது. இவ்வகையில் இரண்டிற்கும் இடையே மிகமிக நெருங்கிய தொடர்பும், ஒப்புமையும் அமைந்திருத்தல் வெள்ளிடை மலை. ஓவியம் காவியம் என்னும் இரண்டுமே நம்மனோர் வாழ்க்கைக்கு இன்றியமையாத சிறந்த கலைகள். இவ்விரு கலைகளுமே நம்முடைய மனித வாழ்வியலை நுண்ணிதின் ஆராய்ந்து, சிந்தைக்கு இனிய முறையில் செவ்விதின் விளக்கிக் காட்டுகின்றன.

**சேக்குவீயர்**

உலகப் புகழ்பெற்ற பெருங் கவிஞர் ஆகிய சேக்குவீயர் (Shakespeare) தம்முடைய நூல்களில், மனித வாழ்வியல்பினை, ஆங்காங்கே சிறுசிறு சொல்லோவியங்களாக அழகுற எழுதிக் காட்டுகின்ருர்: (1) ''வாழ்க்கை என்பது ஒரு நடக்கும் நிழலேயாகும்; ஓர் ஏழை நடிகன் மேடையின்மேல் பெருமிதமாக நடக்கின்ருன்; வறிதே தன் உடலை அசைத்துக் குலுக்கி அலட்டிக் கொள்கின்ருன். அதற்குப் பிறகு அவனைப் பற்றிய செய்தி எதுவும் கேட்கப்படுவதேயில்லை. ஓர் அறிவிலியால், கூச்சலும், ஆரவாரமும் நிரம்ப, ஒருவகையான பொருட்குறிப்பும் இன்றிச் சொல்லப்படுகின்ற சுவையற்ற கதையே, வாழ்க்கையாகும்'' என்று 'மகபதி' என்னும் நாடக நூலிற் குறிப்பிடுகின்ருர்.

இவ்வாறே மற்ருேர் இடத்தில் (2) ''உலகமே ஒரு நாடக மேடை. ஆண்களும் பெண்களும் அதன்கட் போதரும் வெறும் நடிகரேயாவர். அவர்கள் பிறப்பு என்னும் நுழைவாயிலையும், இறப்பு என்னும் வெளிவாயிலையும் பெற்றுள்ளனர். ஒரு மனிதனே தனக்குரிய நேரத்திற் பற்பல வேடங்களை ஏற்று நடிக்கின்ருன். அவனுடைய நடிப்பு ஆகிய உலக வாழ்க்கை, ஏழு வகைப் பருவங்களாக அமைகின்றது'' என்று, ''நீங்கள் விரும்புவது போலவே'' என்னும் நாடகத்தில், அரிய முறையில் உருவகம் செய்து பாடியிருக்கின்ருர்.

(3) ''கனவு எதனுல் அமைகின்றதோ, அதனுலேயே நாமும் அமைக்கப்பட்டிருக்கின்ருேம். நம்முடைய சிறிய வாழ்வு, தூக்கம் என்பதோடு சுழன்று உழன்று முடிந்து போகின்றது'' என்று 'பெரும்புயல்' என்னும் நாடகத்தில் சேக்குவீயர் கூறுகின்ருர்.

உலக வாழ்க்கை என்பதுதான்
  உலவித் திரியும் வெறும்நிழலே;
நலமில் வறிய நடிகன் அவன்,
  நடந்து குலுங்கி மேடையினில்
சிலவே நேரம் இருந்தொழிவான்;
  பின்னர்ச் சிறிதும் செவிக்கணுகான்;
இலகு சுவையின் றறிவிலிசொல்
  கதைபோற் பொருளில் வெற்ருெலியே! (1)

உலகம் எலாம் ஒரு நாடக
  மேடை: ஒருங்கியைந்து
நிலவும்ஆண் பெண்கள் எலாமும்,
  வெறும் நிழல் போல்நடிகர்;
உலவ வரும்வழி, செல்வழி
  உண்டு, அவர்க்கு; உற்ருெருவர்
பலவகைப் பாங்கின் நடிப்பர்; ஏழ்
  வாழ்க்கைப் படிவங்களே! (2)

---

(1) " Life is but a walking shadow ;
  a poor player
That struts and frets his hour
  upon the stage,
And then is heard no more ;
  it is a tale
Told by an idiot full of
  sound and fury,
Signifying nothing."

—MACBETH

(2) " All the world's a stage,
And all men and women merely players ;
They have their exist and their entrances ;
Any one man in his time plays many parts,
His acts being seven ages."

—AS YOU LIKE IT.

கனவு எதனல் அமைந்துவரக்
காண்கின் றேமோ, அதனல்தான்
மனிதர் நாமும், நம் வாழ்வும்
வகுக்கப் பெற்று வயங்குகின்றேம்;
துனிநின் றியைந்த நம்முடைய
சிறிய வாழ்வ துவும், தூக்கம்
எனும்ஓர் நிலையிற் சுழன்றுழன்றே
இடரிற் கிடந்து முடிந்தொழியும். (3)

—ந.ரா.மு.

இவற்றைப்போன்று மனித வாழ்வியல் பினை விவரிக்கும் எத்தனையோ பற்பல பாடல்கள், அமிழ்தினும் இனிய நம் தமிழ் இலக்கியங்களிற் காணப்படுகின்றன. அவை களுள் ''வாக்கிற்கு அருணகிரி'' என நம் தமிழ் கூறும் நல்லுகம் புகழ்ந்து போற்றிப் பாராட்டி வருகின்ற அருணகிரிநாதர் பெருமான், தமது திருப்புகழ்ப் பாடல்களுள் ஒன்றில், மனித வாழ் வியல்பினை விளக்கித் தீட்டிக் காட்டும் அழகிய இனிய சொல்லோவியம் ஒன்றினை மட்டும், ஈண்டுக்கண்டு அமைதல் சாலும் !

**சொல்லோவியம்**

''நம்முடைய மனித வாழ்வு அறுகம் புல்லின் நுனியில் உள்ள பனித்துளியைப் போன்று, மிகச் சிறிய அளவில் முதன் முத லில் தொடங்குகின்றது. தந்தையின் விந்து, தாயின் சுரோணிதத்துடன் கலந்து, கருப் பையைச் சென்று சேர்கின்றது. அங்கே அது பத்துத் திங்கள் தங்கியிருந்து பெரிய உடலாக வளர்ந்து குழந்தையாகப் பிறக்கின்றது.

அக்குழந்தையினைப் பெற்றேர்களும் உற் றேர்களும் மிகவும் அன்புடன் எடுத்து வளர்க்கின்றனர். குழந்தை குதலை மொழிகள் பேசுகின்றது. அதுகேட்டுத் தாயும் தந்தை யும் மகிழ்ந்து, மோகங் கொள்கின்றனர். அரு மையினில் அருமையாகச் சீராட்டிப் பாராட்டிப் போற்றுகின்றனர். குழந்தையின் உடல் மொளு மொளு என வளர்கின்றது. ஆளும், பெரியவன் ஆகி வாலிபப் பருவம் அடைகின்றுன்.

பின்னர்ப் பெரிய மனிதனுகி, அழகிய நாகரிக நடையிற் பயிலுகிறுன். கிருது படும் மொழிகள் பேசப் பழகுகின்றுன். உயிர் போலும் தேவிமார்கள் பலருடன் தொடர்பு கொள்ளுகின்றுன். நிலையற்ற உலகியல் வாழ் வினை நிலை உடையது என எண்ணி மயங்கு கின்றுன். வீடு வாசலும், மாட கூடங்களும் தேடுகின்றுன்.

பொருள் சேர்ப்பதிற் பேராசை கொண்டு அணுவளவு தவிடு கூடக் கீழே விழுந்து சிதறி விடக்கூடாது என்று எண்ணும் இரக்கமற்ற கல்நெஞ்சனுய்ப் பரமலோபியாய் மாறுகின் றுன். நூலுக்கு மட்டுமே நுழைய இடந்தரும் ஊசியினைப் போன்று, தன் மனைவி மக்களை மட்டுமே யன்றி, மற்றைப் பிறரெவரையும் தன்பால் அவன் அணுக விடமாட்டான்.

அவிந்து போவதற்கு முன்னர் ஒளிவிட்டு எரியும் சுடர்போல, இனிப் பின்னர்த் தனக்கு நேரக்கூடிய இன்னல்களைப் பற்றி எண்ணுமல், அவன் செருக்குற்று இறுமாந்து நிற்பான். ஓர் ஏழை இரவலனே, அன்றி ஒரு துறவியோ, தன் வீட்டின் முன் வந்து 'சிறிது சோறு போடுங்கள்' என்று கேட்டால், 'அதோ! மேற்கே உள்ள வீட்டிற்குப் போய்க் கேள்' 'இதோ! கிழக் கிலேயுள்ள வீட்டிற்குச் சென்று கேள்' என்று சொல்லி வெருட்டி ஓட்டி விடுவான். அவர்கள் திரும்பிச் செல்லுவதற்கு முன்னரே, திடுதிடு என அவர்களின் எதிரே வேகமாக முடுகிச் சென்று, நாய் போலச் சீறிப் பாய்ந்து மேலே விழுவான்.

பின்னர்ச் சின்னுளில், முன்னே அவன் பல தீய வழிகளிலும் முயன்று சேர்த்த பெரு வளம் குறைந்து, வறண்டு போகத் தலைப்படு கின்றது. நல்லவர்களின் சொற்களை அவன் கேட்பதில்லை. வீணர்களின் பேச்சையே விரும்பி ஏற்று நடக்கிறுன். நீதி நெறிமுறைகள் பற்றி யெல்லாம் அவன் நினைப்பதேயில்லை. இறைவனை யும் அடியார்களையும் அறவே புறக்கணித்து, வீணர்களுக்கே விரும்பிச் சேவை பூண்டு பாவி யாகிப் பழிவழிகளில் படர்ந்து நிற்பான்.

அதனல் மினுகுமினுகு எனச் செழித்துச் சிறந்திருந்த உடம்பு, முழுவதும் வளைந்து கூனுகிவிட, மெலிவுற்று வருந்துவான். 'பாவ புண்ணியங்கள் உண்டு. தீய செயல்கள் புரிந் தால், தீங்குகளே நேரும், மறுபிறவி என்ப தொன்று உண்டு. இப்பிறவியிற் செய்த பாவங் களை மறுபிறவிகளில் அனுபவித்தேயாகல் வேண்டும். எனவே இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து நடந்து கொள்ளுதல் நலம்' என்று பெரியவர்கள் யாரேனும் கூறினல் அவர் களை ஏளனம் செய்து இகழ்வான். துறவிகளை யும், பெரியவர்களையும், கற்றவர்களையும் வெடுவெடு எனக் கடுமையாகப் பழித்துப் பேசு வான். விலைமகளிரையும், பரத்தையரையும் புணர்ந்து காலங்கழிப்பான்.

இந்நிலையில், அவனுக்கு வறுமை மிகுதிப் படுகின்றது. வருதற்குரிய பொருள்களும் நழுவி விடுகின்றன. வாதநோய், ஊதுகாமாலை சோகை, மகோதரம், வயிற்றுவலி, புண்கட்டி (படுவன்) முதலிய நோய்கள் பலவும் வந்து, அவனைத் துன்புறுத்துகின்றன. இரண்டு கண் களிலும் பீளை ஒழுகுகின்றது. ஈளை வழவழ என மேலிடுகின்றது. அதனைத் துப்பவும் அவ னல் முடியவில்லை. துப்ப முயன்றுல், கொழ கொழென ஒழுகி அவன் மேலேயே விழுகின்றது. சதையெல்லாம்வாடி வதங்கி விட்டன. நாடிகள் கணந்தோறும் வேறுபடுகின்றன. அதனல் 'இனி இவன் பிழைப்பது அரிது' என்று மனைவி மனம் மாறுபடுகின்றுள்.

வீட்டில் உள்ளவர்கள் கலக்கம் அடை கின்றுர்கள். பெண்களும் குழந்தைகளும் அவனை அருகிற் சென்று, காணவும் அருவருப்புக் கொண்டு சீச்சீ என வெறுக்கின்றுர்கள். மரணம் நெருங்கிக் கொண்டு இருப்பதற்கு அடையாளமாகத் தேர் வருவது போலவும்,

(3) "We are such stuff as
Dreams are made on ; and our
Little life is rounded with a sleep."

—THE TEMPEST

குதிரை வருவது போலவும் கனவுக் காட்சிகள் தோன்றுகின்றன. சுடுகாடு 'வா வா' என அழைக்கின்றது. வீடு 'போபோ' எனத் துரத்து கின்றது. இந்நிலையில் இவன் செருக்கு அழி கின்றது. சூழ்ச்சித் திறன் தொலைகின்றது. பேச்சு குழறுகின்றது. விழிகள் செருகுகின்றன. மேல் மூச்சு எழுகின்றது. உயிர் உடலில் ஊசலாடுகின்றது.

உறவினர்கள் 'இவரோடு நம்முடைய வளமும் அற்றுவிடுமே' என்று எண்ணிக் கலங்கிக் கதறியழுகின்றனர். இவனை நம்பி யிருந்த மாதர்கள் மோதி மேலே விழுந்து புலம்புகின்றனர். 'என்னுடைய பொருள்' 'என்னுடைய அடிமையாட்கள்' என்று எண்ணிச் செருக்குற்றிருந்த உணர்வு, நிலைதடுமாறி மழுங்கி ஒடுங்கி விடுகின்றது. ஈக்கள் மொலேல் என்று மொய்க்க, வாயை ஆ என்று திறந்து கொண்டு உயிர் நீங்கிப் போகின்றது. இடுகு பறை, சிறுபறை, திமிலை, தவில் முதலிய மேளங்கள், மரணத்தையுணர்த்தும் முறையில் ஒலிக்கின்றன. கடைசியாக இவனுடைய பிணம், பேய்கள் சூழ்கின்ற சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று நெருப்பில் இட்டுப் பொசுக் கப் பெறுகின்றது. இதுதான் நம்முடைய மனித வாழ்வின் நிலை!

''இத்தகைய இழிந்த மனித வாழ்வையும் இதன் அவலமான முடிவையுமே, உன்னுடைய இரண்டு திருவடிகளையும் பரவித்துதிக்கின்ற உன் அடியவர்கள் தாமும் பெறவேண்டும் என்றால், அதனை உலகத்தவர்கள் இகழமாட் டார்களா? பாசங்களை நாசம் செய்ய வல்ல பெருமானே! நல்வினை தீவினை என்னும் இரு வினைகளும், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் நீங்கவும், இறப்பும் பிறப்பும் அற்று ஒழியவும், ஏகபோகமாய் நீயும் நானு மாய் ஒன்றுபட்டு அழுந்திக் கலக்கும் வண்ணம், மேலான பேரின்ப நிலையை எனக்கு அளித் தருள்வாயாக! திருவிடை மருதூர் என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஏக நாயகனே! லோகநாயகனே! தேவர்கள் பெருமாளே!''

**திருப்புகழ் :**

அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெரியதொரு
ஆகமாகியோர் பால ரூபமாய்
அருமதலை குதலைமொழி தனிலுருகி யவருடைய
ஆயி தாதையார் மாய மோகமாய்
அருமையினி லருமையிட மொளுமொளென வுடல்வளர
ஆளுமேளமாய் வாலரூபமாய் அவரொரு பெரியோராய்

அழகுபெறு நடையடைய கிருதுபடு மொழிபழகி
ஆவி' யாயவோர் தேவி மாருமாய்
விழுசுவரை யரிவையர்கள் படுகுழியை நிலைமை யென
வீடு வாசலாய் மாட கூடமாய்
அணுகளவு தவிடுமிக பிதிரவிட மனமிறுகி
ஆசை யாளராய் ஊசி வாசியாய் அவியுறு சுடர்போலே

வெறுமிடிய ஞெருதவசி யமுதுபடை யெனுமளவில்
மேலை வீடுகேள் கீழை வீடுகேள்
திடுதிடென நுழைவதன்முன் எதிர்முடுகி யவர் களோடு
சீறி ஞாளிபோல் ஏறி வீழ்வதாய்
விரகிஞெடு வருபொருள்கள் சுவறியிட மொழியு மொரு
வீணி யார்சொலே மேல தாயிட விதிதனை நினையாதே

மினுகுமினு கெனுமுடல மறமுறுகி நெகிழ்வுறவும்
வீணர் சேவையே பூணு பாவியாய்
மறுமையுள தெனுமவரை விடும்விழலை யதனின்வரு
வார்கள் போகுவார் காணு மோளனு
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேள மேசொலாஆளி வாயராய் மிடையுற வருநாளில்

வறுமைகளு முடுகிவர வுறுபொருளு நழுவசில
வாத மூதுகா மாலை சோகைநோய்
பெருவயிறு வயிறுவலி படுவன்வர இருவிழிகள்
பீளை சாறிடா ஈளை மேலிடா
வழவழென உமிழுமது கொழகொழென ஒழுகிவிழ
வாடி யூனெலாம் நாடி பேதமாய் மனையவள் மனம் வேறாய்

மறுகமனை யுறுமவர்கள் நணுகுநணு மெனுமளவில்
மாதர் சீயெனு வாலர் சீயெனு
கனவுதனில் இரதமொடு குதிரைவர நெடியசுடு
காடு வாவெனு வீடு போவெனு
வலதழிய விரகழிய வுரைகுழறி விழிசொருகி
வாயுமேலிடா ஆவி போகுநாள் மனிதர்கள் பலபேச

இறுதியதொ டறுதியென உறவின்முறை கதறியழ
ஏழை மாதரார் மோதி மேல்விழா
எனதுடைமை எனதடிமை யெனுமறிவு சிறிதுமற
ஈமொ லெலெனு வாயை ஆவெனு
இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு தவிலறைய
ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய் எரிதனில் இடும் வாழ்வே,

இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறு வதுவும்?
ஏசி டார்களோ பாச நாசனே
இருவினைமு மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையருளிடை மருதில்
ஏக நாயகா லோக நாயகா இமையவர் பெருமாளே.

**முடிவுரை :**

இங்ஙனம் அரிய இனிய கருத்து அமைய, அருணகிரிநாதப் பெருமான், ''அறுகுநுனி பனி யனைய'' எனத் தொடங்கும் திருவிடைமரு தூர்த் திருப்புகழைப் பாடியருளியிருக்கிறார். இத்திருப்புகழ்ப் பாடலின் சொற்சிறப்பு, சந்த நலம், கருத்துவளம், உருக்கத்திறன், உப தேச மாட்சி, நிலையாமை உணர்வு, இறை யருள் விளக்கத்திறன் முதலிய பண்புகள் பலவும் எவருள்ளத்தையும் கவரவல்லன! இத்தனையும் இதுபோன்ற ஏனைய பல அழகிய திருப்புகழ்ப் பாடல்களையும் பயின்று ஓதி, நாம் அனைவரும் இறைவனை வழிபட்டு நலம் பெற முயலுவோமாக.

**

# இல்லங்களைப் பொலிவுறச் செய்யும் சிறந்த இல்லம் — காதி கிராப்ட்

கோடைக்கேற்ற கதர் பருத்தி வகைகள்
கண்ணைக் கவரும் வண்ண வண்ணப்பட்டு
தினுசுகள், தாகம் தணிக்க பதநீர், சுவை
மிகுந்த தேன், அக்மார்க் செய்யப்பட்ட
செக்கெண்ணெய், உடலுக்கு உறுதி
அளிக்கும் பனைவெல்லம், மணமும், அழகும்
பெருக்கும் குறிஞ்சி வாசனை சோப்பு,
வெள்ளை வெளேர் சலவைக்குக் கோபுரம்
சோப்பு, சிறந்த முறையில் செய்யப்பட்ட
காலணிகள், தோல் பொருட்கள்,
வேலைப்பாடு மிக்க மண்பாண்டங்கள்,
இல்லத்தை அலங்கரிக்க எழில்மிகு மரச்
சாமான்கள், பிரம்பு, மூங்கிலிலான
பொருட்கள் மலிவு விலை தீப்பெட்டிகள்,
அழைப்பிதழ் அச்சிட கைக்காகிதங்கள்.

தமிழகமெங்கும் அமைந்துள்ள 180

**காதி கிராப்ட்** களிலும்

மலிவு விலையில் கிடைக்கும்.
வாங்கிப் பயன் பெறுவீர்!
கிராமக் கைவினைஞர்களை ஊக்குவிப்பீர்!




வெளியீடு: தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்



# திருக்குறட் செங்கோல்

தமிழ்நம்பி

**முன்னுரை :**

திருக்குறள், நம் தமிழ் மொழியிலுள்ள சிறந்த இலக்கியங்களுள் எல்லாம், தலை சிறந்தது, ஒப்புயர்வற்றது. ''திருக்குறள் ஓர் இலக்கியக் கருவூலம், கவிதைக்குரல் என்பதில் ஐயமே இல்லை. கிரேக்கர்களுக்கு ஹோமரின் காவியம் எத்தகையதோ, அவ்வாறு சொற்சிறப்பும் நீதிச் சிறப்பும் மிகச் சிறந்த முறையில் அமைந்துள்ளது'' என்று சார்லஸ் இ. கவர் (Charless E. Gover) என்பவரும் ''திருக்குறள் தமிழ் இலக்கியத்தின் சிறந்த படைப்பு. மனித சிந்தனையின் சிறந்துயர்ந்த தூய இனிய வெளியீடு'' என்று எம்.ஏரியல் (M. Ariel) என்பவரும், ''திருக்குறள் கவிதைச் சுவையும் இலக்கிய இன்பமும் நிறைந்தது. அதன் உள்ளங்கவர் பண்பு ஒப்புயர்வு இல்லது'' என்று பேரறிஞர் கிரவுல் (Pro. Graul) என்பவரும், திருக்குறளின் சிறப்பினை மிகவும் வியந்து போற்றியுள்ளனர்.

**தமிழ்மொழி யரசி :**

திருக்குறளின் சிறப்பை இங்ஙனம் பல வகைகளில் அறிஞர்கள் பலரும் பாராட்டியுள்ளனர். திருக்குறள் தமிழிலக்கியங்களுள் பெற்று விளங்கும் சிறப்பிடத்தினைப் பின்வரும் கருத்தமையக் கவிஞர் ஒருவர் அழகிய கற்பனைத் திறம் அமையப் பாடியுள்ளார்.

உலக மொழிகளுள் தமிழ் மொழியானது தொன்மையும் பெருமையும் மிக்க தூய இனிய ''உயர் தனிச் செம்மொழி'' (Classical Language) யாகலின், அதனை உலக மொழிகளுக்கெல்லாம் தலைமையும் பெருமையும் சான்றது எனக் குறிப்பிட விரும்பி, நம்முடைய தமிழ் மொழித் தாயை ஒரு பேரரசியாக உருவகம் செய்கின்றார். அரசியெனின், அரசியர்க்குரிய அணிகலன்களும் பிறவும், தமிழ்த்தாயும் அணிந்து திகழ்வதாக அமைவுற ஆய்ந்து கூறுதல் வேண்டும். அது கருதி, அவர் தமிழிலுள்ள பெருங்காப்பிய நூல்களையெல்லாம் தமிழ்த்தாய் ஆகிய பேரரசியின் சீரிய அணிகலன்களாகச் சிறப்புறக் குறிப்பிடுகின்றார் !

**திருக்குறட் செங்கோல் :**

தமிழ்த்தாய் ஆகிய பேரரசி, குண்டலகேசி எனும் காப்பியத்தினைக் காதிற் குண்டலமாகத் தரித்திருக்கின்றாள்; வளையாபதி என்னும் காப்பியம் தமிழ்த்தாயின் கைகளுக்கு வளையல்களாக மிளிர்கின்றது; அவளுடைய கருணை நிறைந்த மார்பில் ஒரு மணி முத்தாரம் போலச் சிந்தாமணி என்னும் செந்தமிழ்க் காப்பியம் நந்தா ஒளி பரப்புகின்றது; அவள் தன் மெல்லிய இடையில் மணிமேகலை என்னும் மாண்புயர் காப்பியம் அணி செய்து வயங்குகின்றது; அவளுடைய தாமரை போன்ற திருவடிகளில், ''நெஞ்சையள்ளும் செஞ்சொற் சிலப்பதிகாரம்'' சிலம்புகள் போல மெல்லென ஒலித்து மிழற்றுகின்றது; தமிழ்த்தாய் மொழிகளின் பேரரசியாதலின், தன்னுடைய அரசியல்பு புலனாகும் வண்ணம், தோலாமொழித் தேவர் இயற்றிய சூளாமணி என்னும் காப்பியத்தினைப் பொன் முடியாகச் சூடிப் பொலிந்து விளங்குகின்றாள்; அரசியர் நடாத்தும் நீதியும் நேர்மையும் மிக்க ஆட்சி முறையின் அருமைப்பாட்டினைத் திறம்படக் குறிக்கும் அடையாளமாகத் திகழ்வது செங்கோல்! ஆதலின், தமிழ்த்தாய் ஆகிய பேரரசி உலகிலேயே நீதி நூல்களுள் தலைசிறந்த நூல் ஆகிய திருக்குறள் என்னும் தெய்வத் திருநூலினைத் தன்னுடைய செங்கோலாகத் தாங்கி அரியணை வீற்றிருக்கின்றாள்.

''காதொளிரும் குண்டலமும், கைக்குவளை
யாபதியும், கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியும், மெல்லிடையில்
மேகலையும், சிலம்பார் இன்பப்
போதொளிர்பூந் தாளிணையும், பொன்முடி
சூளாமணியும், பொலியச் சூடி,
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடு வாழ்க''.

—சுத்தானந்த பாரதியார்.

**முடிவுரை :**

இவ்வரிய இனிய பாடலின்கண் நீதி நூல்களுள் தலை சிறந்த திருக்குறள், நீதி ஒளிரும் செங்கோலாக உருவகம் செய்யப் பெற்றிருப்பது, எத்துணைப் பொருத்தமும் சிறப்பும் மிக்கது என்பது சொல்லாமலே விளங்கும்! திருக்குறளின் சிறப்பினைச் செவ்விதின் விளக்குதற்கு இப்பாடல் ஒன்றே சாலும் அன்றோ!

# மறவாதீர்கள்:

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்றாலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |



இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

# திருக்குறளின் சொற்பொருட் சிறப்பு!

தமிழ்ச்செல்வன்

## முன்னுரை :

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்திருந்தவர். ஆயினும் அவர் தம் திருக்குறள் இன்றும் அழியாச் சிறப்பினதாக அமைந்து விளங்குகின்றது. காலத்தாற் பெரிதும் பழமையுடையதெனினும், கருத்துக்களால் மிகவும் புதுமை பெற்றுத் திருக்குறள் பொலிகின்றது. இவ்வாற்றால் 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே' என விளங்கும் இறைவனைப் போன்று, திருக்குறள் இணையற்றுத் திகழ்கின்றது.

ஏறத்தாழ நானூறு ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர்த்தான், ஷேக்ஸ்பியர், சாசர் போன்ற ஆங்கில நாட்டுப் புலவர்கள் விளங்கியிருந்தனர். ஒரு சில நூற்றாண்டுகளே முற்பட்ட இப்புலவர்கள் எழுதிய அண்மைக்கால நூல்களின் மொழி நடையேகூட, பல வகைகளில் எவ்வளவோ மாறுபட்டும், வழக்கிழந்தும், சிதைந்தும் இருக்கக் காண்கின்றோம்.(1)

## திருக்குறளின் சிறப்பு :

ஆனால், நம் அருமைத்திருக்குறளோ, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இயற்றப்பட்டதாயினும், இன்று இயற்றப்பெற்றது போலவே, யாவருக்கும் தெளிவுறப் புரியும் வண்ணம், மாறுதல் சிறிதும் அடையாமல், எளிய இனிய நடையில், ஓரசை ஈரசைச் சொற்களாலேயே பெரிதும் இயன்று, பளிங்கென விளங்கவல்லதாகச் சுடர்விட்டு ஒளிர்கின்றது. உலகில் வேறு எந்த நாட்டிலும், வேறு எம்மொழியிலும், இங்ஙனம் இரண்டாயிரம்ஆண்டுகளாகியும், எத்தகைய சிறிய மொழி நடை மாறுதலையும் எய்தாமல், மக்களிடையே பெருகப் பரவி வழங்கி வரும் நூல் ஒன்றினைக் காண்டல் அரிது. இஃதொன்று தானே, திருவள்ளுவரின் பெருமையினையும், திருக்குறளின் சிறப்பினையும் உணர்த்தப் போதிய தெளிவான சான்று ஆகும்.(2)

## திட்டநுட்பம் :

ஓவியப் புலவன் தூரிகை கொண்டு பல்வேறு காட்சிகளைத் தீட்டிக் காட்டுகின்றான்; அதுபோலவே காவியப் புலவன் தன் கற்பனைத் திறனால் பல்வேறு உணர்ச்சி நிலைகளைச் செவ்விதின் வெளிப்படுத்தி விளக்குகின்றான். ஓவியப் புலவனுக்குப் பலதிற வண்ணங்களும் கோடுகளும் பயன்படுமாறு போன்று, காவியப் புலவனுக்குச் சொற்களும் இலக்கண முறைகளும் உதவி புரிகின்றன. உலகப் பெருங் கவிஞர்களில் தலைவர் ஆகிய திருவள்ளுவர், தம்முடைய திருக்குறளில் ஒவ்வொரு சொல்லும் எழுத்தும் அசையும்கூட, மிகவும் பொருள் பொதிந்து விளங்கும் வண்ணம், அழகுற ஆராய்ந்து அமைத்திருக்கின்றார்:

## சொற்பொருட் செறிவு :

திருக்குறளில் ஒரு சிறு சொல்கூட, வறிதாகப் பொருளின்றி அமைக்கப்படவில்லை. ஒவ்வொரு சிறு அசையும்கூடப் பொருள் சிறந்து பொலிந்து நிற்கின்றது, திருவள்ளுவர் தம் கருத்துக்களையும், அகவுணர்ச்சிகளையும், அறிவுரைகளையும், எத்துணையோ பலபல நுட்ப முறைகளைக் கடைப்பிடித்துத் திட்பமுற உணர்த்துகின்றார். நவில்தொறும் நயம் பயக்கும் நலமிக்கதாகத் திருக்குறள் திகழ்கின்றது. தொட்டனைத்தூறும் மணற்கேணி போல, ஆராய, ஆராய அதன் கருத்துக்கள் ஆழ்ந்து விரிவடைந்து கொண்டு செல்கின்றன. 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்பதற்கு ஏற்ப, நாம் திருக்குறளை ஆராய்ந்து அறியுந்தோறும், நம்முடைய அறியாமையே புலப்படுகின்றது. திருக்குறளின் கருத்து வளம் சிந்தனைக்குப் பெருவிருந்தாகும். திருவள்ளுவர் தம் நுண்மாண் நுழை புலனால், ஒவ்வொரு சிறு சொல்லும் அசையும்கூடச் சிறந்த பல நுட்பக் குறிப்புகளை உட்கொண்டு ஒளிரும் வண்ணம், தம்முடைய நூலை இயற்றியருளியிருக்கின்றார். அதனை விளக்க ஒரு திருக்குறளை மட்டும் ஈண்டுக் காண்போம்.

---

(1) "Just compare the language of Caedmon, of Langland, of Chaucer, of Shakespeare, of Milton and of Tennyson, one with the other, and see to what great an extent the language of one poet differs from that of the other."

—MARAIMALAI ADIGAL

(2) "The Tamil words that are more than seven thousand years old, have not under gone any change in the mouths of the latter. The sacred kural written two thousand years ago, is intelligible even now to an illiterate rustic. Does not this indicate the great vitality of Tamil?"

—MARAIMALAI ADIGAL

''கற்றதனால் ஆய பயன்என்கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்''

எனவரும் திருக்குறளை அனைவரும் அறிவர். மெய்யுணர்வினையுடைய இறைவனது நல்ல திருவடிகளை வணங்கமாட்டார்கள் என்றால், எல்லா நூல்களையும் கற்றவர்க்கும், அக்கல்வி அறிவான் ஆகிய பயன் யாதும் இல்லை என்பது இத்திருக்குறளின் பொருள்.

(1) கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல் என்பதே, தாம் கூற விழையும் கருத்தாயினும், திருவள்ளுவர் அதனை அங்ஙனம் நேரே கூறி முடித்து விடாமல், ''பயன்என்கொல்?'' என வினவி, நமக்குள் நாமே சிந்திக்கும்படி வைக்கின்றார்.

(2) கல்வியின் பயன் என்னாமல், ''கற்றதனால் ஆய பயன்'' என நீட்டி விரித்துப் பெருக்கி முழக்கிக் கூறுவதனால், 'கலை கலைக்காகவே' என்பாரையும், பொருளீட்டல் தொழிலியற்றல் போன்ற செயல்களே கல்வியின் பயன் என்பாரையும் மறுத்து, இவற்றுக்கெல்லாம் முடிந்த முடிபான மிக மேலான பயன் ஒன்று உண்டு என்று சுட்டினார். 'கலை கலைக்காகவே' (Art for Art's sake) என்பது அயலவர் கொள்கை. ஆனால் 'கலை கடவுளுக்காகவே' (Art for God's sake) என்பது, நம் தமிழ் முன்னோர்களின் கொள்கை.


(3) இறைவனை 'வாலறிவன்' என்றும், அவனது திருவடிகளைப் பிறவிப் பிணிக்கு மருந்தாதலின், 'நற்றாள்' என்றும், கல்வியின் பயன் வகைகளைப் பண்புற விளக்கியருளினார். ''நின்னிற் சிறந்த நின் தாளிணையவை'' என்றும், ''மறுபிறப்பு அறுக்கும் மாசில் சேவடி'' என்றும் வரும் பரிபாடல் அடிகள், இங்குச் சிந்திக்கற்பாலன.

(4) இறைவனைத் தொழுதல் இன்றியமையாததாயின், அங்ஙனம் தொழுதல் எப்பொழுதோ ஒருமுறை ஓராண்டிற்கேனும், ஒரு திங்களுக்கேனும் அமையும் போலும் என நம்மனோர் எண்ணுமைப் பொருட்டு, இறைவனை நாம் இடையறாது எப்பொழுதும் நீள நினைந்து தொழுதல் வேண்டும் என்னும் குறிப்பினைத் 'தொழாஅர்' என்னும் அளபெடையின் அமைப்பினாற் புலப்படுத்தினார். இங்கே அளபெடை இசை நிறைப்பதற்கு மட்டுமேயன்றி, இடைவிடாமல் தொழுதல் ஆகிய குறிப்புப் பொருளையும் உணர்த்தி வந்தது.

(5) 'தொழாஅர் எனின்' என்னும் 'செயின்' என்னும் வாய்பாட்டு வினையெச்சம், 'தொழாதிருத்தல் கூடாது' என்பதனைக் குறிப்பிற் புலப்படுத்துகின்றது.

**முடிவுரை :**

இதுகாறும் கூறியவாற்றால், திருக்குறளின் சொற்பொருட் சுவைநலங்களின் சிறப்பு, இனையதென்று யாவரானும் ஓரளவேனும் உணரப்பெறும். இத்தகைய சிறப்புடைய திருக்குறளைப் பெற்றிருப்பது தமிழ் மக்களாகிய நம்முடைய பெறலரும் தவப்பேறேயாகும். ஆதலின் நாம் அனைவரும் அப்புனிதப் பெருநூலை நனிமிக ஓதியுணர்ந்து, நலம் பலவும் எய்த முயலுவோமாக!



திருமயிலைக் கபாலீசுவரர் திருக்கோயிலின் கருணை இல்லம்

# நான் எங்கே போகிறேன்?

கே.எஸ்.ஜெகன்னதன்

நான் எங்கே போகிறேன். அது எனக்குத் தெரியவில்லை. தெரியாத இடத்திற்குப் புரியாத தூரம் போகிறேன்.

புரிந்து விட்டால் போகும் தூரம் தெரிந்து விடும்.

தெரிந்துவிட்ட இடத்திற்குப்போவது என்பது புதியதல்ல.

மனம் போன போக்கிலே போகிறேன். அந்த மனம் எங்கே போகிறது? இன்னும் தெளிவாகவில்லை.

தெளிவாகாத இடத்தை நோக்கி மனம் போகிறது.

மனம் போனபடி போவது தவறு என்பது புரிகிறது.

ஆனல் அந்த மனத்தைக் கொடுத்தவன் தானே போகச் சொல்கிறுன்.

மனத்துக்குள்ளே இருந்து அவன் கட்டளையிடுகிறுன். மனம் புலன்களைத் தூண்டுகிறது. புலன்கள் நம்மை இயக்குகிறது.

இயக்கத்திற்கு மூல காரணமானவனே இறைவன். அவன் ஆட்டுவிக்கின்றுன். நாம் அதன்படி ஆடுகிறேம்.

நன்மைகளைச் செய்பவனும் அவனே.

நன்மைகளைத் தரும் அவனே துன்பங்களையும் தருகிறுன்.

துன்பங்களைத் தரும் அவனே இன்பங்களையும் அளிக்கிறுன்.

அடிக்கின்ற கையும் அவனுடையதே. அணைக்கின்ற கையும் அவனுடையதே.

கோபமிருக்கும் இடத்திலேதான் குணம் இருக்கும்.

கோபமும் குணமும் இணைந்திருப்பதால் தான் மனிதத் தன்மை இன்னும் சாகாமலிருக்கிறது.

இரண்டும் வேறுபட்டால் மனிதன் தன்மையை இழக்கிறுன்.

தன்மையை இழந்த மனிதன் தகாத செயல்களைச் செய்கிறுன்.

ஆண்டவனுல் படைக்கப்பட்ட நான்அவன் அருளுக்குப் பாத்திரமாகும்படி காரியங்கள் செய்கிறேமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

எண்ணிப்பார்க்கும் மனம் வந்துவிட்டாலே வாழ்வில் எப்படிப்பட்ட தவறு இழைப்பினும் திருந்தி மீண்டும் நல்வழியில் வாழும் உள்ளம் தானுக வந்துவிடும்.

தானுக வராமல் ஏதோ ஒரு சபல எண்ணங்களுக்காக மாறினுல் அது சாசுவதமல்ல.

சாசுவதமல்லாத எதையும் எண்ணிப்பாராமல் செய்துவிடக் கூடாது.

நன்மை தீமைகளைக் கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும்.

விடை தானுக வரும். கணக்கு சரியாக இருக்கும்.

கணக்கே தவறுனுல் விடை எப்படி வரும்!

அது போலத்தான்.

நான் எண்ணும் எண்ணங்கள் சரியானதாக அமைய வேண்டும்.

அப்படி அமைந்தால் தான் செய்யும் எதுவுமே செயலாகும்.

செயலாகும்போது நிரந்தரமானது என்பது உறுதியாகும்.

உறுதி இல்லாத எதுவுமே இறுதி ஆவது இல்லை.

உறுதியும் இறுதியும் இல்லாத எண்ணங்களால் யாருக்கும் பயன் ஏற்படப் போவது இல்லை.

பயன் தராத எண்ணங்கள்.

பாலைவனத்து நீராகும்.

பகலவன் மேல் அன்பு இல்லாத கமலம் மலருமா?

பால் நிலவிடம் பிரியம் கொள்ளாமல் பத்மம் இதழ் விரிக்குமா?

இரண்டும் நடக்காது!

ஒன்றின்மேல் ஒன்றில்லாமல் எதுவும் நடைபெறுது.

இயற்கையின் நியதிகளே இப்படி இருக்கும் போது, மனித வாழ்வில் எத்தனையோ சுடர்களும் சூருவளிகளும் வரத்தானே செய்யும்.

சுடரையும் சூருவளியையும் ஏற்படுத்துபவன் அவன்தானே.

அவனில்லாமல் அணுவும் அசையாது என்பது எவ்வளவு உண்மையோ அதுபோலத்தான் அவன் ஆணையிடாமல் எந்தக் காரியமும் நடைபெறுது.

அவனது ஆணையினுல் நடைபெறும் காரியங்களுக்கும் சிலர் தடைக்கல்லாக நிற்கிருர்களே.

தடைக் கற்களை உருவாக்கி வைத்தவனும் அவன்தானே.

வெள்ளத்திற்கு மடை இருக்கிறது. மடை திறந்தால் வெள்ளம் பாய்கிறது.

தடைகளைத் தாண்டி உடைமைகளை அடைவதிலே தான் தனி ஆனந்தம் உருவாகிறது.

ஆனந்தம் அனைவருக்கும் பொதுவானது.

அது ஒவ்வொருவருக்கும் தனியானது.

ஒன்றை உருவாக்குவதிலே ஒருவனுக்கு ஆனந்தம்.

உருவாக்கிய அதை அழித்து வேடிக்கை பார்ப்பதிலே ஒருவனுக்கு ஆனந்தம்.

செயல் வடிவாக்குவதிலே ஒருவனுக்கு ஆனந்தம்.

அந்தச் செயலை நடைபெருதவாறு தடுத்துப் பார்ப்பதிலே ஒருவனுக்கு ஆனந்தம்.

அன்போடு பழகுபவர்களைக் காண்பதிலே ஒருவனுக்கு ஆனந்தம்.

அவர்களை பிரித்துப் பார்ப்பதிலே ஒருவனுக்குத் தணியாத ஆனந்தம்.

இப்படிப்பட்ட வகை வகையான மனிதர்களையும், மனித மனங்களையும் உருவாக்கியவன். அவைகளைத் திருத்த வழிகளைச் செய்வானு?

வழி இல்லாமல் எதுவும் இல்லை.

இல்லாத ஒன்றுக்கு வழி தேட வேண்டிய அவசியம் இல்லை.

கருணையும், மன்னிக்கும் தன்மையும், சாந்தியும் நிறைந்தவனின் இருதயமே கடவுளின் இருப்பிடமாகும்.

தன்மை இல்லாத இதயத்தில் கருணையை எதிர்பார்க்க முடியாது.

சாந்தி நிறைந்தவனைச் சந்ததிகள் வாழ்த்தும்.

வாழ்த்துவதிலே கிடைக்கும் இன்பம் தனியானது.

அது சுவையானது.

சுவையற்ற வாழ்வில் சோர்வே மிஞ்சும்.


சோர்வு மனக்கவலையை வளர்க்கும்.

கவலை கொண்ட மனத்திற்குப் போகும் இடம் தெரியாது.

இப்போதும் கேட்கிறேன் நான் எங்கே போகிறேன்.

அது எனக்கு எப்படித் தெரியும்?

என்னை நடத்திச் செல்லும் அவனுக்குத்தானே அது புரியும்.



# திருவாறன்விளைத் திருக்குறளப்பன்

ந. சுப்புரெட்டியார்
எம்.ஏ., பி.எச்., டி.,

வைணவ தத்துவப்படி வைகுந்த நாதனுகிய நாராயணனே முழு முதற் கடவுள். அவனே எல்லா உலகங்களையும் படைத்தவன். ஒரு காலத்தில் பிரளயத்தில் அழியாமல் காப்பவனும், சில சமயம் தன் திருவயிற்றில் வைத்துப் புரப்பவனும் அவனே. அவனே எல்லாம். இத்தகைய பெருமானை அடைய நம்மாழ்வார் துடித்து நிற்கின்றார்.

''எங்குவந்து உறுகோ? என்னை ஆள் வானே!
ஏழுல கங்களும் நீயே;
அங்கு அவர்க்கு அமைத்த தெய்வமும் நீயே;
அவற்றுஅவை கருமமும் நீயே;
பொங்கிய புறம்பால் பொருள் உளவேலும்;
அவையுமோ நீ; இன்னே ஆனுல்,
மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே;
வான்புலம் இறந்ததும் நீயே''

(உறுகோ—அடைவேன்; கருமம்—காரியம்; இன்னே—இப்படியே; மங்கிய அருவாம் நேர்ப்பம்—புலனுக்குப் புலப்படாது சூக்கும நிலையிலுள்ள பொருள்கள்.)

என்பது பாசுரம். ''என்னை ஆள்கின்றவனே! ஏழுலகங்களும் நீ இட்ட வழக்கு; அந்த உலகங்களிலே அவ்வவர்கட்குச் சமைத்து வைத்த தெய்வங்களும் நீ இட்ட வழக்கு; அந்த அந்தத் தெய்வங்களுக்குச் செய்யப்படுகின்ற ஆராதன உருவமான செயல்களும் நீ இட்ட வழக்கு ; ஒன்றற்கு ஒன்று விரிந்ததாய் அண்டத்துக்குப் புறம்பாய் அதற்குக் காரணமாகவுள்ள மகத்து முதலான தத்துவங்களும் நீ இட்ட வழக்கு ; காரண நிலையில் சுருங்கிக்கிடக்கின்ற சித்து, அசித்துக்களும் நீ இட்ட வழக்கு; பரமாகாசத்தில் இருக்கின்ற, புலன்கட்குப் பொருளாகாத முக்தர்களும் நீ இட்ட வழக்கு; இங்ஙனம் எல்லாமாய் நிற்கும் உன்னை அடியேன் எங்ஙனம் வந்து கிட்டுவேன்?'' என்கின்றார் ஆழ்வார். மேருமலையில் நிற்கும் ஒருவனை ஒரு நொண்டி எங்ஙனம் கிட்டமுடியும்? சென்று கிட்டுகைக்கு உறுப்பான சாத்திரங்களில் விதிக்கப் பெற்ற சாதனங்களைப் பின்பற்றத் தமக்கு ஆற்றலில்லாமையை இதனுல் குறிப்பிடுகின்றார் ஆழ்வார்.

ஆழ்வாருக்கு ஏற்பட்ட பாரிப்பு நமக்கும் சிறிது உண்டாகின்றது. அந்தப் பரமபத நாதனை அர்ச்சையில் கண்டு மகிழலாம் என்று எண்ணுகின்றோம். வாத்சல்யம், சௌலப்பியம், சௌசீல்யம் முதலிய எல்லாக் குணங்களும் முற்றும் பெற்றுத் திகழும் 'அர்ச்சை வாழ்க!' என்று வாழ்த்துகின்றோம். அர்ச்சை வடிவில் தான் எம்பெருமான் நூற்றெட்டுத் திருப்பதிகளில் எழுந்தருளியுள்ளான் என்பதனையும், நம் போலியருக்குச் சேவை சாதித்து உய்விப்பதற்காகவே அங்ஙனம் கோயில் கொண்டுள்ளான் என்பதையும் நாம் அறிவோம். அங்ஙனம் திருவாறன்விளை என்ற திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைச் சேவிப்பதற்கு இன்று சித்தமாகின்றோம்.

திருவாறன்விளை என்ற திவ்வியதேசம் மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று; கேரள மாநிலத்தில் எர்ணுகுளம், கொல்லம் தென்னிந்திய இருப்புப்பாதையில் உள்ள செங்கன்னூர் நிலையத்தில் இறங்கி ஏழு மைல் பேருந்தில் சென்று இவ்வூரை அடைதல் வேண்டும். செங்கன்னூர் மிகச் சிறிய ஊர்; வசதிகளுடன் தங்க வேண்டும் என்று விரும்புகின்றவர்கட்கு அவ்வூர் சரிப்படாது. ஆகவே, அப்பகுதியிலுள்ள ஆறு திருப்பதிகளையும் சென்று சேவிக்க வேண்டும் என்று விரும்புவோர் அதே இருப்புப் பாதையிலுள்ள கோட்டயம் என்ற ஊரில் இறங்க வேண்டும். கோட்டயம் பெரிய ஊர்; எல்லா வசதிகளும் அங்குக் கிடைக்கும். நல்ல உணவு விடுதிகளும் தங்கும் விடுதிகளும் அங்கு உள்ளன. மலை நாட்டுப் பகுதியாதலால் ஊரின் அமைப்பு மேடும் பள்ளமுமாய் இருக்கும். இதனுல் குதிரை வண்டிகளும் சைக்கிள் ரிக்ஷாக்களும் அங்கு இல்லை. ஸ்கூட்டர்களும் வாடகைக் கார்களுமே அங்குக் கிடைக்கும். இத்தகைய வசதிகளைக் கொண்ட கோட்டயத்தில் இறங்கி நம் பொருளாதாரப்படி வசதி அடங்கிய விடுதியில் தங்கி இளைப்பாறுகின்றோம்.

இத்தகைய 'திருப்பதிச் செலவில்' அவசரம் கூடாது. நிதானமாகப் பார்த்து வருதல் வேண்டும். சொந்த வாகன வசதி இருந்தால் இந்த ஆறு திருப்பதிகட்கும் ஒரே நாளில்சென்று சேவித்துத் திரும்பி விடலாம். அத்தகைய வசதி வாய்ப்பு இல்லாதவர்கள் காலையில் ஒரு திருப்பதியும் மாலையில் ஒரு திருப்பதியுமாகச் சென்று சேவித்தல் நன்று. பெரும்பாலும் மலை நாட்டுத் திருப்பதிகளிலுள்ள திருக்கோயில்கள் யாவும் முற்பகல் (7.30—12.00) மணி வரையிலும் மாலை (5.30—8.00) மணி வரையிலுமே திறந்து வைக்கப் பெற்றிருக்கும். பேருந்து வசதிகளிருப்பினும் அவை புறப்படும் நேரம், அவை திரும்பும் நேரம், ஆங்காங்குக் கிடைக்

கும் உணவு வசதிகள் இவற்றைப் பொறுத்தே நம் செலவு நிறைவு பெறுதல் வேண்டும். சொந்த வாகன வசதியில்லாதவர்கள்—கேரள நாட்டிற்குப் புதியவர்கள்—பல்வேறு சங்கடங்களை அநுபவிக்கத் தயாராக இருத்தல் வேண்டும். உடலில் வலுவும், எதையும் சகித்து நிற்கும் ஆற்றலும் உள்ளவர்கட்குக் 'கேரள யாத்திரை' ஆநந்தமாகவே இருக்கும். இயற்கைக் காட்சிகளும் தட்பவெப்ப நிலையும் மனத்திற்குக் களிப்பாக இருக்கும்; சோர்வின்றி யாத்திரையை இனிதாக முடிக்கலாம்.

அதிகாலையில் நன்னீராடித் தூய ஆடையை உடுத்திக் கொண்டு கோட்டயம் புகை வண்டி நிலையத்தை அடைகின்றோம். புகை வண்டி ஏறி இருமருங்கும் வனப்புக் கொழிக்கும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்துக் கொண்டே செல்லுகின்றோம். சற்றேறக் குறையக் காலை ஏழு மணிக்கு வண்டி செங்கன்னூர் நிலயத்தை வந்தடைகின்றது. ஒரு சிற்றுண்டிச் சாலையில் காலை உணவினை முடித்துக் கொண்டு ஒரு பேருந்தின் மூலம் கிழக்கே ஏழு கல் தொலைவிலுள்ள,

''அகலிடம் முற்றவும், ஈரடியே
ஆகும்பரிசு நிமிர்ந்த திருக்குறளப்பன்
அமர்ந்து உறையும்''

(ஈர்அடி—இரண்டு அடி; ஆகும் பரிசு—ஆகும்படி; நிமிர்ந்த—வளர்ந்த; அமர்ந்து—பொருந்தி.)

திருவாறன் விளை என்ற ஊரை அடைகின்றோம். பேருந்தில் வரும்போதும் இயற்கைக் காட்சிகளுக்குக் குறைவில்லை. எங்கும் ஒரே சோலை மயம். தோப்புகளும் துரவுகளும், வாவிகளும், சிற்றாறுகளும் எம்மருங்கும்சூழ்ந்துள்ளமையைக் கண்டு களிக்கின்றோம். நம்மாழ்வாரும், ''அணி பொழில் சூழ் திருவாறன் விளை'', ''நீடுபொழில் திருவாறன் விளை'', ''கரும்பும் பெரும் செந்நெல்லும் வயல் சூழ் திருவாறன் விளை'', ''மலர்ச் சோலைகள் சூழ் திருவாறன் விளை'', ''செழும்பொழில் சூழ் திருவாறன் விளை'', ''யாவரும் வந்து வணங்கும் பொழில் திருவாறன்விளை'' என்று இத் திருப்பதியைக் குறிப்பிட்டுள்ளமையை நினைந்து மகிழ்ந்த வண்ணம் அத் திருப்பதியை அடைகின்றோம். திருவாறன் விளையை அப்பகுதி மக்கள் ஆரன்முளை (ஆரன்முளா) என்று வழங்குகின்றனர்.

இத்திருப்பதி எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் திருவாட்டாற்றுத் திருகோயில் போலவே உயரமான இடத்தில் அமைந்துள்ளது. சுமார் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இத்திருக்கோயில் நாற்புறமும் உயர்ந்த மதில்களால் சூழப்பெற்றுள்ளது. கோயிலில் உட்பிராகாரத்தின் முன்பாக உயர்ந்த கொடிமரம் காட்சி அளிக்கின்றது. ''ஊரும் புள்; கொடியும் அதே'' என்று நம்மாழ்வார் குறிப்பிட்டுள்ளவாறு கருடனை வாகனமாகவும் அவனையே கொடியாகவும் கொண்ட எம்பெருமானல்லவா? இதனால்தான் ஆழ்வாரும், ''மாகம்திகழ் கொடிமாடங்கள் நீடுமதிள் திருவாறன்விளை'' என்றும், ''மலரின் மணிநெடு மாடங்கள் நீடுமதிள் திருவாறன்விளை'' என்றும் குறிப்பிட்டனர் போலும்! திருக்கோயிலை வலம் வருவதற்கு மதிலின் உட்புறம் உள்ள அகன்ற இடப்பரப்பின் நடுவில் திருக்கோயிலைச் சுற்றிக் கற்கள் பரப்பப்பெற்ற நடைபாதை அமைந்துள்ளது. கோயிலின் வடபுறம் 'சான்றோர் கவி எனக் கிடக்கும்' அகன்ற பம்பையாறு செல்லுகின்றது. கோயிலிலிருந்தே ஆற்றிற்குச் சென்று வரப் படிக்கட்டுக்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இப் படிக்கட்டுக்களின் அருகிலேயே கோயிலுக்கு வெளியே ஒரு விசாலமான இடப்பரப்பில் அர்ச்சகரின் இல்லமும் அமைந்துள்ளது. எம்பெருமானுக்குப் பூசனை முதலிய கைங்கரியம் செய்யத் தமக்கு முறை வருங்கால் அர்ச்சகர் மாணியாய் (பிரம்மச்சரியம் காத்து) வாழ வேண்டும் என்ற நியதியிருந்து வருவதாகக் கூறுகின்றனர். நாமும் ஆற்றிலிறங்கிக் கை கால்கள் சுத்தி செய்து கொண்டு திருக்கோயிலுக்குள் நுழையச் சித்தமாகின்றோம். அர்ச்சகரும் ஆற்றில் குளித்து ஈர ஆடையுடன் திருக்கோயிலில் எம்பெருமானுக்குப் பணி புரிகின்றார்.

இத்திருக்கோயில் எம்பெருமானை நம்மாழ்வார் மட்டிலுமே ஒரு பதிகத்தால் மங்களாசாசனம் செய்துள்ளார். வேறு ஆழ்வார்கட்கு இங்கு வருவதற்கு வாய்ப்பு இல்லை. எண்பத்தாறு திவ்விய தேசங்கள் யாத்திரை சென்று வந்த திருமங்கை மன்னனும் இங்கு வரவில்லை போலும். நம்மாழ்வாரின் பாசுரங்கள் ஒவ்வொன்றாக நம் மனத்தில் குமிழியிடத் தொடங்குகின்றன.

''இன்பம் பயக்க, எழில்மலர்
மாதரும் தானும்இவ்ஏழுலகை,
இன்பம் பயக்க, இனிதுடன்
வீற்றிருந்து ஆள்கின்ற எங்கள்பிரான்,
அன்புற்று அமர்ந்துஉறை கின்ற
அணிபொழில் சூழ்திரு வாறன்விளை,
அன்புற்று அமர்ந்து வலஞ்செய்து
கைதொழும் நாள்களும் ஆகும்கொலோ!

(எழில் மலர் மாதர்-இலக்குமி; பிரான்-உபகாரகன்.)

''அல்லி மலர்மகள் போக மயக்குக்களாகியும் நிற்கும் அம்மான்'' என்றவாறு திருவாய்மொழியைச் செவி மடுப்பதற்காக என்றே பெரிய பிராட்டியுடன் எம்பெருமான் ஆனந்த மயனாகத் திருவாறன்விளையில் எழுந்தருளியுள்ளான். 'இன்பம் பயக்க . .இவ்வேழுலகை' என்பதற்கு ஈடு: ''தாய் தந்தையர் இருவரும் சேர இருந்து பரியப்புக்கால் குழந்தைகட்கு ஒரு குறையும் பிறவாது அன்றோ? ஆக, இருவருமான சேர்த்தியாலே தங்களுக்கு ஆனந்தம் உண்டாக, அச்சேர்த்தியைக் காண்கையாலே உலகத்திற்கு ஆனந்தம் உண்டாக, அதனைக் கண்டு, குழந்தை பால் குடிக்கக் கண்டு உகக்கும் தாயைப் போலே இவர்கட்கு உண்டான பிரீதியைக் கண்டு அதனாலே தாங்கள் இனியராய் இருப்பாராயிற்று'' என்பது. 'திருவாய் மொழி கேட்கைக்குப் பாங்காயிருப்பதொரு தேசம் பெற்றோம்' என்று பெறுப்பேறு பெற்றாற் போலவே விரும்பி எழுந்தருளியிருக்கும் தேசம் என்பது தோன்ற 'இனிதுடன் வீற்றிருந்தாள்கின்ற' என்கின்றார். பூம் பொழில்கள் சூழ்ந்த அத்தகைய திருவாறன் விளையை வலம் வருதல்

முதலானவற்றைச் செய்து வழிபடும் நாள் எந்நாளோ என்று பாரிக்கின்ருர் ஆழ்வார். இப்பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றியே அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் இத்திருப்பதியில் விளங்கும் குணத்தை 'ஆனந்த வளர்ச்சி' என்று குறிப்பிட்டார்.

''பிரவணசித்தம் பரத்வ விமுகம் ஆக்கும்
ஆநந்த வீருத்தி, நீணகரிலே''

என்பது சூத்திரம். விருத்தி—வளர்ச்சி, நீள் நகர்—திருவாறன் விளை. பிரவணம்—அன்பு. விமுகம் ஆக்குதல்—வேறுபடுத்துதல். இத் திருப்பதியின் மீது ஆழ்வாருக்குள்ள அன்பு பரத்துவத்தையும் விரும்பாதபடி செய்து விடும் என்பதாகும்.

கோயிலைச் சுற்றி வலம் வருதல் என்பது பண்டிருந்தே வழங்கி வரும் வழக்கமாகும். தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கோயில்களிலும் வழிபாடு செய்யும் மக்களிடையே இந்த வழக்கம் இருந்து வருவதை இன்றும் காணலாம். திருவரங்கம், இராமேசுவரம், சிதம்பரம் போன்ற பெரிய திருக்கோயில்களில் பல பிராகாரங்கள் உள்ளன. இத்தகைய கோயில்களில் உட் பிராகாரங்கள் முற்றிலுமே கல் பரப்பப் பெற்றிருக்கின்றன. பெரும்பாலும் வெளிப் பிராகாரங்கள் (மதுரை மீனுட்சி கோயில் போன்ற ஒரு சில கோயில்களைத் தவிர) இத்தகைய ஏற்பாடுகள் இருப்பதில்லை. கேரள மாநிலத்திலுள்ள பெரும்பாலான கோயில்களில் (திருவனந்தபுரம் போன்ற ஒரு சில கோயில் களைத் தவிர) ஒரே பிராகாரமே உள்ளது. அந்தப் பிராகாரத்தில் கோயிலைச் சுற்றி வலம் வருவதற்கென்றே கல் பரப்பப்பெற்ற நடைபாதைகள் உள்ளன. மேலும் கோயிலை வலம் வரும் வழக்கம் கேரளத்தில் எல்லா மக்களிடமும் தவருது இருந்து வருவதைக் காணலாம். கோயிலை வலம் வருதலில் பேரார்வம் கொண்ட ஆழ்வார்,

''மாகந்த நீர்கொண்டு தூவி
வலஞ்செய்து கைதொழக் கூடுங்கொலோ?''

(மாகந்தம்—சிறந்த பரிமளம்).

என்றும்,

''செழும்பொழில் சூழ்திரு வாறன்விளை
ஒன்றி வலம்செய்ய ஒன்றுமோ?''

(ஒன்றி—கிட்டி; ஒன்றுமோ—கூடுமோ).

என்றும்,

''பொழில்திரு வாறன் விளையதனை,
மேவி வலஞ்செய்து கைதொழக்
கூடுங்கொல்?''

(மேவி—பொருந்தி).

என்றும் இப்பழக்கத்தை மீண்டும் மீண்டும் வற்புறுத்துவதைக் கண்டு மகிழ்க. இங்ஙனம் நாடோறும் வழிபாடு செய்யும் வாய்ப்பு கிடைக்குமோ என்று துடித்து நிற்கின்ருர் ஆழ்வார்.

''நீடு பொழில்திரு வாறன்
விளைதொழ வாய்க்குங்கொல் நிச்சலுமே''

(நிச்சலும்—எப்பொழுதும்).

என்ற பாசுரப் பகுதியில் இத்துடிப்பினைக் காணலாம். இந்தத் திவ்விய தேசத்திற்கு யாத்திரையாக எழுந்தருளும் பக்தர்கள் மேற்கூறிய ஆழ்வாருடைய பாரிப்புக்கு இணங்க நறுமணங் கமழும் சந்தனச் சேற்றைத் திருமதிலிலே தூவி வழிபாடு செய்யும் வழக்கத்தை இன்றும் காணலாம்.

திருவாறன்விளை போக வேண்டும் என்ற ஆழ்வாருடைய பேரவா அடுத்த பாசுரத்தில் தெளிவாகப் புலனுகின்றது.

''கூடுங் கொல் வைகலும் கோவிந்தனை
மது சூதனைக் கோளரியை,
ஆடும் பறவை மிசைக்கண்டு
கைதொழுது அன்றி அவன்உறையும்
பாடும் பெரும்புகழ் நான்மறை
வேள்வி ஐந்து ஆறுஅங்கம் பன்னினர்வாழ்,
நீடு பொழில்திரு வாறன்
விளைதொழ வாய்க்குங் கொல் நிச்சலுமே''

(கூடுதல்—நிறைவேறப் பெறுதல்; வைகலும்—நாடோறும்; ஆடும்பறவை—கருடன்; நீடு—பெரிய; வாய்க்குங்கொல்—கிட்டுமோ; நிச்சலும்—எப்போதும்).

நம்மாழ்வார் எந்தத் திருக்கோயிலையும் நேரில் சென்று சேவிக்கவில்லையென்றும், திருப்புளியாழ்வாரின் திருவடியிலிருந்து கொண்டே எல்லாத் திருப்பதி எம்பெருமான்களையும் பாட்டால் பரவினுர் என்றும் ஒரு கொள்கை நிலவி வருகின்றது. இதனை முன்னரும் குறிப்பிட்டுள்ளோம். இப்பாசுரத்தில் 'ஆடும் பறவை மிசைக்கண்டு' என்பதற்கு நம் பிள்ளை அருளியிருக்கும் சிறப்புப் பொருள் இன்சுவை மிக்கது: ''திருவாறன் விளையைக் குறிக்கோளாகக் கொண்டு எம்பெருமானைக் காண வேண்டும் என்று நாம் (ஆழ்வார்) அவ்விடந் தேடிச் சென்ருல், அவன் (எம்பெருமான்) திருநகரியைக் (நம்மாழ்வாரின் இருப்பிடம்) குறிக்கோளாகக் கொண்டு இங்கே நம்மைக் காண வேண்டும் என்று ஆடும் பறவை மிசை ஏறி வருவனே; அன்னவனை நடுவழியிலே கண்டு'' என்பதாக. ஆழ்வார் எம்பெருமான் மீது கொண்டுள்ள பேரவாவை விட எம்பெருமான் ஆழ்வார்மீது பன்மடங்கு பேரவாக் கொண்டிருந்தான் அன்ருே? 'ஆடு' என்பதற்கு வெற்றி என்று பொருள் கொள்ளலாம். எம்பெருமானின் வெற்றிச் செயல்களிலெல்லாம் பங்கு கொண்டவனன்ருே பெரிய திருவடி? அன்றியும், 'சர்வேசுவரனின்வாகனம்என்கின்ற உவகை மிகுதியினல் கட்குடியர் போன்று களித்து ஆடா நின்றுள்ள திருவடி தோளிலே கண்டு' என்ற பொருள் இன்னும் சிறக்கும். பாசுரத்தின் இறுதியில் 'வாய்க்குங்கொல் நிச்சலும்' என்றிருந்தும் தொடக்கத்தில் 'கூடுங் கொல் வைகலும்' என்றிருப்பது ஆழ்வாரின்

ஆதராதியைத்தையும் (அதிகமான பரிவையும்) விரைவு மிகுதியையும் காட்டுகின்றது.

''எய்தா நின்கழல் யான்எய்த, ஞானக்
கைதா; காலக் கழிவுசெய் யேலே''

என்று வேண்டினவரன்றோ?

இருந்த இடத்திருந்து கொண்டே எம் பெருமானை மனத்திலே நினைக்கும் படியான பேற்றினை ஆழ்வார் அவாவி நிற்கின்றார் என்பது அடுத்த பாசுரத்தாலும் அறியக் கிடக்கின்றது.

''வாய்க்குங் கொல் நிச்சலும் எப்பொழு
தும்மனத்து ஈங்கு நினைக்கப்பெற
வாய்க்கும் மணிநிறக் கண்ண
பிரான்றன் மலரடிப் போதுகளே''

(நிச்சலும்—எப்பொழுதும்; எப்பொழுதும்—இடையீடின்றி; மலரடிப் போதுகள்—திருவடித் தாமரைகள்).

திருவாறன்விளை சென்று அநுபவிக்கும் பேறு இல்லையாயினும், ஆழ்வாருக்குக் கவலையில்லை. திருப்புளியாழ்வாரிடமிருந்து கொண்டாகிலும் அவன் திருவடிகளை நிரந்தரமாக இடைவிடாது சிந்தனை செய்யும் பேறு வாய்க்குமோ என்று துடிக்கின்றார் ஆழ்வார். 'நிச்சலும்' என்று சொல்லி எப்பொழுதும்' என்றுமீட்டும் சொல்லியதன் கருத்தினை விளக்கும் ஈடு காண்மின் : ''நித்யாக்நி ஹோத்ரம் போலே ஒரு கால விசேஷத்திலாய்ப் போக வொண்ணாது; எல்லா அவஸ்தைகளிலும் உண்டாகவேண்டும்'' என்று. ஒருவர் நாள்தோறும் அக்நிஹோத்திரம் பண்ணுகிறார் என்றால், இரவும் பகலும் அதுவே செயலாக இருக்கிறார் என்பது இல்லை. ஒருநாளைக்குச் சிறிது நேரம் அதனை மேற்கொண்டாலும் அங்ஙனம் மேற்கொள்பவருக்கு 'நித்திய அக்நிஹோத்திரி'' என்ற பெயர் வந்து விடுமல்லவா? அங்ஙனம் ஆகாமல் எம் பெருமானை அநவரதமும் நினைக்கப் பெற வேண்டும் என்பது ஆழ்வாரின் திருவுள்ளம்.

இவ்விடத்தில் மனிதனிடம் இயல்பாக அமைந்துள்ள பண்பு நினைவு கூர்தற்பாலது. பள்ளிச் சிறுவன் ஒருவன் பள்ளி ஆண்டு விழாவின்பொழுது நடைபெற இருக்கும் நாடகத்தில் பங்கு பெற வேண்டும் என்பது ஏற்பாடு. அதற்காக அவனுக்கு நாள்தோறும் பயிற்சி தரப் பெறுகின்றது. நாடக உரைகளை மனப்பாடம் செய்தல், நடித்தல், நாடக உடையின்றியும் உடையுடனும் நடித்தல் என்றெல்லாம் பல படிகளில் பயிற்சி பெற்று வருகின்றான் சிறுவன். பள்ளி ஆண்டு விழாவில் நடிப்பதால் பெறுகின்ற அநுபவத்தைக் காட்டிலும், நடிக்கப் போகின்ற மனோரதத்தால் (விருப்பம்) அவன் பெறற்கு அரிய பேரின்பம் பெற்று வருகின்றான். இதனை நாம் அன்றாட வாழ்வில் காணலாம். இத்தகைய மனோரதம் வளர்ந்தவர்கட்கும் ஏற்படுவதுண்டு. இதனை ஈட்டின் ஆசிரியர் நம்பிள்ளை ஜிதந்தா சுலோகம் ஒன்றினைக் கொண்டு சுவைபட விளக்குகின்றார். ''நாட்டார் மனோரதம் என்றும், அநுபவம் என்றும் இரண்டாகவிறே சொல்லிப் போருவது? எனக்கு இதெல்லாம் வேண்டா; இம்மனோரத மாத்ரத்தாலே கிருத கிருத்யன் நான். சரீர சம்பந்தம் அற்றுப் பரம பதத்திலே போய் ஏற்றமாக அநுபவிக்கு மதிற்காட்டில் நான் பேறாக நினைத்திருப்பது இத்தையே'' என்பதாக.

இந்த இடத்தில் இளையாற்றுக்குடி நம்பி என்ற பரம பக்தருடைய வாழ்க்கைக் குறிப்பும் அருளிச் செய்யப் பெற்றுள்ளது; ''நம்பி திருநாட்கள் தோறும் கோயிலுக்கு வந்து பெருமாளைச் சேவித்துப் போவாராம். போனால் மறித்துத் திருநாள் வருந்தனையும் அதனையே பொழுது போக்காக நினைத்துக் கொண்டு இருப்பாராம். ஒரு நாள் திருநாளின் வைபவத்தை நினைத்திரா நிற்கச் செய்தே 'அமுது செய்கைக்குப் போது வைகிற்று' என்றார்களாக, 'ஆகில் வருகிற திருநாள் அணித்தாகிறது' என்றாராம். அவர் நூறு வயதும் புகுகையாலே வலிமை குன்றித் திருமுனைத் திருநாளில் பெருமாள் புறப்பட்டருளுகைக்கு உதவ வந்து புகுரப் பெற்றிலர்; பெருமாளும் தேடியருளிக் காணாமல் 'நம் இளையாற்றுக் குடியான் வந்திலன் ; நங்கண்ணுலம் அல்லவோ' என்று திருவுள்ளமானாராம். அவர்தாம் ஆறுந் திருநாளிலே சேவித்திருக்கச் செய்தே 'நாம் உனக்குச் செய்ய வேண்டுவது என்னை என்று கேட்டருள, 'தேவரீர் தந்தருளின சரீரத்தைக் கொண்டு போரக் காரியங் கொண்டேன்; இனிப் போக்குவரத்துக்குத் தகுதி இல்லாதபடி போர இளைத்தது' என்ன, 'வாராய்மெய்யே இளைத்தாயாகில் இங்ஙனே இரு' என்று அருளிச் செய்தார் ; பெருமாள் நடுவில் திருவாசலுக்கு அவ்வருகே எழுந்தருளுங்காட்டில் அவர் திருநாட்டுக்கு எழுந்தருளினார்'', நம்பியின் மனோரதம் ஓயாது எண்ணி மகிழத் தக்கது.

அடுத்து திருவாறன் விளையின் புகழைப் பாடுவதால் ஏற்படும் பலன் சொல்லப்படுகின்றது.

''நீடு மதில்திரு வாறன்விளை
உலக மலிபுகழ் பாடநம் மேல்
வினை ஒன்றும் நில்லா கெடுமே''

(மலி—நிறைந்த; வினை—கருமங்கள்).

என்ற பாசுரப் பகுதியால் இதனை அறியலாம். ''பாபம் போகைக்காகத் தனித்து ஒரு முயற்சி செய்ய வேண்டா; பால் குடிக்க நோய் தீருமாறு போலே நம்முடைய பாபங்கள் தாமே நசித்துப் போம்'' என்ற இன்சுவைமிக்க ஈட்டின் உரை இதனைப் பின்னும் நன்கு விளக்குகின்றது. புகழ் பாடுதல் பால் குடிப்பது போன்ற எளிமையான செயலாகும் என்றவாறு. இதனை ஆழ்வார் அடுத்த பாசுரத்திலும்,

''ஒன்றும்நில் லாகெடும் முற்றவும்
தீவினை யுள்ளித் தொழுமின் தொண்டீர்''

(உள்ளி—நினைத்து).

என்று பின்னும் வற்புறுத்துவதைக் காண்க. மேலும்,

''செழும் பொழில் சூழ்திரு வாறன்விளை
ஒன்றி வலஞ்செய, ஒன்றுமோ,?
தீவினை உள்ளத்தின் சார்வல்லவே''

(ஒன்றி—பொருந்தி; ஒன்றுமோ?—கூடுமோ?; சார்வு அல்ல—பொருத்தமுடையன அல்ல).

என்று கூறுகின்றார். திருவாறன்விளை என்ற திவ்விய தேசத்தினுள் புகுந்த அளவிலேயே நம்முடைய எல்லாத் துன்பங்களும் தொலையும் என்கின்றார் ஆழ்வார்.

இவ்விடத்தில் ஆனையின் நெஞ்சிடர் தீர்த்த எம்பெருமான் செயலை நினைவு கூர்கின்றார் ஆழ்வார். அங்கு எம்பெருமானே திருவாறன்விளையில் நம்போலியரின் துயரையும் தீர்ப்பதற்காகவே சந்நிதி பண்ணிக் கொண்டுள்ளார் என்பது ஆழ்வாருடைய திருவுள்ளம்.

''அன்றி மற்(று) ஒன்றுஇலம் நின்சரணே! என்று
அகல்இரும் பொய்கையின்வாய்
நின்றுதன் நீள்கழல் ஏத்திய ஆனையின்
நெஞ்சுஇடர் தீர்த்தபிரான்
சென்றுஅங்கு இனிது உறைகின்ற
செழும்பொழில் சூழ்திரு வாறன்விளை.''

(சரண்—புகல்; அகல் இரும்—மிகப் பெரிய; பொய்கை—தடாகம்; இடர்—துன்பம்).

என்ற பாசுரப் பகுதி இதனை உணர்த்துகின்றது. ஆனைக்கு இடராவது உயிர் தொலைகின்றதே என்கின்ற இடர் அன்று; மிகவும் சிரமப்பட்டுப் பறித்த மலரை இறைவன் திருவடிகளில் சேர்க்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டதே என்று உண்டான் இடர். அந்த மலரைப் பெறுவதற்காகவே பரமபதநாதன் அலை குலைய நிலை குலையப் பதறி ஓடி வந்தான் என்பது ஆசாரியர்கள் தரும் விளக்கம். கரையில் அர்ச்சை வடிவில் இருக்கும் எம்பெருமான் மலரைப் பெறுவதற்கு நகர்ந்து வர முடியாதல்லவா? இன்னொரு விளக்கமும் உண்டு. 'நம் அடியாக எம்பெருமானுக்கு என்ன அவத்யம் (குறைவு, குற்றம், மாசு) விளைகின்றதோ என்று தோன்றிய இடராகவும் கொள்ளலாம். அஃதாவது, பரம பக்தனான யானையரசனைக் காத்தருளாத எம்பெருமான் இரட்சகன் எனத் தகுதியுடையவன் அல்லன் என்று உலகோர் சித்தாந்தம் செய்து விடப் போகிறார்களே என்று யானை இடர்ப் பட்டதாகவும் கொள்ளலாம்.

அந்த யானையரசனைப் போலவே நம்மாழ்வாரும் திருவாறன்விளை எம்பெருமானைச் சரண் அடைகின்றார்.

''வாணனை ஆயிரம் தோள்துணித்
தான்சரண் அன்றிமற் றென்றிலமே''

(வாணன்—பாணாசுரன் என்ற அசுரன்).

என்ற பாசுரப் பகுதியால் இதனை அறிகின்றோம். ''மறந்தும் புறந்தொழா மாந்தரின்'' தலைவராகிய ஆழ்வார் திருவாறன்விளை என்ற திருப்பதியே தனக்குப் பிராப்யம் (அடைய வேண்டிய இடம்) என்றும், அங்கு உறையும் எம்பெருமானே அதற்கு உபாயபூதன் (கருவியானவன்) என்றும் தம்முடைய கொள்கையை வெளியிடுகின்றார். இத்திருப்பதியின் சுவவை அறியாதார்க்கு மட்டுமே பரமபதம் பிராப்யம் (அடைய வேண்டும் என்ற விருப்பம்) ஆகும். இதன் சுவையறிந்தவர்கட்குப் பரம பதம் ஒரு பொருளாகத் தோன்றாது. எம்பெருமான் இதனைப் பிராப்ய பூமியாக (அடைய வேண்டிய இடமாகக்) கொண்ட பிறகு இதில் ஐயப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்பது ஆழ்வாரது சித்தாந்தம். மேற்கூறிய ஆழ்வாரது கொள்கை,

''தீர்த்தனுக்கு அற்றபின் மற்(று) ஓர்
சரண்இல்லை என்று எண்ணித் தீர்த்தனுக்கே
தீர்த்த மனத்தனன் ஆகிச்
செழுங்குருகூர்ச் சடகோபன்''

(தீர்த்தன்—தூயோன்; அற்றபின்—அடிமை என்று அறுதியிட்டபின்; சரண்—உபாயம்; தீர்த்தன்—இறைவன்; தீர்த்த—அறுதியிட்ட).

என்ற பாசுரப் பகுதியாலும் இது வலியுறுகின்றது. இதுவே இன்னொரு பாசுரத்தாலும் தெளிவு பெறுகின்றது.

''தீவினை உள்ளத்தின் சார்வல்ல
ஆகித் தெளிவிசும்பு ஏறலுற்றால்
நாவின் உள்ளும் உள்ளத்து உள்ளும்
அமைந்த தொழிலினுள்ளும் நவின்று
யாவரும் வந்து வணங்கும்
பொழில்திரு வாறன் விளையதனை
மேவி வலஞ்செய்து கைதொழக்
கூடுங்கொல் என்னும் என்சிந்தனையே''

(உள்ளம்—ஆன்மா; சார்வல்லவாகி—தீண்டாதனவாகி; தெளிவிசும்பு—பரமபதம்; உள்ளம்—மனம்; மேவி—பொருந்தி).

தீயவினைகள் ஆன்மாவைத் தீண்டாதனவாகி நீங்கத் தாம் பரமபதத்தை அடையலுற்றாலும், தம்முடைய திருவுள்ளம் அதனைப் பொருட்படுத்தாது திருவாறன் விளையினைப் பொருந்தி வாழ வேண்டும் என்று நினைக்கின்றது என்று ஆழ்வார் அத்திருப்பதியின் மீது தமக்குள்ள அதிகமான பரிவினை வெளியிடுவதைக் காண்க.

அடுத்து, தான் நினைவில்கொண்டிருப்பதை அனைத்தையும் அறியவல்லரான எம்பெருமான் அறிவான் என்கின்றார் ஆழ்வார். தான் திருவாறன்விளை தீர்த்தனுக்கு அடிமை என்று அறுதியிட்ட பின்புதான் மனமானது வேறு ஒன்றினை நினையாது என்பதை அவன் அறிவான் என்பதை வெளியிடுகின்றார். சிந்தையினால் நினைக்கப்படுவதான வஞ்சனைகள் அவன் அறியாதன ஒன்றுமில்லையன்றோ?

சிந்தைமற்று ஒன்றின் திறத்ததுஅல்
லாத் தன்மை தேவபிரான் அறியும்
சிந்தையினால் செய்வ தானறி
யாதன மாயங்கள் ஒன்றுமில்லை''

(சிந்தை—மனம்; மற்று ஒன்று—பரமபதம்; தேவபிரான்—எம்பெருமான்; மாயங்கள்—வஞ்சனைகள்).

ஈண்டுப் பரமபதம் என்ற பெயர் சொல்லுதலும்கூடத் தமக்கு விருப்பமின்மையின் 'மற்று ஒன்று' என்கின்றார்.

இந்த எண்ணங்களுடன் திருக்கோயிலினுள் நுழைகின்றோம். திருக்குறளப்பன் என்பது இத் திருப்பதி எம்பெருமானின் திருநாமம்; தாயாரின் பெயர் பத்மாசன நாச்சியார் (தாமரையாள்). நின்ற திருக்கோலத்தில் வடக்கே திருமுகமண்டலம் கொண்டு எழுந்தருளியிருக்கும் இந்த எம்பெருமானைச் சேவிக்கின்றோம்; அன்னை யாரையும் வணங்குகின்றோம். அவன் சந்நிதியிலேயே திருவாறன்விளைத் திருப்பதிகத்தை நெஞ்சுருக ஓதி மகிழ்கின்றோம். இந்நிலையில்,

''சென்று புனல் மூழ்கிச்
செய்தவங்கள் செய்தாலும்,
வென்று புலன் அடக்கி
விட்டாலும், இன்தமிழால்
மாறன் விளைத்த
மறை ஓதார்க்(கு) இல்லையே
ஆறன் விளைத்திருமால் அன்பு''.

(புனல்—நீர்; மாறன் நம்மாழ்வார்; மறை—திருவாய்மொழி).

என்ற திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் பாடல் நினைவிற்கு வர, அதனையும் ஓதுகின்றோம். பக்தி உணர்வு நிரம்பிய நிலையில் எம்பெருமானுடைய பிரசாதங்களைப் பெற்று நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.



நாகர்கோவில் அருள்மிகு அழகம்மன் தேவத்தானத்தைச் சார்ந்த நந்தவனத்தில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை ஒட்டி, ஒரு கருணை இல்லம், குமரி மாவட்ட ஆட்சித்தலைவர் உயர்திரு. வி. டி. துரைராஜ், I.A.S. அவர்களால் திறந்துவைக்கப்பெற்றது (3-6-75)

# இந்தியத் தத்துவச் சிறப்பு!

விவேகானந்தன்

158605

இந்தியத் தத்துவம், மிக்க பழமையும் சிறப்பும் வாய்ந்தது. இந்திய நாகரிகத்தைப் போலவே, இந்தியத் தத்துவக் கருத்துக்களும், பலராலும் வியந்து புகழ்ந்து பெரிதும் போற்றப்பட்டுள்ளன. இந்திய நாகரிகச் சின்னங்கள், உருசியாவிலும் சைபீரியாவிலும் பல பகுதிகளில் காணப்படுகின்றன. வட ஐரோப்பாவில் இந்து மன்னர்கள் செய்து வந்ததுபோன்று அசுவமேத வேள்விகள் நடத்தப் பெற்று வந்த மைக்குரிய சான்றுகள் கிடைத்துள்ளன. இந்தியத் துறைமுகங்களிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்ற கப்பல்கள், வெறும் வாணிபப் பொருள்களை மட்டுமேயன்றி, கலை இலக்கியப் பண்பாட்டுத் தூதுவர்களையும்கூட, வெளிநாட்டு அரசப் பேரவைகளை அணி செய்வதற்கு அழைத்துக் கொண்டு சென்றன. லிதுவேனிய நாட்டில் இன்றும்கூடப் பல இந்து சமயச் சடங்குகளும், பழக்க வழக்கங்களும், கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. லிதுவேனிய நாட்டில் ஓடும் தப்தி (Tapti), நெமுனு (Nemuna), சுரோபதி (Srobati), நர்புதே (Narbudey) என்னும் நதிகளின் பெயர்கள், முறையே தபதி யமுனை சரசுவதி நர்மதை என்னும் இந்திய நதிகளின் பெயர்களைத் தழுவியே அமைந்திருக்கக் காண்கிறோம். இங்ஙனமே லிதுவேனிய இனப் பெயர்கள் ஆகிய குரு, புரு, யதவ், சுதவ் என்னும் பெயர்களும், இந்திரா, வருணு, புரகன்யா (பர்ஜன்யன்) என்னும் கடவுளர்களின் பெயர்களும், இந்தியப் பெயர்களைத் தழுவியே அமைந்துள்ளன.

பாரசீகம் துருக்கி அலெக்சாண்டிரியா என்னும் மூன்று இடங்களும், பண்டைக் காலத்தில் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள், சமயம் தத்துவம் அறிவியல் முதலியன பற்றிய தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு உரிய, முதன்மையான மைய இடங்களாகத் திகழ்ந்தன. அவ்விடங்களில் இந்திய அந்தணர்கள் பலர் இருந்து வந்தனர் என்பதற்குக் கிரேக்க பாரசீக பாரம்பரியங்கள் சான்று பகர்கின்றன. இவ்வுண்மையினை மாக்சு முல்லர், கார்பே, விண்டர்நிட்சு போன்ற பேரறிஞர்களின் ஆராய்ச்சிகளும் வலியுறுத்துகின்றன.

உலகின் எல்லாப் பொருள்களும் நீரில் இருந்தே தோன்றுகின்றன என்று தேல்சும் (Thales 600 B.C), எல்லையற்ற ஆகாயத்தினின்றே யாவும் தோன்றின என்று அனக்சிமாண்டரும் (Anaximander), காற்றிலிருந்தே எல்லாப் பொருள்களும் தோற்றமுற்றன என்று அனக்சிமெனிசும் (Anaximenes) போன்ற கிரேக்கப் பேரறிஞர்கள் கூறிய தத்துவக் கருத்துக்கள், நம்முடைய இந்தியத் தத்துவ நூல்களை அவர்கள் கற்றிருந்தனர் என்பதனைப் புலப்படுகின்றன. ''எல்லாப் பொருள்களும் நெருப்பின் பரிணுமங்களே; எல்லாப் பொருள்களும் நெருப்பினின்றே தோன்றின; பின்னர் அதனிடமே திரும்புகின்றன'' என்று இராக்ளிடசு (Heraclitus, 500 B.C) கூறுவது, சாந்தோக்கிய உபநிடதத்திலுங் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொருள்கள் என்றுமுள்ளவை, அழிக்க முடியாதவை'' என்று எம்பிடாக்ள்சு (Empedocles, 450 B.C) கூறியிருப்பது, நமது இந்திய நாட்டில் சாங்கிய தத்துவம் கூறும் சற்காரியவாதமேயாகும். இவ்வாறே சனேஃபான்சு (Zenophanes, 450B.C) என்பவர் ''கடவுளும் உலகமும் ஒன்று; அவைகள் மாறுதலற்ற நித்தியப் பொருள்கள்'' என்று கூறுவதும், நம்முடைய இந்திய நாட்டு அத்துவைதக் கொள்கையையே வலியுறுத்தி நிற்கின்றது. பித்தாகரசு (Pythogoras, 580 B.C.) என்னும் பேரறிஞர் ''மறுபிறவி உண்டு'' என்பது, அவர் இந்தியத் தத்துவ நூல்களைப் பயின்றிருந்தார் என்பதனை வெளிப்படுத்துகின்றது. அவரது புகழ் பெற்ற 47-ஆம் தேற்றம், போதாயனரின் சுலுவசூத்திரங்களில் ஒன்ருகக் காணப்படுகிறது. சாங்கிய தத்துவக் கொள்கைகளுக்கும், பித்தாகரசின் தத்துவக் கருத்துக்களுக்கும் இடையே உள்ள ஒப்புமைகளை, சோன்சு (Jones), கோல்புருக் (Colebrook) ஷ்ரேடர் (Schrader) முதலிய அறிஞர்கள் விரிவாக விளக்கியுள்ளனர்.

புகழ்மிக்க கிரேக்க ஞானியாகிய சாக்ரடீஸ் (கி.மு. 469-399) வாழ்ந்துகொண்டிருந்த காலத்தில், 'இந்திய அறிஞர்கள் ஏதன்சு நகரத்திற்குச் சென்று வரும் வழக்கம் இருந்தது' என்று மாக்சு முல்லர் குறிப்பிடுகின்ருர். சாக்ரடீஸ் தம்முடைய தத்துவக்கொள்கை மனித வாழ்க்கை பற்றி ஆராய்வதுதான் என்று தெரிவித்தபோது, இந்தியத் தத்துவ

ஞானி ஒருவர் அதனைக் கேட்டுப் புன்முறுவல் பூத்து, 'முதலில் தெய்விகப் பொருள்களைப் புரிந்து கொள்ளாத எவரும், மனித இயல்புகளை அறிந்து கொள்ளுதல் இயலாது' எனக் குறிப்பிட்டார் என்று, மாக்சுமுல்லர் வரைந்துள்ளார். சாக்ரடீஸின் சிந்தனைகள், இந்தியத் தத்துவக் கருத்துக்களால் எத்துணை ஆக்கம் பெற்றது என்று உன்னித்துணர்வதற்கு, இச்செய்தி ஒன்றே அமையும். சாக்ரடீஸின் மாணவராகிய பிளாட்டோ ( Plato, 427-347 B.C. ) என்பவர், மறுபிறவிகள் ( Metempsychosis ) உண்டென நம்பினர். அவரது கருத்துக்கள் பல, சாங்கியத் தத்துவக் கருத்துக்களோடு பெரிதும் ஒத்துள்ளன. தேரிழுக்கும் குதிரைகளும், தேரோட்டும் சாரதியும் பற்றிய பிளாட்டோவின் உவமையானது, உடம்பு ஒரு தேர்; ஆன்மா அத்தேரின் சாரதி; ஐம்பொறிகள் தேரில் மாட்டப்பட்ட குதிரைகள்; மனம் அவற்றின் கடிவாளம்;'' எனவரும் கடோபநிடதக் கருத்தைத் தழுவி அமைந்துள்ளது. அவர் குடியரசு ( Republic ) என்னும் நூலில் தெரிவித்துள்ள கருத்துக்கள் பல, இந்திய வேதாந்த நூல்களின் எதிரொலிப்பேயாகும். குடியரசு என்னும் நூலின் 7-ஆம் பகுதியில் பிளாட்டோ கூறிய குகை உவமை, இந்திய நினைவூட்டுகின்றது. இத்தகைய ஒப்புமைகள் தற்செயலாக அமைந்தவை அல்ல என்று இராலின்சன், மாக்சு முல்லர், ரிச்சர்ட்கார்பே முதலிய ஆராய்ச்சியறிஞர்கள் வலியுறுத்துகின்றனர்.

கி.மு. 3ஆம் நூற்றாண்டின் இறுதியில், எகிப்திய நாட்டுத் தாலமி அரசர்களது ஆட்சியின் கீழ் அலெக்சாண்ட்ரியா நகரம், மிகவும் புகழ் பெற்ற கல்வி கலைப்பண்பாட்டு நகரமாக விளங்கியது. அங்கே இந்திய அந்தணர்களும் பௌத்தர்களும் நிரம்பச் சென்று வாழ்ந்திருந்தனர். அவர்களால் கிறித்தவ ஞானக் கொள்கையும் ( Gnosticism ), புதிய பிளாட்டானியக் கொள்கையும் ( Neo-Platonism ) ஆக்கம் பெற்றன. பிளினி என்னும் அறிஞர், தம்முடைய இயற்கை வரலாறு (Natural History) என்னும் நூலில் சிரியா, பாலஸ்தீனம், எகிப்து ஆகிய நாடுகளில், இந்தியப் பௌத்தர்கள் மிகுதியாகச் சென்று குடியேறி வாழ்ந்து வந்தனர் எனக் கூறுகின்றார்.

அலெக்சாண்ட்ரிய நகரத்தில், மகாயானப் பௌத்தக் கொள்கைகள் பல பரவியிருந்தன. புதிய பிளாட்டானியக் கொள்கையின் தலைசிறந்த விளக்குநர் ஆகிய பிளாட்டினஸ் ( Plotinus ) என்பவர், இந்திய ஞானிகளின் மெய்யுணர்வு நூல்களைக் கற்பதில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் தம் ஞானாசிரியராகிய அம்மோனியஸ் (Ammonius ) துறவு வாழ்க்கையை மேற்கொண்டு, தியானத்திலேயே பெரிதும் அழுந்திச் சமாதிநிலை கைவரப் பெற்றிருந்தார். உண்மை நன்மை அழகு என்று ( Truth–Goodness-Beauty) பிளாட்டினஸ் கடவுளைக் குறிப்பிடுவது, உபநிடதங்கள் சத்து சித்து ஆனந்தம் (சத்தியம்-சிவம்-சுந்தரம்) என்று இறைவனைக் குறிப்பிடுவதைப் போல உள்ளது. மற்றும் அவர், ''இறைவனை இன்ன தன்மையன் என்று நம்மாற் கூறொணாது; ஆனால் இன்னதன்மையன் அல்லன் என்று நாம் கூறுதல் இயலும்'' என்று குறிப்பிட்டு இருத்தல், உபநிடதங்கள் இறைவனை இதுவன்று இதுவன்று (நேதி, நேதி) என்று அன்மைச் சொல்லினாற் கூறுதலை நினைவூட்டுகின்றது. போர்ஃபைரி ( Porphyry, 232-304 A.D. ) என்னும் அவர்தம் மாணவர், தமது ஞானாசிரியராகிய பிளாட்டினஸை விட, இந்தியச் சிந்தனையில் பெரிதும் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். அவர் தம்முடைய நூலொன்றில், ஒரு பௌத்த மடத்தின் வாழ்க்கையமைப்புப் பற்றியும், மேற்கிந்தியக் குகைக் கோவில் ஒன்றில் தாம் கண்ட சிவ பெருமானின் அர்த்த நாரீசுவர வடிவம் பற்றியும், மிக நுண்ணிய முறையில் விரிவாக விளக்கியுள்ளார். பௌத்தர்களைப் போலவே, அவர் கொலையையும் புலையையும், இகழ்ந்து ஒதுக்கியதுடன், சமயச் சடங்குகளில் கொலை வேள்விகள் கூடாதெனவும் வற்புறுத்தியுள்ளார்.

இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சிக்கும் விரிவுக்கும், பௌத்த மதம் ஒரு பெருந்தூண்டுதலாகத் திகழ்ந்தது. புத்தர் பெருமானின் திருப்பெயர், அவர் மறைந்த ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு பாக்டீரியா நகரை அடைந்தது. கி.மு. முதல் நூற்றாண்டில் அங்கு பௌத்தர்கள் மிகுதியாக வாழ்ந்திருந்தனர் என்று, மாக்சு முல்லர், மெக்கன்சி போன்ற அறிஞர்கள் கூறுகின்றனர்.

தொடரும்

# நாராயணாய என்னும் நாமம்!

'தொண்டர் அடிப்பொடி'

''குலம்தரும், செல்வம் தந்திடும், அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரம் செய்யும், நீள்விசும்பு அருளும்,
அருளொடு பெருநிலம் அளிக்கும்,
வலம்தரும், மற்றும் தந்திடும், பெற்ற
தாயினும் ஆயின செய்யும்,
நலம்தரும் சொல்லை நான்கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.''

—குலசேகராழ்வார்.

**முன்னுரை :**

திருமால் எண்ணில் தொல் புகழ் உடையவர். அவருக்குப் பேரும் ஓராயிரம். திருமாலின் அவதாரங்களையும், அவற்றின் சிறப்பினையும், திருமாலின் எண்ணில்லாத பல குணநலங்களையும் விளக்குவனவாகத், திருமாலுக்கு எத்தனையோ பல பெயர்கள் வழங்கும். அவைகள் அனைத்துமே அப்பெருமானுக்குரிய மந்திரங்களாகத் திகழும். அம் மந்திரங்களை வியாபகங்கள் என்றும், அவ்வியாபகங்கள் என்றும், பெரியோர்கள் குறிப்பிடுவர். வியாபக மந்திரங்களுள் நாராயண, வாசுதேவ, விட்டுணு மந்திரங்கள் மூன்றும், மற்றையவற்றினும் சிறந்தவை. இவை மூன்றினுள்ளும் நாராயண மந்திரமே ஒப்புயர்வற்ற தலைசிறந்த மந்திரமாகும். இதன் அருமை பெருமைகள் அளவிடற்பாலன அல்ல.

**நாராயண நாமம் :**

நாராயண மந்திரத்தைத் திருவெட்டெழுத்து, அட்டாக்கரம், திருமந்திரம், பெரிய திருமந்திரம், நலம்தரும்சொல் என்னும் பல பெயர்களால் பெரியோர்கள் வழங்குவர். இம் மந்திரம் எட்டெழுத்தாய், மூன்று பதமாய் அமைந்திருக்கும். இம் முப்பதங்களுள் முதலில் ஓம் என்பதும், இடையில் நம என்பதும், ஈற்றில் நாராயணாய என்பதும், முறையே இம் மந்திரத்தில் அமைந்திருக்கும். இம்முறையிலேயே இதனை ஓதுதல் வேண்டும்.

உயிர்கள் உய்வதற்கு உறுப்பாக அறிய வேண்டிய எல்லாப் பொருள்களையும், திருமந்திரம் தெளிவுற உணர்த்துகின்றது. உயிர்கள் அறிவதற்குரிய பொருள்கள் ஐந்து. அவற்றை அர்த்த பஞ்சகம் என்பர். அவை முறையே, இறையியல், உயிரியல், நெறியியல், தடையியல் பயனியல் என்பனவாகும். ஓம் என்னும் பிரணவம் உயிரியலையும், நம என்னும் பதம் நெறியியல், தடையியல் ஆகியவற்றையும், நாராயண பதம் இறையியலையும், ஆய என்னும் சொல் பயனியலையும் உணர்த்துகின்றன. ஓம் என்னும் பிரணவம், அ+உ+ம் என்னும் மூன்று ஒலிகளின் சேர்க்கையினால் அமைந்தது. அவற்றுள் அகரம் நாராயணன், மகரம் உயிர், உகரம் பிராட்டி ஆகியோரைக் குறித்து வரும்.

நம பதம், ந, ம : என்னும் இரண்டு எழுத்துக்களால் அமைந்துள்ளது. நம பதத்தால் அறியப்படும் பொருள், உயிர் தன்னைத்தான் காத்துக் கொள்ளுதலில் உரிமையுடையதன்று, நாராயணனே தனிப் பெருங் காப்பாளன் என்கின்ற உணர்ச்சியும்; 'யானே நீ என் உடைமையும் நீயே' என்று அவன் வயப்பட்டிருத்தல் ஆகிய பாரதந்திர உணர்ச்சியும்; 'களைவாய் துன்பம் களையாது ஒழிவாய் களைகண் மற்றிலேன்' என்று அவன் கருணையையே நோக்கி இருக்கின்ற நெறி உணர்ச்சியும்; ''மற்றை நம் காமங்கள் மாற்று'' என்று, தொண்டில் பற்று அற்று வழுவிலா அடிமை செய்தலாகிய பயன் உணர்ச்சியுமாம். அடியார்க்கு அடிமை செய்தலே, இறைவன்பாற் செய்யும் அடிமைக்கு எல்லை நிலமாய் இலங்கும் என்பது, நம என்னும் பதம் உணர்த்தும் நற்பெரும் பொருளாகும்.

**இருவகைப் பொருள் :**

நாராயண என்னும் பதத்தை வேற்றுமைத் தொகையாகவும், அன்மொழித் தொகையாகவும் கொண்டு, இரு வகையில் பொருள் விரித்து உரைப்பர். வேற்றுமைத் தொகையால்தேறும் பொருள், நாரங்களுக்கு அயநம் என்பதாம். நாரங்களாவன அழிவில் பொருள்கள். அயநம் என்பது இருப்பிடம் என்னும் பொருளது. இதனால் அழிவில் பொருள்களுக்கு இருப்பிடமானவன் நாராயணன் என்பது கருத்து. அன்மொழித் தொகையால் கிடைக்கும் பொருள், அழிவில் பொருள்களைத் தனக்கு இருப்பிடமாக உடையவன் என்பதாம். பொருள்களுக்குத் தான் இருப்பிடமாதல் பரத்துவம் (மேன்மை), பொருள்களைத் தனக்கு இருப்பிடமாகக் கொள்ளுதல் சௌலப்பியம் (எளிமை). எல்லாப் பொருள்களினுள்ளும் விரவிக் கலந்து நிற்றல் அந்தர்யாமித்துவம் (கலந்துறையும் தன்மை), அறிவுடைப் பொருள் அறிவில் பொருள்களில், அறிவுடைய சேதனப் பொருள்களுக்கெல்லாம், உபாயம் உபேயம் என்னும் நெறியாகவும் பயனாகவும் நிற்றல் முதலியன, இறைவனுக்குரிய சிறந்த இயல்புகளாகும். பயன்களுள் உறவுமுறையும் ஒன்றாதலால் இறைவனே எல்லா உறவாகவும் விளங்குகின்றான். இவ்வாற்றால் நாராயணன் என்னும் நலம் தருகின்ற சொல், அடியார்களின் தொண்டினை ஏற்றருள்கின்ற இறைவன், மேன்மை எளிமை கலந்துறைதல் நெறி பயன் உறவு என்னும் எல்லா நலங்களும், உடையவனாகத் திகழ்கின்றான் என்பதை நன்கு இனிது உணர்த்தும்.

'ஆய' என்னும் பதத்தின் பொருள், ''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்'' என்று விண்ணப்பித்துக்கொள்ளுகின்றவேண்டுகோள் ஆகும்.

எம்பெருமானுக்கே உரியவனான நான் எனக்கு உரியவன் ஆகாது ஒழிதல் வேண்டும், எல்லார்க்கும் தலைவனான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் நான் செய்தல் வேண்டும் என்பதே, ஓம் நமோ நாராயணாய என்னும் திருவெட்டெழுத்து மந்திரத்தின் திரண்ட சிறந்த பொருளாகும்.

**நவவித சம்பந்தம் :**

திருமாலே புருடோத்தமன், நமக்கெல்லாம் நாயகன். உயிர்களாகிய நாமெல்லாம் அவனை நயந்து அடைய விரும்புகின்ற நாயகி நிலையில் உள்ளவர்கள் ஆவர். நாயகனாகிய அவன் நாயகியராகிய நம்மனோர்க்கு எட்டெழுத்துக்கள் எட்டிழையாய், மூன்று பதங்கள் மூன்று சரடாய் அமைந்த திருமந்திரம் ஆகிய மங்கல நாணை அணிவித்துள்ளான். மகளிர் அணிந்து கொள்ளும் மங்கல நாண், தாம் தம் கணவனுக்கு அன்றி ஏனையோருக்கு உரியரல்லர் என்பதை உணர்த்தும். அங்ஙனமே ஆன்மாக்கள் அணியும் திருமந்திர மாலையாகிய மங்கல நாண், அவைகள் நாராயணன் ஒருவனுக்கே உரியனவாதலை உணர்த்தும். மகளிர் அணியும் மங்கல நாணானது, கணவன், மனைவி (நாயகன், நாயகி) என்னும் ஓர் உறவை மட்டுமே உணர்த்தும். ஆனால் ஆன்மாக்கள் அணிதற்குரிய திருமந்திரமாகிய மங்கல நாணோ, உயிர்களுக்கும் இறைவனுக்கும் உள்ள ஒன்பது வகை உறவுகளைக் குறிக்கும்.

1. தந்தை மகன்
2. காப்பவன்,
   காக்கப்படுவது—அகரப்பொருள்
3. தலைவன் அடிமை
4. நாயகன்நாயகி—உகரப்பொருள்
5. அறிபவன்,
   அறியப்படுவது—மகரப் பொருள்
6. உடையவன்,
   உடைமை—நம: பதப் பொருள்
7. தாங்குவது,
   தாங்கப்படுவது-நாராயண பதப்பொருள்
8. உயிர் உடல்,
9. நுகர்பவன்,
   நுகர்பொருள்—'ஆய' பதப் பொருள்

இறைவன் உயிரோடு இந்த ஒன்பது வகையான உறவுகளை உடையவன் என்பதை, நலம் தரும் சொல்லாகிய திருவெட்டெழுத்து மந்திரம் உணர்த்துகிறது. இவ்வுறவுகளை அறிந்து கொள்ளுதல், உயிர்களின் பேற்றுக்கு இன்றியமையாதது. மனைவியைக் காத்தல் கணவனுக்குக் கடமையாதல் போல, இவ்வுறவுகளை உடைய உயிர்களைக் காத்தருள் புரிதல், இறைவனுக்கு உரிய கடமை என்பதும் இதனால் வலியுறுத்தப் பெறுகின்றது.

**மயக்க வகைகள் :**

இருள் தருமா ஞாலம் எனப் பெரியோர்களால் இழித்து உரைக்கப்பெறும் இவ்வுலகில் வாழ்கின்ற வரைக்கும், நமக்குப் பல வகை மயக்கங்கள் விளைந்து கொண்டே இருக்கும் (1) உடலே உயிர் என்னும் உணர்வு, (2) உயிர் தன் உரிமை உடையது என்னும் நினைவு, (3) உயிர் நாராயணனுக்குப் போலவே மற்றையோர்க்கும் அடிமைப் பட்டிருக்கலாம் என்னும் நினைவு, (4) நாமே நம்மைக் காத்துக் கொள்ளலாம் என்னும் எண்ணம், (5) அடியார்களும் நம்மைப் போன்ற மனிதர்கள் தான் என்னும் நினைப்பு, (6) உற்றார் சுற்றத்தினர்பால் கொள்ளும் பற்று, (7) இறைவனின் திருவுருவங்களை இவை கல் செம்பு என்பவற்றால் அமைந்தவை தாமே, இவைகள் என்ன பயனைத் தரும் என்னும் ஐயப்பாடு, (8) உலக வாழ்க்கையில் உயிர்கள்பால் தோன்றும் விருப்பு வெறுப்புக்கள், (9) இறைவன் அல்லாத பிறருக்கும் ஊழியம் செய்ய முற்படுதல், (10) அழிந்து போகும் செல்வம் முதலிய அற்பப் பொருள்களில் பற்றுக் கொள்ளுதல் என்னும் பலவகை மயக்கங்களால், நாம் அடையும் இன்னல்களுக்கு ஓர் எல்லையேயில்லை. இம் மயக்கங்களை யெல்லாம் திருவெட்டெழுத்து மந்திரம் போக்கியருள்கின்றது.

**மயக்க நீக்கம் :**

(1) உடலே உயிர் என்னும் உணர்வு, பிரணவத்தின் மகரப் பொருளை உணர்ந்தால் ஒழியும்.

(2) உயிர் தன்னுரிமை உடையதென்னும் நினைவு, பிரணவத்தின் அகரப் பொருளை நினைத்தால் நீங்கும்.

(3) பிறருக்கும் அடிமைப்பட்டிருக்கலாம் என்னும் மயக்கம், பிரணவத்தின் உகரப் பொருளை உணர்ந்தால் ஒழியும்.

(4) நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளுதல் இயலும் என்னும் மயக்கம், நம: பதப் பொருளை நினைந்தால் விலகும்.

(5) அடியார்களும் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள்தான் என்னும் பிறழ்வுணர்ச்சி, நம: பதப் பொருளின் சிறப்பை உணர்ந்தால் ஒழியும்.

(6) உற்றார் சுற்றத்தார்பால் கொள்ளும் உலகியற் பற்றுக்கள், எல்லாஉறவும் இறைவனே என்னும் நாராயண பதப் பொருளை அறிந்தால் தெளியும்.

(7) தெய்வத் திருவுருவங்களைக் கல்லும் செம்புமே எனக் கருதும் மயக்கம், எல்லாப் பொருள்களினுள்ளும் கலந்து நிறைந்து உறைபவன் இறைவனே என உணர்த்தும் நாராயண பதப் பொருள் உணர்ச்சியால் தீரும்.

(8) உலகியல் வாழ்க்கையின் விருப்பு வெறுப்புகள், எல்லாப் பொருள்களும் இறைவனின் சார்புடையனவே என உணர்த்தும் நாராயண பதச் சிறப்பினைத் தெளிய நீங்கிப் போகும்.

(9) இறைவனுக்கு அன்றி மக்களுக்கும் அடிமைப்பட்டு ஊழியம் செய்யலாம் என்னும் உணர்வு, உனக்கே நாம் ஆட் செய்வோம் என்னும் ஆய பதப் பொருளை அறிந்தால் விலகும்.

(10) அழிந்து போகும் செல்வம் முதலிய அற்பமான பொருள்களில் நிகழும் ஆசை முதலியன, இறைவனுக்குத் தொண்டு இயற்றுதலே எல்லாவற்றினும் மேலாகச் சிறந்த பெருஞ் செல்வம் என்பதை உணர்த்தும் 'ஆய' பதப் பொருளை அறிதலால் தவிரும்.

**முடிவுரை :**

இங்ஙனம் நமக்கு ஏற்படும் மயக்கம் துயக்கமாகிய மாசுகளை எல்லாம் போக்கி, நன்மைகளையெல்லாம் தரவல்லது ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டெழுத்துத் திருமந்திரம் ஆகிய நலந்தரும் சொல்லேயாகும். இதனைத் தக்க நல்ல ஞானாசிரியரை அடைந்து, அவர்பால் முறைப்படி உபதேசம் பெற்றுப் போற்றி, இம்மை மறுமை நலங்களையெல்லாம் எய்த முயலுவோமாக! *

# திருவகிந்திரபுரம் திருக்கோயில்

கே. எஸ். நரசிம்மன் பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.

ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த 108 வைணவத் திவ்விய தேசங்களில் நடுநாட்டில் உள்ளவை, திருக்கோவலூர், திருவகீந்திரபுரம் (திருயிந்திரபுரம்) ஆகும். இவற்றுள் திருவகீந்திரபுரம் என்பது, சென்னை மாயூரம் இருப்புப் பாதையில், திருப்பாதிரிப்புலியூர் நிலையத்தில் இருந்து (கடலூர்—புதுநகர்), மேற்கே 3 கல் தொலைவிலுள்ள தலம் ஆகும். அகி—பாம்பு; இந்திரன்—தலைவன்; பாம்புகளுக்கெல்லாம் தலைவன் ஆகிய ஆதிசேடன், அகீந்திரன் என்னும் சிறப்புப் பெயரால் வழங்கப்படுவான். ஆதிசேடன் ஆகிய அகீந்திரன் பெருமாளைப் பூசித்து வழிபட்ட தலமாதலின், இதற்கு அகீந்திரபுரம் என்று காரணப் பெயர் அமைந்தது. அதுவே திருவயிந்திரபுரம் என்றும், திருவயிந்தை என்றும் மருவி வழங்கும்.

திருமாலின் 'அர்ச்சாவதாரம்' என்னும் திருவுருவம், தைவம் (தேவர்கள் பூசித்தது), ஆர்ஷம் (மகரிஷிகள் பூசித்தது), மானவம் (மனிதர் பூசித்தது), சைத்தம் (தானேதோன்றி என்றும் உள்ளது), என்று நான்கு வகைப்படும். அவற்றுள் திருவகீந்திரபுரத்தில் விளங்குவது, அநாதி காலமாகத் தானே தோன்றித் திகழும் 'சைத்தம்' என்னும் அர்ச்சாவதாரம் ஆகும்.

இங்கே ஒரு சிறிய குன்று உள்ளது. ஆஞ்சநேயர், இராமராவணப் போர் நிகழ்ந்தபோது, இறந்துபோன வானர வீரர்களை உயிர்ப்பிப்பதற்காகச் சஞ்சீவி மலையை எடுத்துச் சென்றது போல, ஒரு சமயம் நிகழ்ந்த தேவாசுரப்போரில் இறந்துபட்ட தேவர்களை உயிர் பெற்றெழச் செய்வதற்காக, சஞ்சீவி மலையில் ஒரு சிகரத்தினைக் கொணர்ந்தார். அதுவே இக்குன்றமாக விளங்குகின்றது. ஆதலின் இதற்கு மருந்து மலை (ஔடதாத்திரி, சஞ்சீவி பர்வதம்) என்று பெயராயிற்று. இக்குன்றின் மீது ஒரு சந்நிதியும், அடிவாரத்தில் ஒரு சந்நிதியுமாக, இங்கே இரண்டு திருக்கோயில்கள் உள்ளன.

இத்தலத்தில் ஆதிசேடன் தோற்றுவித்த சேட தீர்த்தம், பூமி தேவி ஏற்படுத்திய பூமி தீர்த்தம், கருடன் உண்டாக்கிய கருட தீர்த்தம் (கெடில நதி), பிரம தேவன் படைத்த பிரம தீர்த்தம் என்னும் நான்கு புண்ணியத் தீர்த்தங்கள் உள்ளன.

முன்னொரு காலத்தில் மது, கைடவன் என்னும் இரண்டு அசுரர்கள் வேதங்களைத் தமது மாயையின் வலிமையினால், பெண் குதிரையாக்கிக் கவர்ந்து சென்று மறைத்து வைத்திருந்தனர். தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கத் திருமால் மது கைடவர்களைக் கொன்று வேதங்களை மீட்டருளினார். அப்போது அவருடைய கழுத்துக்கு மேல் குதிரை வடிவம் உடையவராகத் திகழ்ந்தார். குதிரை முகத்துடன், கைகளில் சங்கு சக்கரங்களை ஏந்திக் கொண்டு, ஒரு கையில் வேதங்களையும், வலத் திருக்கரத்தில் ஞானமுத்திரையும் தாங்கி, இலக்குமி தேவியை அணைத்த நிலையில் எழுந்தருளியிருக்கும் இப்பெருமாளே, அயக்கிரீவர் எனப் போற்றப்படுகின்றார். இப்பெருமாளின் திருவுருவத்தையும், திருமந்திரத்தையும் கருடபகவான் வழங்கியருள, இவரை வழிபட்டு அருள் பெற்ற வேதாந்த தேசிகர் (நிகமாந்த மகா தேசிகர், கி.பி. 1268—1369) என்னும் வைணவப் பெருஞ்சான்றோர், எல்லாக் கலை ஞானங்களையும் உபதேசிக்கப் பெற்றார். இத்தலத்தில் வேதாந்த தேசிகர் மிகவும் சிறப்பாகப் போற்றப்படுகின்றார். அவர் அமைத்த திருமாளிகையும், திருக்கிணறும், தேரடி வீதியில் இன்றும் இருந்து வருகின்றன.

இங்குள்ள பெருமாளுக்குத் தேவநாதன், தெய்வநாயகன், மூவராகிய ஒருவன், அடியவர்க்கு மெய்யன் என்றும்; நாச்சியாருக்கு வைகுண்டநாயகி, செங்கமல வல்லித்தாயார், தரங்கமுக நந்தினி என்றும் பெயர்கள் வழங்கும். பெருமாள் கிழக்கு நோக்கி, நின்ற திருக்

கோலம், மார்க்கண்டேயர், பிரகலாதர் ஆகியோர் வழிபட்டு உய்ந்தனர். இங்கு வைகானசம் என்னும் வைணவ ஆகமப்படி பூசைகள் நடைபெறுகின்றன. இத்தலத்தினைத் திருமங்கையாழ்வார் தமது பாடல்களால் மங்களாசாசனம் செய்துள்ளார்.

வைய மேழுமுண் டாலிலை வைகிய
 மாயவன், அடியவர்க்கு
மெய்ய னாகிய தெய்வநா யகனிடம்
 மெய்தகு வரைச்சாரல்,
மொய் கொள் மாதவி சண்பகம் முயங்கிய
 முல்லையங் கொடியாட,
செய்ய தாமரைச் செழும்பணை திகழ்தரு
 திருவயிந் திரபுரமே.

மூவராகிய வொருவனை மூவுல
 குண்டுமிழ்ந் தளந்தானை,
தேவர் தானவர் சென்றுசென் றிறைஞ்சத்தண்
 திருவயிந் திரபுரத்து,
மேவு சோதியை வேல்வல வன்கலி
 கன்றி விரித்துரைத்த,
பாவு தண்டமிழ் பத்திவை பாடிடப்
 பாவங்கள் பயிலாவே.

இங்குத் திருக்கோயிலின் ஒரு புறம் கெடிலநதி வளைந்தோடுவதும், மற்றொரு புறத்தில் சிறு குன்றின் மேல் கோயில் அமைந்திருப்பதும், இயற்கைக் காட்சியின் மாட்சிமைமிக்குத் திகழ்தல், நேரில் தரிசித்து மகிழத் தக்கதாகும். இத்திருக்கோயிலின் திருப்பணிகள் சமீபத்தில் நடந்தேறித் திருக்குட நன்னீராட்டு விழாவும் சிறப்பாக நிகழ்ந்தது.



செங்கோட்டையில் நிகழ்ந்த கருணை இல்லத் திறப்பு விழாவில், துணையாணையர் திரு. சி. தீனதயாளு, B.Sc., B.L. அவர்களும், உதவியாணையர் திரு. ஆர். திருவேங்கடசாமி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல் (3.6.75)

# உடலும் உயிரும்

நீதிபதி
எஸ். மகராஜன்

மனித வாழ்க்கையில் உயிருக்கும் உடம்புக்கும் உள்ள உறவு இருக்கிறதே அது மிக மிக விசித்திரமானது. இந்த உறவைப் பொய்யுறவு என்று சிலர் வெறுத்துத் தள்ளியிருக்கிறார்கள்; மெய்யுறவு என்று கண்டு வாழ்த்தியிருக்கிறார் திருமூலர்.

திருமூலருடைய கொள்கையைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால், ப்ராய்ட் (Freud) முதலிய மேல் நாட்டு மனோ தத்துவ ஆசிரியர்கள், ஆல்டஸ் ஹக்ஸ்லி (Aldous Huxley) முதலிய பிரபல இலக்கிய கர்த்தர்கள், இந்த உறவைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று சற்று பரிசீலனை செய்வோம். மனிதனுடைய ஆன்மாவுக்குத் தனியான சுதந்திரம் என்று ஒன்றுமில்லை; அது முற்றிலும் உடலுக்கு அடிமைப்பட்டிருக்கிறது; உடம்போ, தன்னைச்சுற்றியிருக்கும் சூழலுக்குக் கட்டுப்பட்டு இருக்கிறது. ஆகவே, ஆன்மாவானது அடிமைக்கு அடிமையாக இருந்து குற்றேவல் செய்கிற வஸ்துதான் என்று மேற்சொன்ன இருவரும் வற்புறுத்துகிறார்கள்.

ஏதோ, உடலைப் பாதிப்பது ஓரளவு மனசையும், உயிரையும் பாதிக்கும் என்பது உண்மைதான். அஜீரணத்தினால் நமக்குக் கோபம் வருவது சகஜம். வெள்ளைக்கார கவர்னர்களிடம் தயவு எதிர்பார்த்துச் செல்லுகிறவர்கள், உடலை வாட்டுகிற சென்னை நகரத்திலே போய் அவர்களைப் பார்ப்பதில்லை. உடல் குளிர, உள்ளங்குளிர உதகமண்டலத்திலே இருக்கும்போது அவர்களைப் பேட்டி கண்டு, வெற்றிகரமாகத் திவான் பஹதூர் பட்டமெல்லாம் பெற்று வந்திருக்கிறார்கள், நம் நாட்டு உள நூற் புலவர்கள்.

ஆனால், ஆன்மாவுக்குத் தன்னிச்சையென்பதே கிடையாது, உடம்பு சொன்னபடியெல்லாம் ஆடுகிறது என்ற கொள்கையைத்தான் ஒப்புக் கொள்ள முடியவில்லை. வாஸ்தவந்தான். இந்த இரண்டு தத்துவங்களுக்கும் இடையே நடக்கிற போராட்டத்தைப் பார்க்கும் போது நமக்கு ஓரளவு சோர்வு ஏற்படுகிறது; ஆன்மாவிடத்திலே நமக்கு அனுதாபங்கூட ஏற்படுகிறது. உயிரை அவமானப்படுத்தி, அதன் கொட்டத்தை யடக்க வேண்டுமென்றே இந்த உடம்பு நமக்கு ஏற்பட்டதோ என்று கூடச் சந்தேகிக்கிறோம். தொண்டைப் புகைச்சல், ஜலதோஷம், காசம், பக்கவாதம்—இப்பேர்ப்பட்ட நோய்களை ஆயுதமாகக் கொண்டு, உடம்பு உயிர் மீது படையெடுக்கிறது. இந்த யுத்தம் உலகம் தோன்றிய நாள் முதல் ஒரு தலைப் பட்சமாகவே முடிகிறது. இன்று, இல்லையேல், நாளை, உயிர் உடம்பு இரையாகிறது; உணர்வு என்பது நீங்கி, மயக்கமும், அவஸ்தையும், வாயாலெடுப்புந்தான் மிஞ்சுகிறது. வாழ்க்கையில் ஆன்மாவுக்கு ஸ்தானம் இல்லை. எல்லாம் உடம்பும், அது செய்கிற அட்டூழியமுந்தான். இளமையில் மிகுந்த அழகோடு பொலிகிறது உடம்பு. முதுமையிலோ, மசகு போடாத வண்டியைப் போல மொழிக்குமொழி திணறிக் கொண்டு கீச்சல் போடுகிறது. ஆகாசத்திலே கண்ணுக்குத் தெரியாமல் சஞ்சரித்துக் கொண்டிருக்கிற கிருமிகள், கொக்கரித்துக் கொண்டு, உடம்பிலே புகுந்து, விரைந்து பெருகி, அற்புதமான உடற்கருவிகளைப் புசித்து, உயிர்ச் சத்தைக் குடித்து, உடம்பை த்வம்ஸம் செய்கின்றன. மிஞ்சுவது என்ன? ஒரு சாம்பல், அரைப் பிடி கந்தகம், கொஞ்சம் சுண்ணாம்பு, ஒரு ராத்தல் கரி, அரசியலைப் பற்றி அவன் பேசின வீரப் பேச்சுக்கள், தேனிலே குழைத்தது போன்ற அவன் குரலினிமை, சுத்தப் பிரம்மத்தைப் பற்றிய அவனது சித்தாந்த நுட்பங்கள், திடீரென்று கொப்புளித்து மறையும்அவன் புன்முறுவல், கடவுளிடத்திலே அவன் வைத்திருந்த அபார பக்தி—இவ்வளவும் மறைந்து, மிஞ்சுகிறது என்ன? ஒரு பிடி சாம்பல், அரைப் பிடி கந்தகம், ஒரு ராத்தல் கரி . . ஆன்மாவாவது! மண்ணாங்கட்டியாவது!

ஆனால், இந்த மண்ணாங்கட்டிக்குள்ளே உயிர் எப்படி வந்து தொத்திக் கொண்டது? ''அப்பத்தை எப்படிச் சுட்டாளோ அதில் தித்திப்பை எப்படி வச்சாளோ?'' என்றாளே, அந்தக் குழந்தையைப் போல, கேள்விக்குப் பதில் தெரியாமல், அதிசயத்திலே கேள்வியையும் மறந்து விடுகிறோம். சலனமற்ற, அறிவற்ற, உயிரற்ற, அறுகு நுனி பனியனைய சிறிய துளி ஒன்று கர்ப்ப வாழ்க்கையை ஆரம்பிக்கிறது. சிறிது காலத்தில் பனித் துளி ஜவ்வு மாதிரி உருவெடுக்கிறது. பின்னால், புழுவைப் போல் நெளிய ஆரம்பிக்கிறது. சில நாட்கள் கழிகின்றன ;

இறக்கை முளைத்த மீன் போலக் காட்சி அளிக்கிறது. இந்த விசித்திர வஸ்துக்குள்ளே, ஒரு இதயம், அதற்குள்ளே ஒரு துடிதுடிப்பு, உணர்வு. ஒரு நாள் இது பிறந்து, மீசை முளைத்த ஆண் மகனாக விளைந்து, இன்ப துன்

பத்தை நுகர்வதும், காதலிப்பதும், வெறுப்ப தும், நினைப்பதும், சிந்திப்பதும், கற்பனைக் கோட்டைகள் கட்டுவதும்—என்ன விசித்திரம்! அன்று உணர்வில்லாத ஜவ்வாக இருந்த ஒரு பொருள், இன்று இறைவன் என்ற ஒரு பொருளைக் கற்பனை செய்து வணங்குகிறது. இறக்கை முளைத்த மீனாக இருந்த ஒரு பொருள், நன்மை, தீமை என்ற இரு வினைகளைச் சீர் தூக்கி எடை போடுகிறது. புழுவைப் போல நெளிந்து கொண்டிருந்த அது, இன்று சீதக் கதிர் மதில் மேல் சென்று தேனுண்ணுகிறது; இசையலைமேல் மிதந்து நாதப்பிரம்மத்தை நாடு கிறது; கவிதையை ரசித்துக் கட்டடங்காக் களிப்பெய்துகிறது. இப்படியெல்லாம் செய்கிற ஆன்மாவிருக்கிறதே, ஏன் புழுவடையும் காட் டத்தோடு, ஒரு பிடிச் சாம்பலாகக் காத்திருக் கும் உடம்போடு உறவு கொண்டது!

இந்தக் கேள்விக்கு ஒரு அற்புதமான விடையளிக்கிறார் வள்ளுவர் :

''அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடியைந்த தொடர்பு.''

அன்பே ஸ்வரூபமாக உள்ள ஒரு சக்தி உலகங்களையெல்லாம் இயக்கி வருகிறது. அந்த சக்திதான் இந்த எலும்புக் கூட்டோடு ஆன் மாவைக் கொண்டு வந்து இணைத்திருக்கிறது. ஆகவே, அன்பை அடித்தலமாகக் கொண்ட இந்த உறவு வெறுக்கத் தக்கதல்ல, பெரிதும் விரும்பத்தக்கது என்றார் குறளாசிரியர். வள்ளு வரின் வழித் தோன்றலாகிய திருமூலரும் இந்த மர்மத்தை யுணர்ந்தவர், ஆல்டஸ் ஹக்ஸ்லிக்கு ஏற்பட்ட சந்தேகம் அவருக்கும் ஏற்படாமல் இல்லை.

''உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந் தேன்'' என்று சொன்னவர் அன்பின் திறத்தை உணர்ந்தவராகையால், உடலுக்குள்ளே ஒரு புதுமையைக் கண்டார்.

''உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண் டேன்'' என்று ஒலமிடுகிறார். கிறித்தவ சமயத் திலும், "the indwelling God" (''உடலுக் குள் உறையும் இறைவன்'') என்ற சித்தாந் தத்தை ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

உடலினுள் உத்தமன் கோயில் கொண் டிருக்கிறான் என்ற உண்மையைக் கண்ட மாத்தி ரத்திலேயே திருமூலர், உடம்பு உயிரைக் காட் டிலும் மேம்பட்டது, அதை உரிய முறையில் ஓம்ப வேண்டும் என்று பறை சாற்றுகிறார்.

உயிர் இந்த உடல் மூலம் பெறுகிற அனு பவங்களால் உயர்ந்த நிலையை யடைகிறது. உயிரை உய்விக்கும் கருவியாக உடலைக் கருத வேண்டும். உடம்பார் அழிந்து விட்டால், உயிரார் அழிவார், அனுபவமும் அழிந்துவிடும். ஆகவே, உடம்பை வளர்க்க வேண்டும். மிருகத் திமிரை வளர்க்கும் முறையிலே உடம்பை வளர்த்தால் உயிருக்குப் பயனில்லை. ஆகை யால், வளர்க்கும் உபாயம் அறிந்து உடம்பை வளர்க்க வேண்டும்.

''உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன், உயிர்வளர்த்தேனே''

என்பது ஓர் திருமந்திரம்.

உயிருக்கு இதமான முறையிலே உடம்பை வளர்ப்பது எப்படி என்பதைப் பற்றிப் பல பாடல்கள் பாடியிருக்கிறார். இங்கேதான், ''சாவியை இழந்துவிட்டோமே, அர்த்தம் புரிய வில்லையே'', என்று கையை விரிக்க வேண்டி யிருக்கிறது.

ஆல்பெர்ட் ஷ்வைட்ஸர் (Albert Schweitzer) என்ற ஜெர்மன் தத்துவ ஞானி உல கச் சமயங்களையெல்லாம் இரண்டு வகையாகப் பிரிக்கிறார். ஒன்று, ''கடவுள் மாத்திரமே உண்மை; வாழ்க்கை, உடம்பு—எல்லாம் பொய்'', என்று கருதுவது. மற்றொன்று, ''கடவுள் உண்மை; அவர் அமைத்த வாழ்க்கை யும் உண்மை,'' என்று கருதுவது. எது சரி, எது தப்பு என்று சொல்வது கஷ்டமான காரி யம். ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். வாழ்க் கை பொய்யென்று கருதுகிறவர்கள் இமயமலைச் சாரலிலேயுள்ள பனிக் குகைகளை நாடிச் செல் வார்களே யொழிய, வாழ்க்கையைத் திருத்தி அமைப்பதிலோ, மக்களுக்குச் சேவை செய்வ திலோ, நோயோடும் வறுமையோடும் போராடு வதிலோ மனசை ஈடுபடுத்த மாட்டார்கள். வாழ்க்கை உண்மையானது, தன்னலமற்ற பரி பூரணமான வாழ்க்கை மூலந்தான் ஆன்மாவுக்கு விமோசனம் உண்டு என்று நினைக்கிறவர்கள் சமூக சேவையிலே உற்சாகத்தோடு ஈடுபடுகிறார் கள். மேற்சொன்ன ஷ்வைட்ஸர் என்பவர், ''மேல் நாடுகள் வறுமையையும், பிணியை யும் வென்று உன்னதமான வாழ்க்கை நடத்தி வர, கீழ் நாடுகளில் உயர்ந்த வாழ்க்கைத் தரம் இல்லாமலிருப்பதற்குக் காரணம், சமயக்கோட் பாட்டின் வேற்றுமைதான்'' என்று சொல்லி விட்டு, ''ஆனால், தமிழ் நாட்டில் மாத்திரம் வாழ்க்கையின் உண்மையை அறிந்த பல ஞானி கள் இருந்திருக்கிறார்கள்'' என்று ''Indian thought & its development'' என்ற நூலிலே ஒப்புக்கொள் கிறார். அவர் ஒப்புக் கொள்ளுவதற்கிணங்க திருமூலரும் மனிதனை நடமாடும் கோயில் என்றே கூறியிருக்கிறார். ''படங்களும், சிலைக ளுமுள்ள கோயிலில் இறைவனைச் சேவிப்பதைக் காட்டிலும், நடமாடும் தெய்வமாயிருக்கும் மக்களுக்குச் சேவை புரிவதே மேல். மனித சமுதாயமே நான் வணங்கும் ஈச்வர சந்நி தானம்'' என்று மிகுந்த துணிச்சலோடு பாடு கிறார் :

''படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்,
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா,
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்;
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே.''

அதிதீவிர நாஸ்திகப் புரட்சிவாதிகள் கூட சமூக சேவைக்கு இவ்வளவு அழுத்தம்கொடுத்த தில்லை. பெர்ட்ரன்ட் ரஸ்ஸெல் (Bertrand Russel) போன்ற நாஸ்திகர்கள் சொல்வது எல்லாம், ''ஆன்மா, கடவுள் என்பதைப்பற்றிக் கவலையில்லை. தன்னலமற்ற சேவையிலே தனி யான இன்பம் இருக்கிறது. ஆகையினால், அதைச் செய்ய வேண்டும்'', என்பதே. இந்தக் கொள்கையிலே ஒரு வறட்சியிருக்கிறது. சமூக சேவையினால், மனசிலே ஒரு இன்பம் மாத்திரம் அல்ல. ஆன்மாவுக்கு வளர்ச்சியும் ஏற்படுகிறது என்று திருமூலரோடு நாம் நம்பினால், தொண்டு செய்வதிலே, நாஸ்திகர்களைக் காட்டிலும் பன் மடங்கு உற்சாகமும், சேவையும் நமக்கு ஏற்படு மல்லவா?

# அனந்தபுரத்து அண்ணலார்

ந. சுப்புரெட்டியார், எம்.ஏ., பி.எச்.டி.,

அண்மையில் திருமணம் செய்து கொண்ட நங்கையொருத்திக்குத் தான் பிறந்த இல்லத்தை விட்டுத் தன் கணவன் இல்லத்தை அடையும் நாள் நெருங்கி வருகின்றது. சில நாட்கள் முன்பிருந்தே அவள் தன்னுடன் நெருங்கிப் பழகிய நண்பர்களின் வீடுகள் தோறும் சென்று விடைபெறுங் காட்சியை இன்றும் நாம் காண்கிறோம். அங்ஙனமே நம்மாழ்வாரும் தான் பரமபதம் செல்லும் நாள் அண்மையிலுள்ளது என்பதை யுணர்ந்து பல திவ்விய தேசங்களில் புகுந்து ஆங்காங்குள்ள எம்பெருமான்களிடம் விடைபெறுகின்றார். திருமோகூர் எம்பெருமானைச் சரணம் அடைந்து விடைபெற்ற ஆழ்வார் அனந்தபுரம் செல்லத் திருவுளங் கொண்டு புறப்படுகின்றார். அந்த அனந்தபுரம் செல்லுகின்றோம் இன்று நாம். நாகர்கோவிலிலிருந்து பேருந்தில் புறப்படுகின்றோம். திருநாட்டிற்குச் செல்லும் ஆன்மா கதிரவனிடமுள்ள ஒரு துவாரத்தில் நுழைந்து செல்வதைப் போலவே, மலை நாட்டிற்குச் செல்லும் நாமும் மலை நாட்டின் நுழைவாயில் போன்றிருக்கும் நாகர்கோவிலைக் கடந்து செல்லுகின்றோம்.

பேருந்து திருவனந்தபுரத்தை நோக்கிச் செல்லுங்கால் எம்மருங்கும் அடர்ந்த தோப்புக்கள், ஓங்கி உயர்ந்த மலைக்குன்றுகள், பாங்குடன் திகழும் மணல் மேடுகள், பூங்கொத்துக்கள் குலாவும் குளிர் சோலைகள், குறுக்கும் நெடுக்குமாக வலைப்பின்னல் போன்றுள்ள பாய்ந்து செல்லும் சிற்றாறுகள், கால்வாய்கள், இவற்றைக் காண்கிறோம்.

> ''ஓங்கு மரன் ஓங்கிமலை
> ஓங்கிமணல் ஓங்கிப்
> பூங்குலை குலாவுகுளிர்
> சோலைபுடை விம்மித்
> தூங்குதிரை யாறுதவழ்
> சூழலது ஓர்குன்று''

(ஓங்குமரன்—உயர்ந்த மரம். ஓங்கி—உயரப் பெற்று. பூங்குலை—பூங்கொத்துக்கள். குலாவும்—விளங்குகின்றது. புடைவிம்மி—பக்கங்களில் விளங்கப்பெற்ற. தூங்குதிரை—மிக்க அலைகள். சூழல்—சுற்றிடம்.)

என்று கம்பன் காட்டும் சூழ்நிலை நமது நினைவிற்கு வருகின்றது. அகத்திய முனிவர் ஆசியுடன் வில்லும் வாளும் அம்பும் பெற்றுப் பஞ்சவடியை நோக்கி வரும் இராமன் பஞ்சவடி அமைந்துள்ள சூழ்நிலையைக் காட்டுவது இது. நாகர்கோவிலிலிருந்து சுமார் ஐம்பது கல் தொலைவிலுள்ள திருவனந்தபுரம் வரையிலும் இதே சூழ்நிலைதான். சில இடங்களில் பகலவன் கதிர்களும் உள்புகாநிலை. இக்காட்சிகளைக் கண்டுகளித்த வண்ணம் திருவனந்தபுரத்தை அடைகின்றோம்.

திருவனந்தபுரமும் ஓர் அழகிய சோலை சூழ்ந்த இடத்தில்தான் அமைந்துள்ளது. ''குருந்து சேர் செருந்திபுன்னை, மன்று அலர் பொழில் அனந்தபுரநகர்'' ''பெரியநீர் வேலை சூழ்ந்து, வாசமே கமழும் சோலை வயல் அணி அனந்தபுரம்'', ''செறிபொழில் அனந்தபுரம்'' என்று நம்மாழ்வார் இத்திருப்பதியைச் சிறப்பிக்கின்றார். கிட்டத்தட்ட இதே நிலையினை இன்றும் காணலாம். அத்திருப்பதி ''எழில் அணி அனந்தபுரமாகவே'' ''மடைத்தலை வாளைபாயும் வயலணி அனந்தபுரமாகவே'' காட்சி அளிப்பதை நேரில் செல்வோர் கண்டு களிக்கலாம். இந்த அழகிய திருப்பதியை நம்மாழ்வார் மட்டிலுமே மங்களாசாசனம் செய்துள்ளார்.

அந்த மங்களாசாசனப் பாசுரங்களை மனத்தில் சிந்தித்த வண்ணம் திருவனந்தபுரத்தை அடைகின்றோம். உண்மையிலேயே நம்மாழ்வார் கூறுகிறபடியே ''குன்று நேர் மாடங்களையுடைய'' அந்தத் திருப்பதியைக் காண்கிறோம். நவீன நாகரிகத்தை யொட்டிப் பெரிய பெரிய மரங்களை யெல்லாம் வெட்டி அவ்விடங்களில் பெரிய கட்டடங்களை எழுப்பினாலும் திருவனந்தபுரத்தைப் பொறுத்த மட்டிலும் தோப்புக்களுக்கும் சோலைகட்கும் குறைவில்லை. இயற்கைச் சூழ்நிலையும் செயற்கைச் சூழ்நிலையும் ஒன்றையொன்று அணி செய்து கொண்டுள்ள காட்சியை எம்மருங்கும் கண்டு களிக்கின்றோம்.

முதற் பாசுரம் நம் நினைவிற்கு வருகின்றது.

> ''கெடும்இடர் ஆயஎல்லாம்
> கேசவா! என்ன; நாளும்
> கொடுவினை செய்யும் கூற்றின்
> தமர்களும் குறுககில்லார்;
> விடம்உடை அரவில்பள்ளி
> விரும்பினான் சுரும்புஅலற்றும்
> தடம்உடை வயல் அனந்த
> புரநகர் புகுதும்இன்றே''

(இடர்—துன்பம். நாளும்—நிரந்தரமாக. கூற்றின் தமர்—யமபடர்கள். குறுக—அணுக. அரவு—பாம்பு. சுரும்பு—வண்டுகள். அலற்றும்—ஆரவாரிக்கும். தடம்—குளம்.)

பாசுரத்தை வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே நகரினுள் நுழைகின்றோம். ஆதிசேடன்மீது திருக்கண் வளரும் எம்பெருமான்—அனந்த சயனன் விரும்பி எழுந்தருளியிருக்கும் நகர் அனந்தபுரம். 'கேசவா' என்ற மூன்றெழுத்துக்களைச் சொன்ன அளவிலே இடர் என்று பேர்பெற்றவை எல்லாம் கெடும். ''போய பிழையும் புகுதருவான் நின்றனவும், தீயினில் தூசு ஆகும்'' என்று ஆண்டாள் கூறியவாறு, பிராப்த கருமங்களும் சஞ்சித

கருமங்களும், நெருப்பிலிட்ட பஞ்சுபோல் நசித்துப் போய்விடும். ''அவன் ஒரு விரோதியைப் போக்கினபடியைச் சொல்ல, விரோதி என்று பேர் பெற்றவை எல்லாம் நசிக்கும்''. என்பது ஈடு. கேசவ நாமத்தை வாய்விட்டுச் சொல்வதே கேசவனை அர்ச்சித்ததாகும் என்பது ஆழ்வாருடைய திருவுள்ளம்.

இந்த உலகில் தீச்செயலை மேற்கொள்ள நினைப்பவர் சிறிதும் தாமதியாது உடனே செய்து முடிப்பதும், நற்செயலை மேற்கொள்ள நினைப்பவர் 'பார்ப்போம், பார்ப்போம்' என்று காலத்தை நீட்டிக் கொண்டே போவதும் இயல்பாக இருப்பதை இன்றும் நாம் காணலாம். அனந்தபுரம் போக வேண்டும் என்ற நினைப்புத் தோன்றிய அன்றே போக வேண்டும் என்பது ஆழ்வாருடைய விருப்பம். ஆகவேதான், ''புகுதும் இன்றே'' என்று கூறினர். இதையே மேலும் ''இன்று போய்ப் புகுதிராகில்'' என்று அடுத்த பாசுரத்திலும் வற்புறுத்தி விரைவுபடுத்துகின்றார். அப்படி உடனே புறப்பட்டு விட்டால் ஏழேழ் பிறப்பிலும் எந்த விதமான பொல்லாங்கும் நேரிடாது என்பது அவர் நினைப்பு.

''நம்மன்போலே வீழ்த்தமுக்கும்
நாட்டிலுள்ள பாவம்எல்லாம்
சும்மெனுதே கைவிட்டோடித்
தூறுகள் பாய்ந்தனவே

(நம்மன் போல்—பூதப் பிசாசங்கள் போல். வீழ்த்து—கீழே தள்ளி. சும்மெனுது—மூச்சுவிடவும் மாட்டாமல். தூறுகள்—புதர்கள்.)

என்று பெரியாழ்வார் குறிப்பிடுவது போல் தாமாகவே அகன்று விடும்.

''இன்றுபோய்ப் புகுதிராகில்
எழுமையும் ஏதம் சாரா''.
(ஏதம்-பொல்லாங்கு)

என்பது ஆழ்வாருடைய திருவாக்கு. இப்பிறப்பில் மட்டுமல்ல. இன்னும் வருகின்ற ஏழ் பிறப்பில் நேரிடும் துன்பங்களும், கடந்த ஏழ் பிறப்பில் செய்த தீவினைகளும் அகன்று போய் விடும். மேலும் இக்கருத்தையே ஆழ்வார்,

''சிக்கெனப் புகுதிராகில்
தீரும்நோய் வினைகள் எல்லாம்
திண்ணம்நாம் அறியச் சொன்னேம்''
(சிக்கென—விரைவாக; திண்ணம்—உறுதி)

என்று உறுதிப்படுத்திப் பேசுவர். துக்கங்களும் துக்கத்திற்குக் காரணமானவைகளும் அழியும் இதை அநுபவத்தில் கண்ட ஆழ்வார் இந்த இயல்பினை அறியாத ஏனையோருக்கும்நெஞ்சில் படும்படி உரைக்கின்றார்.

அடுத்து, இத்திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை அடையாளம் காட்டி அவனது திருநாமத்தை உச்சரிப்பதால் உண்டாகும் பலனைப் பேசுகின்றார். அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் கருடனை வாகனமாகக் கொண்டவன்; அவனது கொடியும் கருடனேயாகும். இதனை ''ஊரும்புள்; கொடியும் அஃதே'' என்கின்றார். தவிர, அவன் பிரளயத்தில் இவ்வுலகினைத் தன் வயிற்றில் அடக்கிக் காப்பாற்றியவன். இந்த எம்பெருமானை,

''ஓரா யிரமாய்
உலகேழ் அளிக்கும்
பேராயிரம் கொண்டது
ஓர்பீடு உடையன்''

என்றவாறு எண்ணற்ற திருப்பெயர்களை யுடையவன். 'ஆயிரம்' என்பது கணித எண்ணிக்கையன்று; எண்ணற்றவை என்பதே பொருள். எல்லா ஆழ்வார்களுமே 'பேராயிரமுடைய பெம்மான்' என்று குறிப்பிட்டுள்ளனர். கம்ப நாடனும் ''ஆயிரம் பெயருடைய அமலன்'' என்று சுட்டியுரைத்துள்ளான். இந்தப் பெயர்களுள் ஏதேனும் வாய்க்கு வந்த ஒரு திருநாமத்தைப் பேசுமாறு பணிக்கின்றார் ஆழ்வார்.

''பேரும்ஓர் ஆயிரத்துள்
ஒன்றுநீர் பேசுமினே.

என்பது அவருடைய திருவாக்கு. அந்தப் பெயரையும் கூசாமல் பேச வேண்டுமாம். ''பேசுமின் கூசமின்றி'' என்று பின்னும் வற்புறுத்துகின்றார். அதனுல் ஏற்படும் பலனையும்.

''மாயன் நாமம்
ஒன்றுவோர் ஆயிரமாம்;
உள்ளுவார்க்கு உம்பர்ஊரே''
(உள்ளுவார்-நினைப்பார்; உம்பர்ஊர்-பரமபதம்

என்று குறிப்பிடுகின்றார். ஒரு திருநாமத்தை உரைத்தாலும் அது ஆயிரமாகிச் செயல் புரியும் பெருமையுடையது. அதை வாயினுல் பாடி மனத்தினுல் சிந்தித்தால் திருவனந்தபுரமே பரமபதமாகிவிடும். வைகுந்தத்தில் நித்திய சூரிகள் திருவோலக்கம் கொடுக்க அவர்கள் நடுவே இருக்கக் கூடிய எம்பெருமான் தாழ்ந்தார்க்கு முகம் கொடுக்கைக்காக வன்றே இந்நகரை விரும்பி எழுந்தருளியிருப்பது? அவன் திருப்பெயரைச் சிந்திப்பார் பரமபதத்தை அடைவது உறுதி. அல்லது 'இராமன் இருக்கும் இடம் அயோத்தி' என்றாற் போல், அவன் விரும்பியுறையும் இடமே பரமபதம் அன்றே? அவன் உறைவதனுல் தானே பரமபதத்தையும் நாம் விரும்புவது? இதனை வற்புறுத்துவார்போல்,

''செறிபொழில் அனந்தபுரத்து
அண்ணலார் கமலபாதம்
அணுகுவார் அமரர்ஆவார்.''
(அணுகுவார்-கிட்டுபவர்; அமரர்-நித்திய சூரிகள்)

என்று மேலும் பன்னியுரைக்கின்றார். 'திண்ணம் நாம் அறியச் சொன்னேம்' என்று இதே பாசுரத்தில் தம் அநுபவமாகவும் பேசுகின்றார் ஆழ்வார்.

வைணவ சமயத்தின் முடிந்த முடிவான குறிக்கோள் எம்பெருமானுக்கு அடிமை செய்வதேயாகும்; அஃதாவது, ஏதோ ஒரு விதத்தில் அவனுக்குக் கைங்கரியம் செய்யவேண்டும்.

இதனையே எல்லா ஆழ்வார்களும் வற்புறுத்தியுள்ளனர். முக்தி அடைந்த பிறகு பரமபதத்தில் எம்பெருமானுக்குச் செய்யும் கைங்கரியத்தை அர்ச்சாவதாரத்தில் செய்யும் வாய்ப்பாகப் பெறுவதைக் கிடைத்தற்கரிய பேருகக் கருதுவர் வைணவப் பெரியார்கள். திருவனந்தபுரத்து அண்ணலாருக்கு இத்தகைய கைங்கரியத்தைப் புரிய வேண்டும் என்று நம்

மாழ்வார் பேரவாக் கொள்ளுகின்ருர். திருவனந்தபுரம் நறுமணம் கமழும் சோலையினுள் அமைந்துள்ளது. அந்த நறுமணம் புறம்பு போகாதபடி மதில் இட்டாற்போன்று கடலால் சூழப்பட்டுள்ளது. அதனுல் நறுமணம் வெளிச் செல்லாது விஞ்சி நிற்கின்றது. இப்படிப்பட்ட சோலைகளையுடைய வயல்கள் நகரை அணிசெய்கின்றன.

''பெரியநீர் வேலைசூழ்ந்து
வாசமே கமழும் சோலை
வயலணி அனந்தபுரம்.''

(வேலை—கடல்)

என்பது ஆழ்வாரின் திருவாக்கு. அடியார்களைக் காக்கும் பொருட்டு எம்பெருமான் பரமபதத்தைத் துறந்து இந்நகரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு எழுந்தருளியுள்ளான்; இந்நகரில் 'நேசஞ் செய்து உறைகின்ருன்' அவனுக்கு முறை தவருது—அஃதாவது எம்பெருமான் சேஷி; இவ்வுயிர்கள் அனைத்தும் அவனுக்குச் சேஷம் என்ற நியதி தவருமல்—மலர் முதலியவற்றை அவன் திருவடிகளில் பணிமாறிக் கைங்கரியம்—செய்பவர்கள் உண்மையிலேயே புண்ணியம் செய்தவர்கள் ஆவர். இதனை,

''நெறிமையால் மலர்கள் தூவிப்
பூசனை செய்கின்ருர்கள்
புண்ணியம் செய்தவாறே''
(பூசனை—ஆராதனை)

என்று கூறுவர் ஆழ்வார்.

கைங்கரியம் என்ன என்பதை அடுத்து விளக்குகின்ருர் ஆழ்வார். பக்தியுடன் தூய நீரையும் நறுமலர்களையும் கொண்டு அருச்சித்து எம்பெருமானுடைய திருப்பெயரை நினைத்தல் வேண்டும். அதனுல் பெறும் பலன் தான் என்ன? அது சாதாரண பலன் அன்று. இந்தக் கொடிய உலகில் பிறந்த பிறப்பிற்கே முற்றுப் புள்ளி வைத்துவிடும்.

''புண்ணியம் செய்துநல்ல
புனலொடு மலர்கள்தூவி
எண்ணுமின் எந்தைநாமம்
இப்பிறப் (பு) அறுக்கும்: அப்பால்''

(புண்ணியம்-பக்தி; புனல்-நீர்; பிறப்பு-சம்சாரம்)

என்பது இக்கருத்தை விளக்கும் ஆழ்வாருடைய பாசுரப் பகுதி. ''எந்தைநாமம் எண்ணுமின்' என்பதற்கு ஈடு: ''இடறினவன் 'அம்மே' என்னுமாறு போல திருநாமம் சொல்லுவதற்கு ஒரு தகுதியைத் தேடிக் கொள்ள வேண்டா. நஞ்சீயர் பட்டரைத் 'திருநாமம் சொல்லும்போது பக்தியுடையவனுய்க் கொண்டு சொல்ல வேண்டுமோ? என்று கேட்க, அதற்கு அவர், 'கங்கையிலே முழுகப்போமவனுக்கு வேறு ஓர் உவர்க்குழியிலே முழுகிப் போக வேண்டுமோ? மேல் உண்டான நன்மையைத் தருகிற இது தகுதியையும் தரமாட்டாதோ?'' என்று அருளிச் செய்தாராம். திருநாமம் சொல்லுகைக்கு ருசியே'' ஆயிற்று வேண்டுவது; அவர்களே அதிகாரிகள். இப்பகுதி நன்கு சுவைக்கத் தக்கது.

இந்தக் கைங்கரியத்தையே மேலும் இரண்டு பாசுரங்களில் வற்புறுத்துகின்ருர். தூபம், நறுமணம் மிக்க மலர்கள், சந்தனம், தாமரை மலர்கள் இவற்றைத் தேர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நம்மையெல்லாம் தூண்டுகின்ருர் ஆழ்வார்.

''தூமம்நல் விரைமலர்கள்
துவள்அற ஆய்ந்துகொண்டு
வாமனன் அடிக்கென்றுஏத்த
மாய்ந்துஅறும் வினைகள்தாமே''

(தூமம்-தூபம்; விரை-மணம்; துவள்-குற்றம்)

''சாந்தொடு விளக்கம்தூபம்
தாமரை மலர்கள்நல்ல
ஆய்ந்துகொண்டு ஏத்தவல்லார்
அந்தமில் புகழினுரே''

(சாந்து-சந்தனம்; ஆய்ந்து-தேர்ந்து; ஏத்துதல்-துதித்தல்)

என்றும் அவர் கூறுவதைக் காண்மின். இங்ஙனம் அந்த எம்பெருமானைத் துதித்தவுடனே நம்முடைய வினைகள் யாவும் தொலைந்து போகும்; அழிவில்லாத புகழும் நம்மை வந்தடையும். நாமும் ''விண்ணுளாரிலும் சீரியர்'' ஆவோம்.

மேற் சொன்னவாறு மலர்கள் முதலியவற்றுடன் எம் பெருமானுக்கு அடிமை செய்ய வேண்டும் என்பதில்லை. எம்பெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயிலின் திருவாசலைக் கோலமிடும் கைங்கரியத்தை மேற்கொண்டாலும் போதும் என்கின்ருர் ஆழ்வார்.

''கடைத்தலை சீய்க்கப் பெற்ருல்
கடுவினை களையலாமே''

(கடைத்தலை-திருமுன்றில்; சீய்த்தல்-மெழுகிக் கோலமிடல்)

என்று கூறுவது காண்க. எம்பெருமானுக்கு ஏதோ ஒரு வகையில் எந்த விதமான அடிமைத் தொழில் புரியினும் கொடிய பாவங்கள் யாவும் மாய்ந்தொழிந்து போகும் என்பது ஆழ்வாருடைய கருத்து.

''பண்டைநா ளாலே நின்திரு வருளும்
பங்கயத் தாள்திருவருளும்
கொண்டு, நின் கோயில்சீய்த்துப் பல்படிகால்
குடிகுடி வழிவந்தாட் செய்யும்
தொண்டர்''

(பங்கயத்தாள்-பெரிய பிராட்டியார்; குடிகுடி வழி-அநாதி காலமாக; ஆள் செய்தல்-அடிமை செய்தல்)

என்ற பாசுரப்பகுதியும் ஈண்டு சிந்திக்கத் தக்கது.

*


# உங்களுக்கு தெரியுமா?

### உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் நாடு செழிக்க உதவும் மக்கள் நல்வாழ்வு திட்டங்களிலேயே செலவிடப்படுகிறது.

### உங்களுக்குத் தெரியுமா?

ஒவ்வொரு மாவட்டத்திலும் திரட்டப்படும் தொகை அந்த மாவட்டத்திலேயே கிராம நலத் திட்டங்களில் செலவிடப்படுகிறது.




### உங்களுக்குத் தெரியுமா?

இத்திட்டத்தில் திரட்டப்படும் வருவாய் மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளை கட்டவும், சேரிகளை சீரமைக்கவும் மற்றும் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்றை வாங்குங்கள். உங்களுக்கும் நலிவுற்ற உங்களது சோதரர்களுக்கும் நல்வாழ்வு அளிக்க அது உதவும்.
உங்களுக்கு ரூ. ஒரு லட்சம் பரிசு கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-600002

# பரியங்க யோகம்

கு. வரதராசப்பிள்ளை, பி.ஏ,

கேசரி யோகம் கூறிய ஆசிரியர் திருமூலர், பரியங்க யோகம் கூறுகிறார். பரியங்க யோகம் என்றால் என்ன? அதைச் செய்யும் முறை எவ்வாறு? அதனால் உண்டாகும் பயன் என்ன என்பன பற்றித் தெரிந்து கொள்ளுதல் நன்றாகும்.

பரியங்கம் என்றால் கட்டில் என்று பொருள். கட்டிலில் பெண்ணோடு கூடியிருந்து செய்யும் யோகமே பரியங்க யோகமாகும். யோக முறை பலவற்றில் பரியங்கம் ஒன்று. பரியங்க யோகத்தைப் பற்றிப் பிற தமிழ் நூல்களில் வெளிப்படையாகப் பேசப் பெறவில்லை. பிரகதாரணிய உபநிடதத்தில் அக்கினி காரியத்தைப்பேசும்பொழுது இந்தயோகத்தைப்பற்றிய குறிப்பு உள்ளது. திபேத்தியர்கள் இதனைப்பற்றி அவர்கள் நூல்களில் தெளிவாகக் கூறுகிறார்கள். இதுவே ஒளியை அடைவதற்குரிய குறுக்கு வழி என்கிறார் திபேத்திய குருமார்களில் சிறந்தவராக விளங்கிய நரோப்பா அவர்கள்.

" It is a short cut method to attain Effulgent Light "

என்பது அவர் வாக்கு.

பொருந்தணை மேல்வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனை நினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே."

என்ற திருநாவுக்கரசர் அருளிய தாண்டக வரிகளில் இக்குறிப்புள்ளதுபோல் தோன்றுகிறது.

இந்த யோகம் பயிலுதற்கு முன்பு ஆடவன் பூசத் தகுந்த வாசனைத் திரவியங்களெல்லாம் உடம்பில் பூசி அலங்கரித்துக் கொண்டு, பெண்ணின் கூந்தலில் மணம் நிறைந்த மாலையை அணிவித்து, அவளோடு இன்பக் கலவியில் பொருந்தி மனமானது பிரமரந்திரத்தை (தலையின் உச்சியை) எண்ணியிருக்கப் போகம் தளராது என்று ஆசிரியர் தொடங்குகிறார்.

"பூசுவன வெல்லாம் பூசிப் புலர்த்திய
வாச நறுங்குழல் மாலையுஞ் சாத்திக்
காயக் குழலி கலவி யொடுங்கலந்து
தூசித் துனையுறத் தூங்காது போகமே''.. மந்: 825

மனித உடலில் இரண்டு நிலைகள் உள்ளன. ஒன்று கீழ் நோக்குதல்; மற்றொன்று மேல் நோக்கியிருத்தலாகும். உலகத்தை நோக்குதல் கீழ் நோக்குதல்; இறைவனை நோக்குதல் மேல் நோக்குதல். உலகத்தை நோக்குதலால் சோர்வும், இறைவனை நோக்குதலால் சோர்வின்மையுமாம். ஆதலால் மேல் நோக்கிக் கொண்டு பிரமரந்திரத்தில் விளங்கும் விந்து நாதங்களை நினைவில் கொண்டு ஆண்பெண் கூட்டுறவு கொண்டால் காம வாயு தொழிற்படாது. காம வாயு தொழிற்படாமையால் சுக்கில நீக்கம் உண்டாகாது. பிரமரந்திரப் புழை நினைவால் காம வாயு சுக்கில நீக்கத்தைச் செய்யாது மூலாதாரம் தொடங்கி நேரே சிரசைச் சென்றடையும். அப்போது அவன் நாதமாகிய சிவனையும் விந்துவாகிய சத்தியையும் சிரசில் கண்டறிவான்.

"போகத்தை யுன்னவே போகாது வாயுவும்
மோகத்தை வெள்ளியு மீளும் வியாழத்தில்
சூதொத்த மென்முலை யாளும் நற் சூதனுந்
தாதிற் குழைந்து தலைகண்ட வாறே''.. மந்: 826

[வெள்ளி—சுக்கிலம்; வியாழன்—சுரோணிதம்; மென்முலையாள்—பெண்; சுதன்—ஆண்; தாதில் குழைதல்—கலவியில் இருத்தல்].

அவ்வாறு தலைவனும் தலைவியும் விரும்பிச் செய்யும் யோகத்தில் சந்திர மண்டலம் விளங்கிச் சிரசின்மேல் ஒளியைப் பெறுவர். அவ்வொளியில் மனம் பொருந்தியிருத்தலால் அங்கத்தில் ஒருகாலும் தளர்ச்சியிருக்காது. ஏன்? அவ்விருவரும் போகம் விரும்பியது அக்கினி மண்டலத்தில்; ஆனால் அது விளைவது சந்திர மண்டலத்திலாம். இதுதான் பரியங்க யோகத்தின் சிறப்பு. காட்டுக்குச் சென்று உடம்பை வருத்திக் கடுந்தவம் புரிந்து பெற வேண்டியதில்லை. வீட்டிலேயே இருந்து போகத்தைத் துய்த்து இன்பப் பொருளைப் பெறலாம்.

"கண்டனுங் கண்டியுங் காதல் செய் யோகத்து
மண்டலங் கொண்டிரு பாலும் வெளிநிற்கும்
வண்டியை மேற்கொண்டு வானீர் உருட்டிடத்
தண்டொரு காலுந் தளராது அங்கமே''.. மந்: 827

அன்புணர்ச்சியாகின்ற காலத்து அக்கினி மண்டலமானது கீழ் நிலையில் சுக்கிலத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் இயல்பு உடையது. ஆனால் சிரசின் மேல் மனம் பதிவுண்டிருப்போர்க்குச் சுக்கில நீக்கம் ஆகாது என்கிறார் ஆசிரியர். அப்போது கீழேயுள்ள சுக்கிலமே மாற்றம் பெற்று ஒளியாக அமையும்.

., Matter becomes energy and energy becomes light ''

என்று விஞ்ஞானம் கூறும். அவ்வாறு சுக்கிலத்தை ஒளியாக மாற்றும் திறமைபெற்ற ஆண் மகன் தலைவனுவான் என்றும் ஆசிரியர் கூறுகிருர்.

''அங்கப் புணர்ச்சியு மாகின்ற தத்துவ
மங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப் படாமற் பரிகரித்துத் தம்மைத்
தங்கிக் கொடுக்கத் தலைவனு மாமே.''..மந்:828

இங்ஙனமுள்ள யோகி ஆன்மாவை அறிந்தவனுகின்ருன். அவன் ஞானம் பெற்றுச் சிவ போகம் கிட்டித் தலைவனுக விளங்குவான். அது மட்டுமா? தன் விருப்பப்படி பஞ்ச பூதங்கள் அனைத்தையும் ஆளும் தகுதியுடையவனுமாவான்.

அடுத்து, பரியங்க யோகம் புரியும் கால அளவு கூறுகிருர். பரியங்க யோகத்தில் கால அளவு ஐந்து நாழிகையாகும். (ஒரு மணிக்கு இரண்டரை நாழிகை என்பது அக்காலக் கணக்கு. ஐந்து நாழிகையாவது இரண்டு மணி நேரமாகும்.) இவ்யோகத்தின் பயனுக ஐந்து நாழிகைக்குமேல் துணைவி மனநிறைவு பெற்று உறக்கத்துக்குச் சென்றுவிடுவாள்.

''அஞ்சு கடிகைமேல் ஆருங் கடிகையில்
துஞ்சுவ தொன்றத் துணைவி துணைவன்பால்
நெஞ்சு நிறைந்தது வாய்கொளா தென்றது
பஞ்ச கடிகை பரியங்க யோகமே.''...மந்:830

நல்ல திடகாத்திரமுள்ள முப்பது வயது ஆடவனும், இருபது வயது மகளிரும் தம்முள் கூடிப் பொருந்தும் கால எல்லை ஐந்து நாழிகையாகும். இவ்வாறு பரியங்க யோகத்தில் ஐந்து நாழிகை பொருந்தியிருப்பவர்க்கு அல்லாமல், குண்டலினி சத்தியின் விந்து நாதங்களாகிய அமுத நிலையைப் பொருந்தி அனுபவிக்க ஒருவர்க்கும் முடியாததாகும்.

இனிபோககாலத்தில் சுக்கிலம் சுரோணிதத்தின் வழி எப்படி கலக்காமல் நிறுத்தப்படுகிறது என்ற வினவுக்கு ஆசிரியர் விடை கூறுகிருர். அதை அழகான உவமை வாயிலாக விளக்குகின்ருர். வெண்ணிறமாகிய சுக்கிலம் உருகிப் பொன்னிறமாகிய சுரோணிதத்தில் கலக்காமல் மறைந்துள்ள தட்டானுகிய சிவன் காரியாகிய அருளை நல்கிப் பின் பக்குவம் செய்தான்; அப்போது நெருப்பாகிய அக்கினி தலை உண்டாக ஊதுகுழலாகிய சுழுமுனை வழியே சென்று பொன்னுகிய சந்திரனைச் செப்பாகிய உள் நாவின்மேல் விளங்க வைத்தான். என்பது உவமை விளக்கம். அஃதாவது நந்தியாகிய குருநாதன் விந்து செயம் பெற்று அக்கினி கலை விளங்க உதவி செய்தான் என்பதாம்.

''வெள்ளி யுருகிப் பொன்வழி ஓடாமே
கள்ளத்தட் டானர் கரியிட்டு மூடினர்
கொள்ளி பறியக் குழல்வழி யேசென்று
வள்ளியுண் ணுவில் அடக்கி வைத்தாரே.'' மந்.834

இவ்வண்ணம் விந்து நீக்கமின்றிப் புணரும் இருவரும் தம்மில் இன்புற்றுக் காம வசப்படாமல் தெய்வ காரியமாக நினைத்துச் செய்கின்ற ஆனந்த நிலையில் பத்துத் திசைகளுக்கும் பதினெட்டு வகைத் தேவர்களுக்கும் தலைவனுக வுள்ள சிவ சூரியன் அவர்கட்கு வெளிப்பட்டருளுவான். அப்போது நம்பியும் நங்கையும் சந்திர மண்டலத்தில் நாதத்தில் திளைத்திருப்பர். அவ்வாறு சந்திர மண்டலத்தில் கருத்துப் பதிந்திருப்பவர்க்கு ஊர்த்துவரேதசு அமையும். அப்போது சுவாதிட்டானத்திலுள்ள காமாக்கினி மூலாதார வழி புருவ நடுவுக்குச் செல்வதால் அவரது உடம்பு அனலின் முன் உருகும் மெழுகு போன்று உருகாதொழியும். உருவம் கடந்து வெளியான ஆகாயத்தில் சோதியைக் கண்ட பிறகு அவருக்கு உழுதலாகிய தொழில் இல்லை. புருவ நடுவைத் தாண்டித் துவாத சாந்தப் பெருவெளியை அறிந்த பேர்க்கு உடல் கீழே விழுகின்றதில்லையாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய ஞானசிரியர்களுக்குத் தூல உடம்பு கீழே விழுந்ததாக வரலாறு இல்லை.

''எழுகின்ற தீயைமுன் னேகொண்டு சென்றிட்டால்
மெழுகுரு கும்பரி செய்திடும் மெய்யே
உழுகின்ற தில்லை ஒளியை அறிந்தபின்
விழுகின்ற தில்லை வெளியறி வார்க்கே.''

—மந்: 838

இந்நிலையை அடைந்தவரின் விருப்பம் சிவத்தை நோக்கிச் செல்வதால் உடலின் காரணம் கெட்டுச் சிவம் நிலைபெறும் உடலாக அவரது உடம்பு அமைகிறது. அழிகின்ற உடம்பு அளிக்கின்ற உடம்பாக ஆகின்றது.

''புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்நெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே..
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கெலாம் அறுத்தாற் சோதீ
இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே''

—திருவாசகம்.

ஆகாய மயமான சிதம்பரத்தை அறிந்தவரது உடல் பூமியில் விழாது என்ற சித்த தரும உண்மையும், ''விழுகின்றதில்லை வெளியறிவார்க்கே'' என்பதனுல் புலனுகிறது.

இங்கே திருமூலர் தம் அனுபவத்தைக் கூறு கிருர். சிரசின் மேல் ஆகாயத் தானத்தை அறிந்து அங்கு விளங்கும் பொன்னொளியை அறியின் உள்ளம் வேறுபடாமல் தெளிவான ஞானத்தைப் பெற்றுச் சிவனருளால் பரமான ஆகாயத்தை அறிந்திருந்தேன்; அதற்கு மேல் ஒன்றும் அறியவில்லை என்கிருர்.

''வெளியை அறிந்து வெளியின் நடுவே
ஒளியை அறியி னுளிமுறி யாமே
தெளிவை அறிந்து செழுநந்தி யாலே
வெளியை அறிந்தனன் மேலறி யேனே.''

முன் மந்திரத்தில் கண்டவாறு பரியங்க யோகம் புரிவோர் ஆகாயத்தின் நடுவே ஒளியைக் கண்டிருப்பவர்களுக்கு உலகம் காணப் படாது. அப்போது அவர் காணவல்லது சிவ னும் சக்தியும் ஆன் மாவாகியதம்மையுமேயாம். இதைத்தான் ஆலயத்தில் பார்வதி பரமேசுவர ருக்கிடையே முருகனை அமைத்த கோலம் நினைவு படுத்துகிறது. அவ்வாறு சிவ சத்தியின் நடுவே தம்மைக் கண்டவர் பல்லாண்டுக் காலம் வாழ்வர்.


''உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானல் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும்அருளைப்
புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென் கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.''


என்ற திருவாசகத்தில், தான் நடுவாகச் சிவசத்தி இருபுறமும் இருப்பதை நினைவு கூர்கிருர் மணி வாசகப் பெருந்தகை.

அவ்வாறு விளங்கி ஆன்மாவைச் சிவத்தி னிடம் ஆகுதியாகக் கொடுத்தவர்களுக்குச் சத்தியின் அருள் கிட்டிப் பாசஞானம் நீங்கிப் பரஞானம் பெற்றிருப்பர். இதுவே பரியங்க யோகப் பயனும்.

இதுகாறும் கூறியவற்றுல் பரியங்க யோகம் என்பது ஆண் பெண் கூட்டுறவு என்பதும், அக்கூட்டுறவில் இறை நாட்டத்தால் விந்து செயம் பெறலாம் என்பதும், அதனைக் கூட்டு விப்பது இறையருள் என்பதும், அவ்வருள் பெற்றவர் நிலமிசை நீடுவாழ்வர் என்பதும் பெற்றும்.

---





கன்னியாகுமரி மாவட்டம், செங்கோட்டையில்,

துணையாளையர் திரு. சி. எஸ். தீனதயாளு, B.Sc., B.L. அவர்கள், கருணையில்லத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சீருடை வழங்கல். (3.6.75)

திரு. எஸ். முத்துசாமி ஆணையாளர் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றிவைத்துக் கருணையில்லத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தல். (3—6—'75).

# Sakthi Sugars Limited

*MANUFACTURERS OF :*

**BEST QUALITY WHITE SUGAR**

**AND**

**SAKTHI HYBRID SORGHUM**

**AND**

**BAJRA SEEDS**

**Factory :**

SAKTHI NAGAR P.O.
Bhavani Taluk,
ERODE, R.M.S.

**Regd. Office :**

"Green Lands"
8/28, Race Course Road,
COIMBATORE-641018.

# ஓங்காரத்தில் ஒளிர்கின்ற ஒருவன்!

கலைமாமணி நாரண-துரைக்கண்ணன்.

திருத்தணிகை யமர்ந்தருளுந் தேவதேவைத்
 தினந்தோறும் வந்தித்துத் தொழுதுநின்றால்,
அருளொழுகும் நயனங்கள் பன்னிரண்டும்,
 அறுமுகமும் வேல்மயிலும் அருள்பாலிக்கும்;
பெருகும்பொருட் பேறெல்லாம் பொங்குமன்றே!
 பேராண்மை வளர்வதற்கு வாய்ப்புமுண்டாம்;
அருகுசெ(ல்)லின் திருவடிகள் எம்சிரத்தில் மன்னும்;
 அருளாளர் திருக்கூட்ட ஆட்கொள்ளும்மே.

காலையிளங் கதிரொளியில் முக்குளித்துக்
 ககனத்தில் பறப்பதுபோல் கந்தன்குன்றில்
காலைமறு கால்போட்டுத் தாவியேறிக்
 கற்பாறைப் படிகள்பல கடந்துசென்று
வாலைஇளங் குமரியென விளங்கும்வள்ளி
 வனப்பினிலே மயங்கி நிற்கும் வள்ளல்தன்னைச்
சோலைகள்சூழ் திருத்தணிகை தன்னில்கண்டு
 துதித்திட்டேன் 'சரவண பவா' வென்றேயான்.

''சரவண பவா' வென்றே தியானிப்போர்க்கே
 சதுர்மறைகள் போற்றுகிற உபய பாதம்
சிரத்தினுக்கே அணியாகிச் சீர்மையோடு
 சேர்த்திடுமே; சாந்தியையுந் தந்துகாக்கும்;
'அரகரமுருகா' வென்றே இமைக்கும்போதும்
 அலர்தூவி அருச்சித்தால், ஆன்மபோதம்
ஒருகணத்தில் சித்திக்கும்; உண்மையோங்கும்;
 ஓங்காரத் துள்ளொளியில் தோன்றுவானே.

ஓங்காரத் தொளிர்கின்ற ஒருவன்தன்னை
 ஒளிகாந்துந் தணிகையிலே தரிசித்திட்டே
ஆங்காரம் அடங்கிடவே 'அர' வென்(று) ஓதி
 அன்புணர்வால் அகவழுக்கை அகற்றமுன்னித்
தேங்குகின்ற தீவினைகள் தியங்கியோடத்
 திருமுருகன் சரணத்தைத் தஞ்சங் கொள்வோம்;
சேங்கன்று தாய்ப்பசுவைச் சேர்தல்போலச்
 சிறுவனுமே சரவணனைச் சார்ந்துவாழ்வேன்.

பத்திமையால் திருப்புகழ்மா தேவமாலை
 பாடல்பல பாங்குடனே பாடிப்பாடிச்
சித்திபெற்ற அருணகிரி, வள்ளலாரும்
 சேர்ந்தனரே சாயுச்யம்; செய்திகேட்டோம்;
கொத்தடிமைத் திறம்பூண்டு தொண்டுசெய்து
 கோமானுக் கென்றென்றும் ஆளாய்நின்று
பக்திசெய்தால் அவர்போலப் பாவம் நீங்கிப்
 பார்புகழ வாழ்ந்திடலாம்; பதமுங் கிட்டும்.

குறிப்பு : அண்மையில் திருத்தணிகை சென்றபோது முருகப் பெருமான் சந்நிதியில் பாடியது.

ஓம் சக்தி துணை

# அருள்மிகு
# பண்ணாரி மாரியம்மன்
# திருக்கோயில்

## பண்ணாரி அஞ்சல், சத்தியமங்கலம் வட்டம், கோவை மாவட்டம்.

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் சக்தி—மைசூர் நெடுஞ்சாலையில் 12 கி. மீட்டர் தொலைவில் பண்ணாரி என்னும் திருத்தலத்தில் தாமரை மலரில் வீற்றிருந்த கோலத்தில் சாந்த சொரூபியாக வேண்டுவோர்க்கு வேண்டிய வரங்களை அள்ளி அள்ளி வாரி வழங்கும் கண்கண்ட தெய்வமாக எழுந்தருளி உள்ளாள். மூர்த்தி சுயம்புலிங்கமாகும். பங்குனி மாதத்தில் நடைபெறும் குண்டம் பெருந் திருவிழாவிற்குக் கோவை மாவட்டத்திலிருந்தும், தமிழகத்தின் ஏனைய பகுதிகளிலிருந்தும், கர்னுடகா, ஆந்திரா, கேரளா மாநிலங்களி லிருந்தும், மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் வந்து மேற்படி திருவிழாக் காட்சி களைக் கண்டு களித்தும் பிரார்த்தனைகளை உண்டியல்களில் செலுத்தியும் செல்கின்றனர். ஆண்டு ஒன்றுக்குப் பிரார்த்தனை உண்டியல்கள், கடைகள் மூலம் இத்திருக்கோயிலுக்கு நான்கு இலட்ச ரூபாய் வருமானம் வருகிறது.

இம்மையில் செய்த பாவங்கள் நம்மை விட்டு விலக, பிணிகள் அகல, தொல்லைகள் நீங்க, வேண்டிய வரங்களைப் பெற அருள்மிகு அன்னை பண்ணாரி மாரியம்மனை வந்து தரிசித்து அருள் பெற்று உய்யுமாறு வேண்டுகின்றனம்.

**சி. பி. வீரப்ப கவுடர்,**
அறங்காவலர் குழுத் தலைவர்.

**கு. சிதம்பரம், பி.ஏ.,**
செயல் அலுவலர்.

**சி. டி. வெங்கடராம நாயுடு,**
**என். பழனியப்பக் கவுடர்,**
**வெ. வீரப்ப கவுடர்,**
**உ. இராமசாமி கவுடர்,**
**சி. ஆர். தங்கவேல்**
பரம்பரை அறங்காவலர்கள்.

**எஸ். ஜி. கண்ணப்பா,**
**டி. என். ராமசாமி,**
**வி. வெங்கட்ராமன்**
அறங்காவலர்கள்

# மந்தரையின் குற்றம்!

ம.அ. முருகேசன், பி.ஏ., பி.எல்.,

இராமாவதாரத்திலே இராமனுக்கு முடிசூட்டும் விழாவைத் தயரதன் முடிவு செய்ததும், அதைக் கைகேயியின் மூலம் மந்தரை தடுத்து நிறுத்தியதும், அதனால் இராமன் காட்டுக்குப் போக நேர்ந்ததும், அதன் விளைவாக 'அவதார ரகசியம்' என்று சொல்லப்படும் இராவண சம்மாரம் நிகழ்ந்ததும் யாவரும் அறிந்ததே. முடிசூட்டு விழாவைத் தடுக்க, தன் சூழ்ச்சியை மந்தரை கைகேயியிடத்திலே பயன்படுத்துகிறாள். மந்தரை உரையை முதலில் ஏதோ விளையாட்டு உரை என்றும், வெகுளி உரை என்றும் கைகேயி நினைக்கிறாள். அவள் சொன்ன சேதி மகிழ்ச்சியான சேதி என்பதால், அவளுக்கு முத்து மாலையைப் பரிசாகவும் தருகிறாள். ஆனால், மந்தரை முத்து மாலையை வீசி எறிந்து விட்டுத் தொடர்ந்து இராமனுக்கு முடி சூட்டுவது கைகேயிக்கு அழிவைத் தரும் என்று பேசிய போது கைகேயி துணுக்குறுகிறாள்; மந்தரை உரை வெற்றுரையோ, விளையாட்டுரையோ அல்ல, அது வினையுரை என்று அறிகிறாள். அறிந்தவுடன் மந்தரையைக் கடிகிறாள், போதி என் எதிர்நின்று, நின்புன் பொறி நாவைச் சேதியாது இது பொறுத்தனென்; **புறம் சிலர் அறியின் நீதி அல்லவும் நெறி முறை அல்லவும் நினைந்தாய் ஆதி;** ஆதலின், அறிவிலி, அடக்குதி என்றாள்.

''என் எதிரில் நிற்க வேண்டாம். போய் விடு, முறையல்லாதவற்றைச் சொல்லிய நாவை நான் அறுக்காமல் விடுகிறேன்; நீ சொல்லியவற்றைப் பிறர் அறிந்தால் நீதிக்கும் நெறிக்கும் புறம்பானவற்றை நினைந்தவளாக நீ குற்றம் சாட்டப்படுவாய். ஆகவே, அறிவில்லாதவளே, இதோடு உன் பேச்சை அடக்கு'' என்பது இதன் பொருள் என்று உரையாசிரியர்கள் எழுதி இருக்கிறார்கள். இதில், 'நீதிக்கும் நெறிக்கும் புறம்பானவைகளை நினைந்ததாகக் குற்றம் சாட்டப்படுவாய்' என்பது, சற்றுச் சிந்திக்க வேண்டிய இடம்.

தவறான செய்கைகளை மனத்திலே நினைப்பது குற்றமாகாது. தவறான நினைப்புகள் செயலாக்கப்படும் பொழுது தான் குற்றம் ஏற்படுகிறது. விளக்கிச் சொல்லப் போனால், ஒருவன் மற்றொருவரின் உடைமைகளை அவரறியாமல் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எவ்வளவு தான் நினைத்தாலும் அது சட்டப்படி எந்தக் குற்றமும் ஆகாது. அப்படிப்பட்ட நினைவுகள் நல்லொழுக்க விதிகளுக்கு (Moral Rules) முரண்பட்டவைகளாக இருக்கலாம். ஆனால் சட்டத்தின் கண்களில் அவை குற்றங்களாவதில்லை. அதே நினைவுகள் செயலாக்கப்பட்டால், அது குற்றஇயல் சட்டப்படி திருட்டுக் குற்றமாகி (Theft) விடுகிறது. செயலாக்க முனைந்து, இலக்குத் தவறிவிட்டாலும் திருட முயற்சித்த குற்றம் (Attempt to theft) ஆகிவிடும். குற்ற இயல் சட்டப்படி நினைவுகள், அவை செயலாக்க முற்பட்டாலொழிய, குற்றமாகா. கம்பன் வாக்கு ''நினைந்தாய் ஆதி''—நினைந்தவளாக ஆகிறாய் என்பது தான். இருப்பினும், உரையாசிரியர்கள், மந்தரையின் கூற்றைப் பிறர் அறிந்தால் அவர்கள் அவள் மீது குற்றம் சாட்டுவர் என்றே பொருள் கண்டிருக்கிறார்கள். இது எப்படிச் சரியாகும்?

ஏதோ ஒரு வேகத்தில் இராமனுக்கு முடிசூட்டு விழாவைத் தடுக்க மந்தரை நினைத்தாள் என்பது கதையல்ல. சிறு வயதில், இராமன் மந்தரையின் கூன் முதுகில் உண்டைவில்லால் அடித்தான் என்பதும், அதனில் மந்தரை இராமன் மீது குரோதம் கொண்டிருந்தாள் என்பதும், அந்தக் குரோதத்தின் காரணமாக இராமனுக்குத் தீங்கு செய்ய முற்பட்டாள் என்பதும்தான் கதை. மந்தரையின் குரோதத்துக்குரிய காரணத்தைக் கம்பன் சொல்லவில்லை. ஆழ்வார்கள் பிரபந்தத்திலே சொல்லுகிறார்கள்.

''கொண்டை கொண்ட கோதை மீது தேனுலாவு
கூனி கூன்
உண்டை கொண்டரங்கவோட்டி உள் மகிழ்
நாதனார்''
. . . . . . . . . . ''திருமழிசைப்பிரான்
(திருச்சந்த விருத்தம்)

''மானேய் நோக்கி மடவாளை மார்பில் கொண்டாய்
மாதவா
கூனே சிதைய வுண்டைவில் நிறத்தில் தெறித்தாய்
கோவிந்தா''
. . . . . . . . . . . . . . . .நம்மாழ்வார்—திருமொழி

கம்பன் மந்தரையின் கோபத்தை முழுவதுமாகச் சொல்லாமல் கோடிட்டுக் காட்டுகிறான். அவள் தன்னுடைய தீய எண்ணத்தை மனத்திலே நீண்ட நெடுங்காலமாக வைத்து வளர்த்து வந்து இருக்கிறாள் என்பதைக் குறிக்க 'நினைந்தாய் ஆதி' என்கிறான்—(நினைந்தாய்ஆதி—நினைந்தவளாக ஆகிறாய்; ஆதி—முன்னிலை வினைமுற்று). அப்படியே திட்டமிட்ட நினைப்பானாலும், நினைப்பு நினைப்புத் தானே; எப்படி அது குற்றம் ஆகிவிடும் என்ற ஐயம் எழுகிறது.

சட்டத்திற்குப் புறம்பான ஒரு செயலைச் செய்யத் தீர்க்கமாக எண்ணி, அதை இன்னொருவரிடமும் சொல்லி, அவரையும் அந்தக் கருத்துக்கு இசைய வைத்து விட்டால் அது (Criminal Conspiracy) என்ற குற்றமாகிறது. தீர்க்கமாக நினைத்த அளவிலேயே, செயலாக்க முற்படாத போதும், இந்தக் குற்றம் முழுமை பெற்று விடுகிறது. இது குற்ற இயல் சட்டத்திலேயே ஒரு விதிவிலக்கு.

"Conspiracy differs from other offences in this respect that in other offences the intention to do a criminal offence is not a crime by itself until something is done amounting to the doing or the attempting to do some act to carry out the intention ; Conspiracy, on the other hand, consists simply in the agreement or Confederacy to do some act ; no matter whether it is done or not ; (I.L.R. (15) 1935 Patna, page 26). In the offence of criminal conspiracy the mere agreement is enough if the agreement is to commit an offence : (1962) Criminal Law Journal, 770). இது குற்ற இயல் சட்டத்தின் 120-ஏ-வது பிரிவு (Section 120-A, I. P. C.) மன்னனுக்கு எதிராக ஒரு குற்றத்தைச் செய்யச் சதி செய்வது இராஜத் துரோகமாகக் கருதப்பட்டது. முடியாட்சி அல்லாத குடியாட்சியுள்ள நாடுகளில், அரசுக்கு எதிராகச் சதி செய்வதும் குற்றந்தான். இதை இந்தியக் குற்றயியல் சட்டத்தின் அடுத்து வரும் பிரிவுகள் விளக்குகின்றன. குறிப்பாகப் பிரிவு 121 ஏ (Section 121-A, I. P. C.) இதை விளக்குகிறது. இந்தப் பிரிவின் படியும், சதியை நிறைவேற்ற ஏதாவது நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்பதல்ல. இந்தப் பிரிவுக்கு ஒரு விளக்கம் (Explanation) கொடுக்கப்பட்டிருக்கிறது. அது, "To constitute a conspiracy under the section; it is not necessary that any act or illegal omission shall take place in pursuance thereof." இந்தச் சட்டத்தை மேலும் விளக்குகையில், "No act or illegal omission is necessary for such a conspiracy, the mere agreement of two or more being sufficient." என்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்ட நபர்கள் அரசுக்கு (அல்லது மன்னனுக்கு) எதிரான ஒரு குற்றத்தைச் செய்ய மனத்தளவில் ஒப்புக் கொண்டபோதே, சதிக் குற்றம் (Criminal Conspiracy) முழுமை பெற்று விடுகிறது. இதைத் தான் கைகேயியின் வாயிலாகக் கம்பன் கூறுகிறுன் போலும்.

வழி வழி வந்த முறைப்படியும், மனு முதலிய விதி கர்த்தாக்கள் சொல்லிய சாத்திரச் சட்டப்படியும், தனக்குப் பின் கோசல நாட்டை ஆள இராமனுக்குத் தகுதியும் உரிமையும் உண்டு என்பதை அடிப்படையாகக் கொண்டு தசரதன் இராமனுக்கு முடிசூட்ட ஏற்பாடு செய்கிறுன். அதைத் தடுக்க, அல்லது அதை முறியடிக்க, மந்தரை திட்டம் தீட்டுகிறுள். எனவே மந்தரையின் செய்கை மன்னனுக்கும் அரசுக்கும் எதிராக எடுக்கப்பட்ட ஒன்ருகும். ஏதோ மேலெழுந்தவாரியாக, மனத்தில் கருக்கொள்ளாமல், மந்தரை இதைச் சொல்லிவிட்டாள். ஆகவே குற்றத்துக்கு வேண்டிய கெட்ட எண்ணம் அவள் மனத்தில் இல்லை என்ற வாதத்தை எதிர்பார்த்து, அதை மூறியடிக்கவே கம்பன் ''நினைந்தாய் ஆதி'' என்ற தொடரைப் பயன்படுத்தியிருக்கிறுன். பழைய விரோதம் காரணமாகச் சதித் திட்டத்தை நீண்ட நெடுங் காலமாக மனத்திலே சிந்தித்து வளர்த்து அதைச் செயலாற்ற முற்படுகிறுள் என்பது தொனிக்க ''நினைந்தாய்'' என்று கம்பன் சொல்லுகின்றுன்.

அடுத்து, மந்தரையின் கருத்தைக் கைகேயி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான், மந்தரையின் எண்ணம். இருவரும் உரையாடுகிறுர்கள். அந்த உரையாடலிலே கைகேயி தன் சம்மதத்தைத் தெரிவித்து விட்டாள். அவளும் அந்தச் சதிக் குற்றத்துக்கு ஆளாகிவிடுகிறுள். அப்படி கைகேயி தன் சம்மதத்தைத் தெரிவிக்காமல் மந்தரையின் கூற்றைக் கேட்டுக் கொண்டு மட்டும் இருந்தாலும், இவர்கள் உரையாடலை அயல் நின்று கேட்டவர்கள் மந்தரையின் கருத்தைக் கைகேயி ஏற்றுக் கொண்டதாகவே கருதுவார்கள். அப்படிக் கருதுபவர்கள், மந்தரை, கைகேயி இருவரையுமே அரசுக்கு எதிராகச் சதி செய்கிறுர்கள் என்று குற்றம் சாட்டச் சட்டம் இடமளிக்கிறது. இங்ஙனம் கம்பன் கவிதையை அமைத்து இருக்கிறுன். இதுதான் மந்தரை மீது சுமத்தும் குற்றம் போலும்!

## அன்பர்கள் கவனிக்கவும்

''திருக்கோயில்'' திங்கள் இதழுக்கு ஆய்வர்களிடத்திலும், உதவி ஆணையர் அலுவலகத்திலும், ஒரு மாதத்தின் இடை நாட்களில் சந்தா செலுத்திவிட்டு, உடனே மறுநாள் அல்லது மறு வாரத்திலேயே, இதழ்கள் கிடைக்கவில்லையே என்று சிலர் கடிதம் எழுதுகின்றனர்.

ஆய்வர்களிடத்திலும், உதவி ஆணையர் அலுவலகத்திலும், சந்தாத் தொகை செலுத்தப்பட்டதற்கு உரிய அறிக்கைகள், அங்கிருந்து முறையாகக் கிடைத்து, அவற்றைப் பதிவு செய்து கொண்ட பிறகே, இதழ்களை அனுப்புதல் இயலும். ஆதலின், இதிற் சிறிது கால தாமதம் நேருதல் இயல்பு.

மேலும், சில சமயங்களில் பிரதிகள் அச்சிட்டு முடிந்தபிறகு உறுப்பினர்கள் பலர் சேர்வதினுல், அம்மாதத்திலலேயே அவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொண்டு இதழ்கள் அனுப்ப இயலுவதில்லை. அடுத்த மாதத்தில் மேற்கொண்டு தேவைப்படும் இதழ்களை அதிகமாக அச்சிடச் செய்து, அதன் பின்னரே அப்புதிய உறுப்பினர்களுக்கு இதழ்களை அனுப்ப இயலும். இதனுலும் சில சமயங்களில் காலதாமதம் நேர வாய்ப்புள்ளது.

எந்த மாதம் முதல் இதழ் அனுப்பப்படுகின்றதோ, அதிலிருந்து 12 மாதங்களின் இதழ்கள் அனுப்புவதற்குக் கணக்கு வைத்துக் கொள்ளப்படும். எனவே, இங்ஙனம் நேரும் சிறுசிறு கால தாமதங்களை, அன்பர்கள் பொறுத்தருளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்.

—ஆசிரியர்.

# கம்பநாடன் கவிதை

தமிழ்விரகன்

**முன்னுரை :**

நம் தமிழ் மொழிக்கு எத்தனையோ பலப் பல சிறப்புக்கள் உண்டு. ஏராளமான இனிய நல்ல சிறந்த கவிதைகளைப் பெற்றிருத்தலும், அவை களுள் ஒன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற் பட்ட காலம்தொட்டே, தமிழிற் சிறந்துயர்ந்த கவிதை இலக்கியங்கள் தோன்றி வளர்ந்து வரு கின்றன. தமிழைப் போலப் பழமையும் பெருமை யும் வாய்ந்த, சிறந்த கவிதை இலக்கியங்களைப் பெற்றுள்ள மொழிகள், உலகில் ஒரு சிலவேயாகும். தமிழ் நூல்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு துறையில் தனிச் சிறப்புடையவை. பொதுவாக, எல்லா வகையான மக்களும், எளிய இனிய முறை யில் கவிதையின்பம் பெற்று மகிழ்தற்குத் துணை புரிவது, கம்ப இராமாயணம் என்னும் கவின்மிகு நூலே எனலாம்.

பெண்களிலெல்லாம் திருமகள் போலவும், விண்மீன்களிலெல்லாம் சூரியன் போலவும், உலகி லுள்ள மலைகளிலெல்லாம் இமயமலை போலவும், ஈடும் எடுப்புமின்றிச் சிறந்துயர்ந்து திகழ்வது கம்ப இராமாயணம். அதனைப் போன்ற கவின்மிக்க நூல் வேறொன்றினை நாம் காண்பது அரிது.

கொம்பனார் தமுள்மால் மார்பார்
　　கோதைபோல் எழில்கூர் மாதும்,
உம்பரார் கோள்கள் தம்முள்
　　உதயன்போல் ஒளிசால் கோளும்,
இம்பரார் மலைகள் தம்முள்
　　இமயம்போல் உயர்ந்த குன்றும்,
கம்பரா மாய ணம்போல்
　　கவின்மிகு நூலும் காணேம்!

கம்ப ராமாயணம், உலகப் பெருங் காப்பியங் களில் ஒன்று. உலகப் புகழ் பெற்ற இலியதம், ஈனிதம், துறக்கநீக்கம், மகாபாரதம் போன்ற பெருங் காப்பியங்களுடன் மட்டுமேயன்றித்தனக்கு மூலமுதல் நுலாகிய வான்மீகி இராமாயணத்துடன் கூட, அது சரிநிகர் சமானமாகத் திகழத்தகும் சிறப்புடையது.*

அதன்கண் கதையின் சிறப்பும், கருத்தின் வளமும், கவிதையின் எழிலும் ஒருங்கே பொருந்தி ஒளிர்கின்றன. எல்லாச் செல்வங்களையும் பெற்று, இவ்வுலகம் முழுவதையுமே அரசாட்சி புரிந்தாலும்; தேவருலகும் சென்று, அங்கே கற்பகமர நிழலில் அமர்ந்து எத்துணைப் போகங்களைத்தான் நுகர்ந் தாலும்; கற்றவர்களின் உள்ளத்தினைக் களிப் படையச் செய்வது கம்பநாடன் கவிதை ஒன்றே யாகும். அதனைப் போலக் கற்றவர்களின் உள் ளத்தைக் களிதுளும்பச் செய்யும் காப்பியம், தமிழில் ஒருவகையில் வேறு பிறிதில்லையெனக் கூறலாம்.

இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம்
　　எய்தி அரசாண் டிருந்தாலும்,
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
　　ஓங்கும் நீழல் இருந்தாலும்,
செம்பொன் மேரு அனையபுயத்
　　திறல்சேர் இராமன் திருக்கதையில்,
கம்ப நாடன் கவிதையிற்போற்
　　கற்றோர்க்கு இதயம் களியாதே

கதைப்போக்கு எங்ஙனமிருப்பினும், அதன் கவிதைப் போக்கு எத்தகையவரின் உள்ளத்தினை யும் கவர்ந்து கொள்ளைக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை. கம்பநாடரின் கவிதைச் சிறப்பு பயில் தொறும் நலம் பயக்கும் பண்புடையாளர் நட்புப் போல, நவில்தொறும் பெருகிவளரும் நூல் நயம் வாய்ந்து திகழ்வதாகும். ஆதலின், அது குறித்து நமது ''திருக்கோயில்'' திங்கள் இதழில், ஒரு சிறிது தொடர்ந்து ஆராய்ந்து, சுவைத்து இன்பம் நுகர முயல்வோமாக!

## ஆற்றுவெள்ளமும், கற்பனையூற்றுவெள்ளமும்

அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியின் கண் அமைந்துள்ள காப்பியங்கள் பல. அவைகள் பொருளியலால் பலவகைப்படினும், அமைப்பு முறையால் பெரிதும் ஒத்துக் காணப்படும். பெரும் பாலான தமிழ்க் காப்பியங்கள் ஆற்றுப் படலம், நாட்டுப் படலம், நகரப் படலம் என்பவற்றைத் தத்தம் தொடக்கத்தில் உடையவையாகத் திகழும்.

---

*" In the Ramayana of Kamban, the world possesses an epic which can challenge comparison not merely with the Iliad, and the Aeneid, the Paradise Lost and the Maha Bharatha, but even with its original itself, namely, the Ramayana of Valmiki."

—V.V.S. IYER

" The great epic of Milton and the equally great epic of Kamban have many points in common. Both poems immortalise the unconquerable spirit of the respective ages in which they were written. Both poems attempt ' to assert Eternal Providence and justify the ways of God to men.' In both some of the scenes are laid amidst the splendours of Heaven. In Milton's epic the Son of God offers to die in man's stead. In Kamban's epic the great God, who forgot His divinity on hearing the wails of a suffeing world walks in the midst of kings, out-castes and reduces as a man among men sharing their joys and sorrows. The sublime and the Heroic in literature naturally appeal to minds that are moulded on high principles and lofty ideals."

—SWAMI VIPULANANDAR

காப்பியங்கள் என்பன, அவ்வந் நாட்டின் வளத்தினையும், அதன்கண் வாழும் மக்கட் சமுதாய வாழ்க்கை இயலினையும், அவர்தம் கலை நாகரிகப் பண்பாடுகளையும் விளக்குவனவாகும். ஆதலின், அவற்றின் தொடக்கத்தில் இத்தகைய பகுதிகள், கவிஞர்களால் அமைக்கப்படுவது பொருத்தமும், சிறப்புமே ஆகும்.

அம்முறையில் கவியரசராகிய கம்பர், தாம் பாடப்புகும் காப்பியத்தில் முதற்கண் கோசல நாட்டிற் பாயும் ''சரயூ'' நதியின் சிறப்பினைப் புனைந்துரைத்துப் பாட முற்படுகின்றார்.

*(1)* திருநீறு அணிந்த சிவபெருமான் போல், மேகம் வெண்ணிறமாக முதற்கண் விளங்கியது. அது கடல்நீரைப் பருகிச் சூல் கொண்டபின், திருமாலைப் போலக் கருநிறம் அடைந்தது. மலைகளின் மீது சென்று தங்கி மழையைப் பொழிந்தது. தம்மிடம் உள்ளவற்றையெல்லாம் அள்ளி அள்ளி வழங்கும் வள்ளல்களைப் போல, அம் மேகங்கள் மழை பொழிந்தன.

*(2)* அறநெறி பிறழாது ஆட்சி புரிகின்ற அரசனின் புகழைப் போலவும், ஞான நெறியில் ஒழுகுகின்ற நான்மறையாளர்களுக்கு அளிக்கும் தானத்தின் பயனைப் போலவும், அவ்வெள்ளம் எங்கும் பரவிப் பெருகியது.

மானம் நேர்ந்து, அறம் நோக்கி, மனுநெறி
போன தண்குடை வேந்தன் புகழ்என,
ஞானம் முன்னிய நான்மறை யாளர்கைத்
தானம் என்னத், தழைத்தது நீத்தமே

*(3)* மலையின் தலையும் ஆகமும் தாளும் தழுவி, அதன்கண் உள்ள பொருள்களை எல்லாம் கவர்ந்து கொண்டு ஓடி வருவதனால், அவ்வெள்ளம், விலைமகளிரைப் போன்றது.

*(4)* மணி பொன் மயிற்பீலி யானைத்தந்தம், அகில் முத்து ஆகிய பல்வேறு வகையான பொருள்களையும் ஒருங்கு தொகுத்து ஈர்த்துக் கொண்டு வருதலால், அவ்வெள்ளமானது, பல நாட்டினின்று பல்வேறு பொருள்களை வருவித்துத் தொகுத்து விற்பனை செய்கின்ற வணிகர்களைப் போன்றது.

*(5)* பல்வேறு நிறமுடைய மலர்கள் அவற்றின் மகரந்தங்கள், யானையின் மதநீர், தேன் பொன் முதலியன பலவும், அவ்வெள்ளத்திற் கலந்து வரும் காட்சி, பல நிறங்களைக் கொண்ட வான வில்லைப் போன்று தோன்றியது.

*(6)* மலர்களைப் பறித்துக் கொண்டும், மரங்களை முறித்துக் கொண்டும், செடி, கொடி முதலியவற்றை ஈர்த்துக் கொண்டும், அவ்வெள்ளம் பெருகி வரும் தன்மை, இராமபிரானுக்காகச் சேது அணை கட்டிய வானர சேனைகளின் செயலை நினைவூட்டியது.

*(7)* ஈக்களும் வண்டுகளும் மொய்க்க, வரம்புகளைக் கடந்து, கிளர்ச்சி மிகுந்து, உள்ளே தெளிவு இல்லாமல், பொங்கி வரும் அவ்வெள்ளத்தின் செயல், கட்குடியர்களைப் போல் இருந்தது.

*(8)* பல விலங்குகளையும், யானைகளையும் ஈர்த்துக் கொண்டும், பேராரவாரம் புரிந்து கொண்டும், பல கொடிகளை ஏந்திக் கொண்டும், அவ் வெள்ளம் பாய்ந்து வருதல், அது கடலரசன்மீது படையெடுத்துச் செல்லுதல் போன்றிருந்தது.

*(9)* இங்ஙனம் பெருகிவரும் வெள்ளமானது கோசல நாட்டிற் பாய்ந்து, அதனைப் பெரிதும் வளம்படுத்துகின்றது. அந்நாட்டிலுள்ள உயிர்களுக்கெல்லாம் நீர் ஊட்டிக் காத்து வருவதனால், சரயூ நதியானது, தன் குழந்தைகளுக்குப் பாலூட்டி வளர்க்கும் தாயின் முலை போன்று தண்ணளியுடையதாக விளங்குகின்றது.

இரவி தன்குலத்து எண்ணில்பல் வேந்தர்தம்
புரவு நல்லொழுக் கின்படி பூண்டது,
சரயு என்பது தாய்முலை அன்னது, இவ்
உரவு நீர்நிலத்து ஓங்கும் உயிர்க்கெலாம்.

*(10)* அந்தச் சரயூ நதியின் வெள்ளமானது, குறிஞ்சி நிலத்து மகளிர் இடித்துச் செய்த நறுமணச் சுண்ணமும், குங்குமப்பூவும், கோட்டம் ஏலம் சந்தனம் சிந்துரம் (வெட்சிப்பூ), நரந்தம் நாகம் கொன்றை வேங்கை கோங்கு பச்சிலை கண்டில்வெண்ணெய் (ஒருவகைப் பூண்டு), மலைத்தேன் அகிற்கட்டை ஆகியவற்றைக் கொழித்துக் கொண்டு வருவதனால், மிக்க நறுமணம் கமழும்.

*(11)* சரயூ நதியின் வெள்ளம் பெருகுவதனால், அதன் மருங்கே உள்ள வேட்டுவச் சிற்றூர்கள் சிதைந்து நிலைகுலைகின்றன. வேட்டுவப் பெண்கள் பயந்து தம் வயிற்றிலடித்துக் கொண்டு தப்பி ஓட முயல்கின்றனர். இவ்வாற்றால் வில்லும் அம்பும் கொண்டு நாட்டு மக்களை நலியும் பகையரசர்களின் சேனையைப் போன்றுள்ளது, சரயூ நதி.

*(12)* தயிர் பால் வெண்ணெ நெய் ஆகியவற்றை உறியுடன் வாரியெடுத்து உட்கொண்டும், குருந்தம் மருதம் ஆகிய மரங்களை முறித்துத் தள்ளிக்கொண்டும், தன்பால் அகப்பட்டுக்கொண்ட இடைச்சியரின் ஆடைகளைக் கவர்ந்து கொண்டும் ஓடி வருவதால், சரயூ நதியானது, காளியன் என்னும் பாம்பின் மீது நடனம் செய்தருளிய கண்ணபிரானின் செயல்களை நினைவு படுத்துகின்றது.

செறிநறும் தயிரும் பாலும்,
வெண்ணெயும் தெளிந்த நெய்யும்,
உறியொடு வாரி யுண்டு,
குருந்தொடு மருதம் உந்தி,
மறிவிழி ஆயர் மாதர்
வனைதுகில் வாரும் நீரால்,
பொறிவரி அரவின் ஆடும்
புனிதனும் போலும் அன்றே

*(13)* கதவுகளை முட்டி மோதிக் கொண்டும், உழவர்களை ஆரவாரிக்கச் செய்தும், ஓடைகள் பொங்கவும், வண்டுகள் குடையவும், மணிகள் சிந்தவும், தூண்கள் முறியவும், அலைகளாகிய கைகளை வீசிக்கொண்டு, சரயூ நதியானது, ஒரு பெரிய மத யானையைப் போல, மருத நிலத்தில் போய்ச் சேர்ந்தது.

*(14)* முல்லை நிலத்தைக் குறிஞ்சி நிலமாக்கியும், மருத நிலத்தை முல்லை நிலமாக்கியும் நெய்தல் நிலத்தை மருத நிலமாக மாற்றியும் ஓடி வரும் சரயூ நதியின் வெள்ளத்தால், அவ்வந் நிலங்களி

லுள்ள பொருள்களெல்லாம், தத்தம் இடத்தை விட்டுப் பெயர்ந்து அலைந்து தடுமாறி நிற்கும் தன்மை, தத்தம் வினைப்பயனால் உயிர்கள் பல் வேறு பிறவிகளில் வெவ்வேறு இடங்களிலும் நிலை களிலும் சென்று பிறந்து தடுமாறி நிற்றலை ஒத் துள்ளது.

முல்லையைக் குறிஞ்சி யாக்கி,
மருதத்தை முல்லை யாக்கிப்,
புல்லிய நெய்தல் தன்னைப்
பொருவறு மருதம் ஆக்கி,
எல்லையில் பொருள்கள் எல்லாம்
இடைதடு மாறும் நீரால்,
செல்லுறு கதியிற் செல்லும்
வினைஎனச் சென்ற தன்றே

(15) இத்தகைய சரயூ நதியின் வெள்ளம், ஆங்காங்கே பலப்பல கால்வாய்களாகப் பிரிந்து பாயத் தலைப்படுகின்றது. அத்தன்மை, மனித குலம் ஒன்றே பல்வேறு நாடுகளில், பல்வேறுமொழி, நிறம் பழக்க வழக்க பண்பாடுகளால் பிரிந்து பாகுபட்டு நிற்றலைப் போலக் காணப்படுகின்றது.

(16) இமய மலையிற் பிறந்து, கடலிற் சென்று கலக்கும் சரயூ நதியின் வெள்ளம் ஒன்றே, ஏரி குளம் குட்டை கால்வாய் முதலியனவாகப் பல் வேறு பாகுபட்டுத் திகழ்தல், பரம்பொருள் ஒன்றே பல்வேறு சமயங்களால் வெவ்வேறு வகைகளில் போற்றப்படுவதைப் போல, விளங்குகின்றது.

கல்லிடைப் பிறந்து போந்து,
கடலிடைக் கலந்த நீத்தம்,
எல்லையில் மறைக ளாலும்
இயம்பரும் பொருள்ஈது என்னத்,
தொல்லையில் ஒன்றே யாகித்
துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும்
பொருளும்போற் பரந்த தன்றே

(17) சோலைகளிலும் காடுகளிலும் பொய்கை களிலும் தடாகங்களிலும் தோட்டங்களிலும் வயல் களிலுமெல்லாம் ஊடுருவிப் பாய்ந்து சென்று, சரயூ நதி, அவற்றைச் செழிப்படையச் செய் கின்றது. அத்தன்மை, மக்கள் தேவர் நரகர் விலங்கு என்னும் பல்வேறு நிலைகளிலுமுள்ள உடம்புகளில் எல்லாம் புகுந்து உலாவி, உயிரானது அவற்றைச் செழிப்பித்தலை ஒத்துள்ளது.

தாதுகு சோலை தோறும்,
சண்பகக் காடு தோறும்,
போதவிழ் பொய்கை தோறும்,
புதுமணத் தடங்கள் தோறும்,
மாதவி வேலிப் பூக
வனந்தொறும், வயல்கள் தோறும்,
ஓதிய உடம்பு தோறும்
உயிர்என, உலாய தன்றே

வெறும் ஆற்று வெள்ளத்தினைத் தம் பெரும் கற்பனையூற்று வெள்ளத்தால், கவியரசராகிய கம்பர் பெருமான், எப்படியெப்படியெல்லாம் அற் புதமாகப் பாடியருள்கின்றார் காண்மின்கள்! இந்திர சாலம் இயற்ற வல்லவன் (Magician) பலவகைச் செப்பிடி வித்தைகளைச் செய்து காட்டு தல் போல, நம் கவியரசராகிய கம்பர் பெருமான், தம் கற்பனையுணர்வின் மாட்சிமையினால், எங்ஙன மெல்லாம் பற்பல பொருட்சுவை நலங்கள் மிக்க கவிதை விந்தைகளைப் புரிந்தருள்கின்றார் என்பது, எண்ணி எண்ணி இன்புறுதற்குரியது!

—தொடரும்.

## ஒரு வேண்டுகோள்

''திருக்கோயில்'' திங்கள் இதழின் உறுப்பினர்கள், தங்கள் முகவரியை முழு விவரங்களுடன் திருத்தமாகத் தராமல், அரைகுறையாகத் தருவதனால் இதழ்கள் சேருவதில் தாமதமும், தவறுதலும் ஏற்பட நேருகின்றது. ஆதலின் தயவுசெய்து, திருக்கோயிலின் உறுப்பினர்கள், தங்களுடைய

1. முழுப் பெயர்
2. வீட்டு எண்.
3. தெருவின் பெயர்
4. ஊர் அல்லது அஞ்சல் அலுவலகப் பெயர்
5. ''பின் கோட்'' எண் (Pincode Number)
6. வட்டம்
7. மாவட்டம்

ஆகியவற்றை முழு விவரத்துடனும், தெளிவாகவும், தயவு செய்து தெரிவித்து உதவும்படி, அன்புடன் வேண்டிக் கொள்ளப்படுகின்றது.

—ஆசிரியர்.

158605

உ

திருச்சிற்றம்பலம்

# அருள்திரு மகுடேசுவரர், அருள்திரு வீரநாராயணப்பெருமாள் திருக்கோயில்

ஈரோடு வட்டம் **கொடுமுடி** கோவை மாவட்டம்.

திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் இத்தலம் கொங்கு நாட்டின் கண் உள்ள பாடல் பெற்ற ஏழு சிவத்தலங்களுள் ஒன்று. சமய குரவர் மூவராலும் பாடல் பெற்றது. அதிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் நமச்சிவாயத் திருப்பதிகம் பெற்றது. இந்த ஒரு காரணத்தினலேயே சேர சோழ பாண்டி மண்டலம், தொண்டை மண்டலம், ஈழ மண்டலம் முதலிய பல இடங்களிலுமுள்ள எல்லாச் சிவத்தலங்களிலும் மிகச் சிறப்புற்று விளங்குகின்றது.

**மூர்த்தி**—சுயம்பு மூர்த்தி அதாவது உளியால் செதுக்கப்படாமல் மேருமலையின் சிகரமே சிவலிங்க வடிவாய் விளங்குவது.

**தலம் :** இடத்தின் சிறப்பு. அகத்தியர், பரத்துவாசர் முதலிய தவமுனிவர்கள் வசித்த இடம்.

**தீர்த்தம் :** சீவ நதியாய்க் கோடைக் காலத்திலும் நீர் வற்ருமல் ஓடிக் கொண்டிருக்கும் காவிரியும், கோயிலுக்குள்ளிருக்கும் பிரம தீர்த்தம், தேவ தீர்த்தம், பரத்துவாச தீர்த்தம் என்கின்ற தீர்த்தங்களும், தீமையைப் போக்கி நன்மையைச் செய்யும் நீர் நிலைகளும் ஆகும். இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்பும் வாய்ந்தது.

புகைவண்டி நிலையமும், பஸ் நிலையமும் அருகில் உள்ளதால் தரிசனர்த்திகள் வந்து தரிசித்துப் போவதற்கு வசதியாக இருக்கிறது.

சுற்றுலாப் பயணிகள் திரள் திரளாக வருகின்றனர்கள். அவர்கள் உணவருந்த இட வசதியும் குடிநீர்க் குழாய் வசதியும் தேவஸ்தானத்தில் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சேவார்த்திகளுக்குப் பல வசதிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

திருக்கோயில் அண்மையில் திருப்பணி செய்யப்பட்டு 1-7-1974-ஆம் நாள் சிறப்புறக் குடமுழுக்கு விழா நடத்தி வைக்கப்பட்டது.

**விழாக்கள் :** சித்திரைத் தேர்ப் பெருந்திருவிழா, சித்திரை மாதம் வருஷப் பிறப்பு, ஆடிப் பதினெட்டு, விநாயகசதுர்த்தி, ஆவணி மூலம், பிட்டுத் திருநாள், நவராத்திரி, கந்தர் சஷ்டி, அபிஷேகம், திருக்கார்த்திகைத் தீப விழா, சங்காபிஷேகம், தனுர் மாத பூசை, தைச் சங்கராந்தி, பங்குனி உத்திரம், மாதந்தோறும் கார்த்திகை விழாவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

**விக்கிரகங்கள் :** நடராஜர், குஞ்சிததாண்டவர், உமா மகேசுவரர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், திரிபுரசம்மாரர், பிட்சாடனர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சண்டேசுவரர், வீரபாகுத் தேவர், கண்ணப்பர், திருநீலகண்டர் அம்மையாருடன் சூல தேவர், குழந்தையுருவில் சம்பந்தர் ஆகியவைகள்.

கோவிலுக்கு முன்னல் முத்தி விநாயகர்.

**மூலவர்:** மகுடேசுவரர், தட்சிணமூர்த்தி, ஆறுமுக சுவாமி, நால்வர், 63 நாயன்மார், சேக்கிழார், சண்டேசுவரர், காவிரிகண்ட விநாயகர், அகத்தீசுவரர், கஜலட்சுமி, வடிவுடையம்மன், வல்லபை விநாயகர், சோழீச்சுரர், சரஸ்வதி, சப்த மாதர்கள், பிரம்மா, சனீஸ்வரன், காலபைரவர், நவக்கிரகம் இவை முக்கியமானவை.

இத்துடன் வீரநாராயணப் பெருமாள் பள்ளி கொண்ட திருக்கோலத்திலும், திருமங்கை நாச்சியார், வீர ஆஞ்சநேயரும் இங்கு எழுந்தருளியுள்ளனர்.

ஒவ்வோராண்டிலும் ஆவணி மாதம் 17,18,19 ஆகிய தேதிகளிலும், பங்குனி மாதம் 20, 21, 22 தேதிகளிலும் சூரிய ஒளி சுவாமி, அம்மன் திருவுருவங்களில் விழுகின்றன. இதனைச் சூரிய பூசை என்கிறார்கள்.

பங்குனி மாதம் இங்கே காவடி முத்திரித்து பழனி செல்லும் காட்சி காணக் கண் கொள்ளாததும் தனிச் சிறப்பும் உடையதாகும்.

அறங்காவலர் குழு

கே. பி. தன்னுசி, (தலைவர்), கே. ஆர் பாலசுப்பிரமணியம்,

கே. எம் சண்முகம், கே. எம். சுப்பன்,

பி. எம். குழந்தைவேலு, பி.எஸ்.சி., பி.ஏ.,

வே. இரா. சம்பத்குமார், பி.ஏ.,

செயல் அலுவலர்.

# பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்!

- கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள் !
- புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது !
- சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ் விருந்து !
- மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.

---


**இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!**

---


பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்

**செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600009**



நெடுங்கல் மன்றம்



எழுநிலை மாடம்




வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், [illegible] சென்னை-600002